# கதீஜா பின்த் குவைலித் (ரலி)

இஸ்லாத்தின் மீது அவர்களுக்கு இருந்த ஈடுபாடு, உறுதியான நம்பிக்கை, இன்னும் அவரது அரும்பெருங் குணங்கள் இவையனைத்தும் அல்லாஹ்வின் அளப்பெரும் அருளுக்கும், இன்னும் வான தூதர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக வாழ்த்துச் செய்தியையும் பெற்றுத் தந்தது.

மிகவும் வசதியான, கௌரவமிக்க குடும்பத்தில் பிறந்திருந்த அருமைத் தாயவர்கள் இயற்கையிலேயே இறைநம்பிக்கை, வாய்மை, பண்பாடுகள், அருங்குணங்கள் இன்னும் கொடைத் தன்மை மிக்கவர்களாக வளர்ந்து வந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த தூதை முதன் முதலாக ஏற்று இறைவிசுவாசம் கொண்டு, அதனைத் தனது வாழ்க்கை நெறியாகவும் ஏற்றுக் கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள்.

இன்னும் இறைவன் தனது திருத்தூதர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக இவர்களுக்கு தனது ஸலாமைத் தெரிவிக்கும் அளவுக்கு இறைவனது உவப்புக்கு உரிய நங்கையாகத் திகழ்ந்தார்கள் அன்னை கதீஜா (ரலி) அவர்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முதல் மனைவியும், அதனை விட இவர்கள் உயிரோடு இருந்த காலம் வரைக்கும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இன்னொரு மனைவியைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் 24 ஆண்டுகள் அன்போடும், பாசத்தோடும் குடும்பம் நடத்தினார்கள். இன்னும் இவர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில், கதீஜா (ரலி) அவர்களது வீட்டில் வைத்து, வானவ தூதர் ஜிப்ரீல் (அலை) கொண்டு வந்த தூதை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அன்னை அவர்கள் வசதியான குடும்பத்தில் பிறந்து, வசதியான வாழ்வுக்குச் சொந்தக்காரராக இருந்த போதிலும், மக்கத்துக் குறைஷிகள் இறைத்தூதர் (ஸல்) அவர்களையும், இன்னும் அவர்கள் கொண்டு வந்த தூதைச் சுமந்த நெஞ்சங்களையும், அபூதாலிப் கணவாய்க்கு அனுப்பி வைத்து, சமூக பகிஷ்காரம் செய்த பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்களது வலக்கரமாக இருந்து செயல்பட்டு, இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் தோளோடு தோள் கொடுத்து நின்றார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்த நாள் முதல், அவர்களது தூதை ஏற்ற நாள் முதல் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் பல இன்னல்களையும், கஷ்டங்களையும் சுமந்த போதிலும் தளராத அந்த நெஞ்சம், இறைவனது அழைப்பை ஏற்று - மரணத்தைத் தழுவிய பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்களது இதயம் சற்று நின்று தான் போனது. தணலில் விழுந்த புழுவாய் துடித்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், இறைவனது விதியை ஒப்புக் கொண்டவர்களாக, தானே முன் நின்று தனது பிரிய மனைவிக்கு மண்ணறையை முன்னின்று தோண்டினார்கள், தானே குழிக்குள் இறங்கி குழியைச் சரி செய்தார்கள், இன்னும் தானே அவர்களது உடலை வாங்கி மண்ணறைக்குள் வைத்தார்கள். இஸ்லாத்தின் வெளிச்சப் புள்ளிகள் மக்காவைத் தரிசித்த அந்த ஆரம்ப நாட்களில், அதனைக் கை கொண்டு மறைக்கப் பார்த்த குறைஷிகள், அதனை வாய் கொண்டு அணைக்க முற்பட்ட போது, அன்னை அவர்கள் தோள் கொடுத்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் துவண்டு விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

இன்னும் சொர்க்கத்துப் பெண்களின் தலைவி எனப் போற்றப்படும் ஃபாத்திமா (ரலி) அவர்களைப் பெற்றெடுத்த பாக்கியமிக்க பெண்மணியும் கூட. இன்னும் சொர்க்கத்தின் வாச மலர்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்களால் மணம் பரப்பப்பட்ட ஹஸன் (ரலி) மற்றும் ஹுஸைன் (ரலி) ஆகியோர்களின் தாயாரைப் பெற்ற பாக்கியம் பெற்றவருமாவார்கள்.

அப்துல்லா இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

ஒருமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தரையில் நான்கு கோடுகளை வரைந்து, இந்தக் கோடுகளின் அர்த்தம் என்னவென்று தெரியுமா? என்று தனது தோழர்களைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்கு, இறைவனும், இறைத்தூதரும் தான் அறிவார்கள் என்று தோழர்கள் பதில் கூறினார்கள். இந்தக் கோடுகள் இந்த உலகின் மிகச் சிறந்த நான்கு பெண்மணிகளைக் குறிக்கக் கூடியதாகும். அவர்களாவன : கதீஜா பின்த் குவைலித், ஃபாத்திமா பின்த் முஹம்மத், மர்யம் பின்த் இம்ரான், ஈஸா (அலை) அவர்களின் தாயாரான மர்யம் (அலை) மற்றும் ஆஸியா பின்த் மஸாஹிம் (பிர்அவ்னின் மனைவி) என்று பதில் கூறினார்கள்.

முதல் நபர் இறைத்தூது சுமந்து வந்த நெஞ்சுக்கு ஆறுதல் அளித்ததோடு மட்டுமல்லாமல், இறைவிசுவாசத்தில் உலகிலுள்ளோருக்கெல்லாம் முதன்மையாக விசுவாசம் கொண்டு விட்ட கதீஜா (ரலி) அவர்களும், இரண்டாவதாக, சொர்க்கத்துப் பெண்களின் தலைவி என இறைத்தூதர் (ஸல்) அவர்களால் நன்மாராயம் கூறப்பட்ட - இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அருமை மகளார் ஃபாத்திமா (ரலி) அவர்களும், மூன்றாவதாக இறைவனுடைய குன் - ஆகுக என்ற வார்த்தையால் இறைத்தூதர் ஈஸா (அலை) அவர்களை ஈன்றெடுத்த கன்னிப் பெண்ணான மர்யம் (அலை) அவர்களும், நான்காவதாக, ஃபிர்அவ்ன் தன்னுடைய ஆட்சி நிலைக்க வேண்டுமென்றால் பிறக்கும் அனைத்து ஆண் குழந்தைகளையும் உயிரோடு விட்டு வைக்கக் கூடாது என்று சபதமெடுத்து, பிறந்த ஆண் குழந்தைகளைக் கொன்று குவித்துக் கொண்டிருந்த பொழுது, மூஸா (அலை) அவர்களை பிர்அவ்னின் சம்மதத்தோடு தன்னுடைய அரண்மனையில் வைத்து வளர்த்ததோடு மட்டுமல்லாமல், நேர்வழி பெற்ற பெண்மணியாக இறைவிசுவாசத்தோடு வாழ்ந்து காட்டிய ஆஸியா (அலை) அவர்களும் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் போட்டுக் காட்டிய கோட்டிற்கான, அந்த நான்கு பெண்மணிகளுமாவார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

எப்பொழுதெல்லாம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்களைப் பற்றிப் பேசுகின்றார்களோ, அப்பொதெல்லாம் அவர்களை மிகவும் உயர்த்தியே பேசுவார்கள். ஒருநாள் மிகவும் இளமையான மனைவியாக இறைவன் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு என்னை அளித்திருக்க, கதீஜா (ரலி) அவர்களை இவ்வளவு உயர்வாகப் பேசுகின்றார்களே என பெண்களுக்கே உரிய அந்த குணத்தினால், ஆயிஷா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம், அந்த மனைவியிடம் தாங்கள் என்ன தான் கண்டீர்கள் என்ற பொருள்படக் கேட்டு விடுகின்றார்கள்.

இந்தக் கேள்வி இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சங்கடப்பட வைத்தது, இருப்பினும் அவர்களுக்கே உரித்தான அந்த சகிப்புத் தன்மை காரணமாக அதனைப் பெரிதுபடுத்தாமல், ஆயிஷா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு பதிலளித்தார்கள் :

அவளை (கதீஜா) விட மிகச் சிறந்த மனைவியை நான் கண்டதில்லை. என்னுடைய குடும்பமும், என்னுடைய கோத்திரமும் என்னை விசுவாசிக்க மறுத்த பொழுது, யாருமே என்னுடைய தூதை ஏற்றுக் கொள்ள முன்வராத போது என்னையும் நான் கொண்டு வந்த தூதையும் முதன் முதலாக விசுவாசித்தார். அல்லாஹ் அனுப்பிய தூதனாக என்னையும், என்னை தூதனாக அனுப்பி வைத்த அல்லாஹ்வையும் அவர் விசுவாசித்தார். அந்த விசுவாசத்தின் காரணமாக தன்னுடைய அனைத்து சொத்துக்களையும் இழந்தார். என்னையும் நான் கொண்டு வந்த தூதையும் ஒரு சேர அணைத்து விட முழு உலகமும் துடித்துக் கொண்டிருந்த பொழுது, தனது உடலாலும், பொருளாலும் என்னையும், நான் கொண்டு வந்த தூதையும் அவள் காப்பாற்ற உதவினாள். இன்னும் அவள்

மூலகமாகத் தான் இறைவன் எனக்கு குழந்தைப் பாக்கியத்தையும் நிரப்பமாக வழங்கி அருளினான் என்று கூறினார்கள்.

மக்காவில் கி.பி. 556 ஆம் ஆண்டு ஃபாத்திமா பின்த் ஸயீத் மற்றும் குவைலித் பின் அஸத் என்பவருக்கும் மகளாக கதீஜா (ரலி) அவர்கள் பிறந்தார்கள். இவருடைய தந்தை குவைலித் பின் அஸத் மக்கத்துக் குறைஷிகளின் கோத்திரத்தில் மிகச் சிறப்புமிக்க கோத்திரத்தவராவார். மிகச் சிறந்த வணிகராகத் திகழ்ந்த குவைலித் பின் அஸத் அவர்கள், அன்றைய அரேபியாவில் மிகவும் அறியப்பட்ட ஃபுஜ்ஜார் என்ற போரின் போது கொல்லப்பட்டார்கள். மிகவும் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்த கதீஜா (ரலி) அவர்கள் மிகவும் வசதியான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள்.

அபூ ஹாலா மலக் பின் நபஷ் பின் ஸர்ராஹ் பின் அத்தமீமி என்பவரைத் தனது முதல் கணவராகத் திருமணம் செய்தார்கள். தனது கணவர் மிகப் பெரும் வணிகராகத் திகழ வேண்டும் என்ற ஆசை கொண்ட கதீஜா (ரலி) அவர்கள், தனது செல்வத்தை தனது கணவரின் வாணிபத்தில் முதலீடு செய்தார்கள். ஆனால் குறுகிய காலத்திலேயே தமீமி அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். முதல் கணவர் இறந்ததன் பின் அதீக் பின் அய்த் பின் அப்துல்லா அல் மக்சூமி என்பவரைத் திருமணம் செய்தார்கள், ஆனால் இவர்களது திருமணம் வெகு விரைவிலேயே முறிந்து விட்டது. இந்த இரண்டாவது திருமணத்தின் மூலம் கதீஜா (ரலி) அவர்கள், ஹிந்தா என்றொரு பெண் குழந்தையை மகவாகப் பெற்றார்கள். இந்த இரண்டாவது திருமண முறிவுக்குப் பின் தனது குழந்தையை வளர்த்தெடுப்பதிலும், மேலும் தனது வியாபாரத்தைப் பெருக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார்கள். வியாபாரத்தில் இவர்கள் காட்டிய திறமை, குறைஷிகளிலேயே மிகச் சிறந்த வியாபாரியாக இவரைத் திகழச் செய்தது. இவர் தனது வியாபாரத்தில் திறமைமிக்க, கடின உழைப்பு மற்றும் நேர்மையான வேலையாட்களை நியமித்து, அதன் மூலம் தனது வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தி வந்தார். இன்றைக்கு இருப்பது போல தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில், தனக்குப் பதிலாக தொலை தூர நாடுகளுக்குச் சென்று தனது பொருட்களை வாணிபம் செய்து விட்டு வர, நாணயமான திறமையான தொழிலாளர்களை நம்பி இருக்க வேண்டியதிருந்தது. இவர் தனது பொருட்களை மக்காவிலிருந்து சிரியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விட்டு, அங்கிருந்து மக்காவிற்கு சில பொருட்களை இறக்குமதி செய்து வந்தார்கள். ஏனெனில் மக்கா என்பது உலக வணிகச் சந்தையின் மார்பிடமாகத் திகழ்ந்து வந்ததும் ஒரு காரணமாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நேர்மையான நாணயமான நற்குணங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட கதீஜா (ரலி) அவர்கள், தனது வியாபாரத்தை ஏற்று நடத்துவதற்கு சம்பள அடிப்படையில் வேலைக்கு வந்து சேருமாறு அழைப்பு விடுத்தார்கள். கதீஜா (ரலி) அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், கதீஜா (ரலி) அவர்களின் நன்னம்பிக்கையைப் பெற்ற அடிமையான மைஸரா என்பவருடன் வியாபார நிமித்தமாக வெளிநாடுகளுக்குச் சென்றார்கள்.

இந்த வியாபாரப் பயணத்தில் கதீஜா (ரலி) அவர்களுக்கு மிகப் பெரிய இலபாம் கிடைத்ததோடு, மைஸராவுக்குச் சொல்ல முடியாத அதிசயத்தக்க சில நிகழ்வுகளை நேரில் காணும் வாய்ப்பும் கிடைத்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட நற்குணங்கள், நம்பிக்கை, நாணயம், ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல், கொடுக்கல் வாங்கலில் காணப்பட்ட நாணயம், மற்றும் வியாபாரத் திறமை ஆகியவை யாவும் மைஸராவை அதிசயிக்க வைத்தன. வியாபார விஷயமாக சிரியா சென்று விட்டு திரும்பி வரும் வழியில் ஓய்வுக்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒரு மர நிழலில் ஓய்வெடுக்க ஆரம்பித்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அந்த குறிப்பிட்ட மர நிழலில் ஓய்வெடுப்பதைப் பார்த்த, ஒரு யூதத் துறவி, மைஸராவிடம் யார் இந்த மனிதர்? என்று கேட்டார்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குணநலன்கள், வியாபாரத் திறமைகள் ஆகிய அனைத்தையும் பற்றி அந்த யூத துறவியிடம் மைஸரா விவரித்தார்கள். இவர் வருங்காலத்தில் இறைத்தூதராக வருவதற்கான அறிகுறிகள் இவரிடம் இருக்கின்றன, இந்தக் குறிப்பிட்ட மரத்தில் இறைத்தூதர்களைத் தவிர வேறு யாரும் ஓய்வெடுக்க மாட்டார்கள் என்று அவர் கூறினார்.

இன்னும் சில அறிவிப்புகளின்படி, கடுமையான வெயிலின் பொழுது, வெயிலின் வெப்பத்திலிருந்து இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, இரண்டு வானவர்கள் மேகத்தைத் தாங்கிப் பிடித்த வண்ணம் தலைக்கு மேல், இறைத்தூதர் (ஸல்) உடன் வந்து கொண்டிருப்பதைக் கண்டிருக்கின்றார். இந்தக் காட்சிகளை எல்லாம் கண்ணாறப் பார்த்த மைஸரா, இவரைத் தனது உற்ற நண்பராக ஆக்கிக் கொள்வதன் மூலம், மிகச் சிறந்த நல்வாய்ப்புகளையும், ஆதாயங்களையும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தார்.

நாடு திரும்பியவுடன் முதல் வேலையாக, தன்னுடைய எஜமானியான கதீஜா (ரலி) அவர்களிடம் சென்று பயண நெடுகிலும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை மைஸரா விவரிக்க ஆரம்பித்து விட்டார். இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பற்றி மைஸரா மூலம் அறிந்து கொண்ட கதீஜா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணமுடித்துக் கொள்ள ஆவல் கொண்டார்கள்.

ஆனால் தனது ஆசையை எவ்வாறு வெளிப்படுத்துவது? என்ற தயக்கம் அவர்களிடம் காணப்பட்டது. இன்னும் குறைஷிக் கோத்திரங்களில் மிகப் பெரும் கோத்திரத்தவர்கள் பலர் தன்னை மணமுடிக்க விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், அவை அத்தனையையும் கதீஜா (ரலி) அவர்கள் மறுத்தொதுக்கி இருந்த அந்த நேரத்தில், இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் தான் மணமுடிக்கத் தயாராக இருப்பது பற்றி தான் எவ்வாறு வெளிப்படுத்துவது என்ற தயக்கமும் இருந்தது. இன்னும் தனது குலத்தவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்? இன்னும் தனது குடும்பத்தவர்கள் இதற்கு என்ன கூறுவார்கள்? இளமைத்துடிப்போடு உள்ள, இன்னும் மணமுடித்துக் கொள்ளாத முஹம்மது அவர்கள் தனது வேண்டுகோளை ஏற்பாரா? என்பன போன்ற கேள்விகள் அவரது மனப்பரப்பில் வந்து வந்து அலைமோதின.

கடுமையான மனக்குழப்பத்தில் ஆழ்ந்திருந்த அன்னையவர்கள், சூரியன் தனது வீட்டு முற்றத்தில் இறங்கி வந்து தனது வீட்டையே வெளிச்சமாக்கி கொண்டிருப்பதாகக் கனவு கண்டார்கள். தான் கண்ட கனவிற்கு அர்த்தம் சொல்லுமாறு, தனது ஒன்று விட்ட சகோதரர் வரகா பின் நவ்பல் என்பவரிடம் கேட்கின்றார்கள். தௌராத் மற்றும் இன்ஜீல் ஆகிய வேதங்களைக் கற்றவரும், சிறந்த ஞானமிக்கவரும், கனவுகளுக்கு விளக்கம் சொல்லுமளவுக்கு அறிவு ஞானம் படைத்த, கண்தெரியாத அந்த மனிதர் கதீஜா (ரலி) அவர்களைப் பார்த்து புன்னகைத்து விட்டு, கவலைப்பட வேண்டாம், இது நன்மாராயமான கனவாகும் என்று கூறினார்கள். சூரியன் வீட்டு முற்றத்தில் இறங்குவது என்பது இறைத்தூதர் ஒருவரது வருகையைப் பற்றிய தௌராத் மற்றும் இன்ஜீல் ஆகிய வேதங்களில் காணப்படும் முன்னறிவிப்பு நிறைவேற இருப்பதனைக் குறிக்கக் கூடியதாகும் என்று அவர், கதீஜா (ரலி) அவர்களின் கனவுக்கு விளக்கமளித்தார்.

வரகா பின் நவ்பல் அவர்களைச் சந்தித்து விட்டு வந்த பின், இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் தான் மணமுடிக்க வேண்டும் என்பதில் உறுதியான முடிவை எடுத்தார்கள். ஆனால் எவ்வாறு முஹம்மது அவர்களை அணுகுவது என்பதில் ஒரு முடிவுக்கு வர இயலாத குழப்பான நிலையிலேயே இருந்தார்கள். கதீஜா (ரலி) அவர்களின் தோழியான நஃபீஸா பின்த் மன்பஃ அவர்கள், கதீஜா (ரலி) அவர்களின் இதயத்துடிப்பை அறிந்து, அதற்கு உதவ முன்வந்தார்கள், இன்னும் முஹம்மது (ஸல்) அவர்களிடம் தூது போகவும் முடிவெடுத்தார்கள்.

மிகப் பெரிய பீடிகை எதனையும் போடாமல், மிக எளிதான முறையில் நான் உங்களிடம் தனிப்பட்ட முறையில் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும் என்று முஹம்மது (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்த நஃபீஸா அவர்கள், முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து அதற்கு எதிர்ப்பேதும் இல்லாது சம்மதத்திற்கான அறிகுறிகள் கிடைத்தவுடன், நீங்கள் ஏன் இன்னும் திருமணம் முடிக்காமல் இருக்கின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு முஹம்மது (ஸல்) அவர்கள் திருமணம் முடிக்கும் அளவுக்கு என்னுடைய பொருளாதார நிலை இல்லை என்று பதிலளித்தார்கள்.

பொருளாதாரத்தைப் பற்றிப் பிரச்னையில்லை, குறைஷிக் குலத்தில் மிகப் பெரும் குலத்தில் பிறந்த வசதியான இன்னும் தங்களையே மணமுடிக்க வேண்டும் என்று விரும்புகின்ற அழகானதொரு பெண்ணை நீங்கள் மணமுடிக்க விரும்புகின்றீர்களா? என்று நபீஸா அவர்கள் கேட்டார்கள்.

நீங்கள் எந்தப் பெண்ணைப் பற்றிக் கூறுகின்றீர்கள்? என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வினாத் தொடுத்தார்கள். நஃபீஸா அவர்கள் கூறிய அடையாளங்களை வைத்து, அவர் என்னை மணக்க விருப்பம் தெரிவித்தால் நான் அவரை மணந்து கொள்ள விரும்புவதாகத் தன்னுடைய விருப்பத்தை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தெரிவித்து, மணமுடிக்க சம்மதம் தெரிவித்தார்கள். இதனைக் கேள்விப்பட்ட கதீஜா (ரலி) அவர்கள் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். அப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு 25 வயதும், கதீஜா (ரலி) அவர்களுக்கு 40 வயதும் (இன்னும் சில அறிவுப்புகளின்படி 28 வயதும்) ஆகியிருந்தது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சிறிய தகப்பனார்களான ஹம்ஸா (ரலி) அவர்களும், அபூதாலிப் அவர்களும் கதீஜா (ரலி) அவர்களின் சிறிய தகப்பனாரான உமர் பின் அஸத் அவர்களை அனுகி திருமண விஷயம் பற்றிக் கலந்தாலோசனை செய்தார்கள். திருமண ஒப்பந்தங்கள் போடப்பட்டு தேதியும் நிச்சயிக்கப்பட்டது. இரு குடும்பத்தவர்களும் நிச்சயித்த அந்த நாளில் சுற்றமும் நட்பும் புடை சூழ திருமணம் நடந்தேறியது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இளமைப் பருவத்தின் பொழுது அவர்களுக்குப் பாலூட்டிய செவிலித் தாயான ஹலீமா ஸஃதிய்யா அவர்கள் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார்கள். தனது கிராமத்திலிருந்து திருமணத்திற்காக மக்கா வந்த ஹலீமா அவர்களுக்கு, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு இளமையில் பாலூட்டி வளர்த்த அந்தத் தாய்க்கு வீட்டுச் சாமான்களையும், ஒட்டகம் மற்றும் 40 ஆடுகளைப் பரிசாக அவர்களுக்குக் கொடுத்து அவர்களை கௌரவப்படுத்தி அனுப்பி வைத்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) மற்றும் கதீஜா (ரலி) தம்பதிகளுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன. காசிம், அப்துல்லா என்ற இரண்டு மகன்களும் மற்றும் ஸைனப், ருக்கையா, உம்மு குல்தூம் மற்றும் ஃபாத்திமா ஆகிய மகள்களையும் கதீஜா (ரலி) அவர்கள் பெற்றெடுத்தார்கள். அருமையான மனைவி, வசந்தமான வாழ்க்கை, குதூகலிக்க வைக்கும் குழந்தைகள் இத்தனை இருந்தும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எதனையோ இழந்தவர்கள் போல இருந்தார்கள், வருடத்திற்கு ஒரு முறை, ஒரு மாதம் முழுவதும் ஹிரா என்னும் குகைக்குச் சென்று தவமிருக்கலானார்கள்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் இனம் புரியாத உருவம் ஒன்று கைகளினால் தன்னை இறுக அணைத்து அழுத்திப் பிடிப்பதை உணர்ந்தார்கள். பின் தன்னுடைய பிடியைத் தளர்த்திய அந்த உருவம், எங்கே ஓதுவீராக என்று கூறியது. அதற்கு, நான் படிப்பறியாதவன் - எனக்கு ஓதத் தெரியாது என்று பதில் கூறினார்கள். இருந்தும் வந்த அந்த உருவம் மீண்டும் இவரைக் கட்டிப் பிடித்து இப்பொழுது ஓதுவீராக! என்று கூறியதும், மீண்டும் எனக்கு ஓதத் தெரியாதே! என்றார்கள். இவ்வாறு பல முறை

நிகழ்ந்த பின், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் திருமறைக்குர்ஆனின் ஆரம்ப வசனங்களான இக்ரஃ பிஸ்மி ரப்பிகல்லதி கலக் என்ற வசனத்தை ஓத ஆரம்பித்தார்கள்.

(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக. 'அலக்' என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக! உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். (96:1-

பின்பு அந்த உருவம் மறைந்து விட்டது. எதிர்பாராத இந்த நிகழ்ச்சியின் காரணமாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பயந்து நடுநடுங்கியவர்களாக, வியர்த்து வழிகின்ற நிலையில், தன்னுடைய வீட்டை அடைந்து தன்னுடைய துணைவியார் கதீஜா (ரலி) அவர்களை அழைத்து என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள் என்று கூறிகின்றார்கள். சற்று நேரம் அவர்கள் இளைப்பாறியதன் பின்பு சகஜ நிலைக்கு நிலைக்கு வருகின்றார்கள். அதன் பின்பு என்னுடைய உயிருக்கு ஆபத்து வந்து விடுமோ என நான் அஞ்சுகின்றேன் என்று கூறியவாறு, தனக்கு நேர்ந்தவைகளை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது துணைவியார் கதீஜா (ரலி) அவர்களிடம் விவரிக்கின்றார்கள்.

நீங்கள் ஏழைகளுக்கு உதவுகின்றீர்கள், பிறர் மீது அன்பும் கருணையும் உடையவர்களாக இருக்கின்றீர்கள், இந்த நிலையில் எந்த வித தீங்குகளும் உங்களை அணுகாமல் இறைவன் உங்களைப் பாதுகாப்பான், நீங்கள் பயப்பட வேண்டாம் என ஆறுதல் கூறுகின்றார்கள்.

கதீஜா (ரலி) அவர்களின் இந்த விவேகமான ஆறுதலான வார்த்தைகள் இறைத்தூதர் (ஸல்) அவர்களது மனதிற்கு தெம்பையும் தைரியத்தையும் வரவழைத்துக் கொடுத்ததோடு, மனதளவில் அவர்கள் மிகப் பெரிய தாக்கத்தை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தது.

பின்பு இறைத்தூதர் (ஸல்) அவர்களை தனது சிறிய தகப்பனார் வரகா பின் நவ்பல் அவர்களிடம் அழைத்துக் கொண்டு சென்று, நடந்த விபரங்களை விவரித்தவுடன், தௌர் குகையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சந்தித்து விட்டுச் சென்றது, ஜிப்ரீல் (அலை) அவர்கள் தாம் என்பதை உணர்ந்து கொண்டு, மூஸா (அலை) அவர்களைச் சந்தித்த அதே தூதர் தான் முஹம்மது (ஸல்) அவர்களையும் சந்தித்துள்ளார்கள் என்று கூறுகின்றார்.

தௌராத் மற்றும் இன்ஜீலில் தனக்கிருந்த புலமையின் காரணமாக, முதுமையின் காரணமாக நான் இறந்து விடாது உயிருடன் இருந்தால், பின் வரும் காலத்தில் இந்த மக்கத்து மக்கள் தங்களை இந்த நாட்டை விட்டே வெளியேற்றுவதை நான் காணக் கூடியவனாக இருப்பேன் என்று வரகா பின் நவ்பல் கூறுகின்றார். அப்போது, என்னையா இந்த மக்களை இந்த நாட்டை விட்டு வெளியேற்றுவார்கள் என்று ஆச்சரியம் கலந்த தொனியில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கேட்ட பொழுது, ஆம்! இது ஒரு நிதர்சனமான உண்மையாகும். தங்களுக்குள் இருந்து வெளியாகும் எந்த இறைத்தூதரையும் அவரது சொந்த மக்கள் உடனே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இன்னும் எந்த இறைத்தூதரும் அவருடைய சொந்த நிலத்தில் கண்ணியப்படுத்தப்பட மாட்டார்கள். இன்னும் அந்த நேரத்தில் நான் வாழ்ந்தால், தங்களுக்கு நான் உதவக் கூடியவனாக இருப்பேன் என்றும் வரகா பின் நவ்பல் அவர்கள் கூறுகின்றார்கள். மேலும் அவர் கூறியவைகள் உண்மையாக இருந்தால், வேதங்களில் முன்னறிவிக்கப்பட்டவரும் இன்னும் உங்களுடைய கணவராகிய இவர் இறைத்தூதர் தான் என்றும் வரகா பின் நவ்பல் சாட்சியம் கூறினார்.

இறைத்தூதர் (ஸல்) மற்றும் கதீஜா (ரலி) அவர்களின் மணவாழ்க்கையின் விளைவாக ஆறு அழகான குழந்தைகளுக்குத் தம்பதியர்களாக ஆனார்கள். இவர்களில் நான்கு பெண் குழந்தைகள் இஸ்லாத்தின் இறைநம்பிக்கை மிக்கவர்களாகவும் இன்னும் மன உறுதிமிக்க பெண்மணிகளாகவும்

வளர்த்தெடுக்கப்பட்டார்கள். அவர்களாவன : ஸைனப், ருக்கையா, உம்மு குல்தூம், ஃபாத்திமா (ரலி) ஆகியோர்களாவார்கள். இவர்கள் அனைவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றவர்களுமாவார்கள்.

ஸைனப் (ரலி) அவர்கள் அபுல் ஆஸ் பின் ரபீஆ என்பவரையும், ருக்கையா (ரலி) அவர்கள் உதுமான் (ரலி) அவர்களுக்கும், பின் ருக்கையா (ரலி) அவர்கள் இறந்தவுடன் உம்மு குல்தூம் (ரலி) அவர்களை உதுமான் (ரலி)மூ அவர்கள் மணந்து கொண்டார்கள், ஃபாத்திமா (ரலி) அவர்களை அலி பின் அபீதாலிப் அவர்கள் மணந்து கொண்டார்கள். முதல் மூன்று மகள்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே மரணமடைந்தார்கள். ஃபாத்திமா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்து ஆறு மாதம் கழித்து மரணமடைந்தார்கள்.

மூஇறைத்தூதர் (ஸல்) அவர்களின் மகள்கள் இரண்டு பேரை, ஒருவர் இறந்த பின் இன்னொருவரை மணந்ததன் காரணமாக உதுமான் (ரலி) அவர்களை துன்னூரைன் என்ற புனைப் பெயர் கொண்டு அழைப்பதுண்டு.

இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மூன்று மகன்கள் பிறந்தார்கள். இரண்டு மகன்கள் கதீஜா (ரலி) அவர்கள் மூலமாகவும், ஒரு மகன் மரியா கிப்தியா (ரலி) அவர்கள் மூலமாகவும் பெற்றெடுத்தார்கள். முதல் மகனின் பெயர் காஸிம், இவரது பெயரால் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களை அபுல் காஸிம் என்றும் அழைப்பதுண்டு. இரண்டாவது மகனின் பெயர் தாஹிர் (பரிசுத்தம்) அல்லது தய்யிப் (நல்லது) என்றழைக்கப்பட்ட அப்துல்லா. இவர்கள் இருவரும் குழந்தைப் பருவத்தின் போதே இறந்து விட்டார்கள். இவர்கள் இருவரும் இறந்தது மக்கத்துக் குறைஷிகளுக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது மட்டுமல்ல, முஹம்மதுக்கு வாரிசு இல்லாமல் போய் விட்டது என்று ஆனந்தப்பட்டார்கள். மூன்றாவது குழந்தையாகிய மரிய்யா கிப்திய்யா (ரலி) அவர்களுக்குப் பிறந்த இப்றாஹிம் அவர்களும் குழந்தையாக இருந்த பொழுதே மரணமடைந்து விட்டார்கள்.

தனது மூன்றாவது மகன் இறப்பெய்திக் கொண்டிருக்கின்ற நிலையில், தன் மகனை மடியில் வைத்துக் கொண்டு நான் உதவியற்றவன்.., இன்னும் இறைவனது விதியின் அமைப்புக்கு முன்னால் நான் எதுவும் செய்ய இயலாதவன்.., என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வருந்திக் கூறினார்கள்.

## அன்னை ஆயிஷா (ரலி)

### அன்னையின் சிறப்புக்கள் :

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஆருயிர்த் தோழரும், அருமை நண்பருமான அபுபக்கர் (ரலி) அவர்களின் செல்வப் புதல்வி தான் அன்னை ஆயிஷா (ரலி) ஆவார்கள். திருமறைக் குர்ஆனில் பல இடங்களில் அன்னையவர்களின் பொருட்டால் பல குர்ஆன் வசனங்களை இறைவன் இறக்கியருளியுள்ளான் என்ற நற்பெருக்குச் சொந்தக்காரராவார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்து கொண்ட மனைவியர்களில், மிகச் சிறப்பு வாய்ந்தவராகவும், இன்னும் அவர்களில் அன்னையவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்னும் அந்த சுவனச் சோலைகளில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடைய மனைவியாக இருப்பதற்கும் அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான். இன்னும் அன்னையவர்களின் உருவத்தை பச்சைப் பட்டுத் துணியில் வைத்து இறைத்தூதர் (ஸல்)

அவர்களுக்கு வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களால் காட்டப்பட்ட நற்பெயருக்கும் சொந்தக்காரவார்கள். இன்னும் இவரை நீங்கள் மணக்கவிருக்கின்றீர்கள், இன்னும் இவரே மறுமைநாளிலும் உங்களுக்கு மனைவியாக இருக்கப் போகின்றவர் என்றும் அப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் நன்மாரயம் கூறினார்கள்.

மிகச் சிறந்த அறிவாளியாகவும், அதிக ஞாபகசக்தியும் பெற்றுத் திகழ்ந்த அன்னையவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் மிக நீண்ட காலங்கள் வாழ்ந்திருந்ததன் காரணமாக, அதிகமான நபிமொழிகளையும் நமக்கு அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். இஸ்லாமிய பிக்ஹு ச் சட்டங்கள், ஷரீஅத் சட்டங்கள் இன்னும் இஸ்லாமியச் சட்டங்களின் பல கிளைகளிலும் அன்னையவர்களுக்கு இருந்த தெளிவான ஞானத்தின் மூலமாகவும், அதன் விளக்கங்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டிருந்ததன் காரணமாக அவர்களுடன் அதிக நேரங்கள் இணைந்திருந்ததன் காரணமாக அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டவைகள், இன்னும் நேர்மை, நாணயம், நம்பிக்கை ஆகியவற்றில் மிகச் சிறந்த விளங்கிய அன்னையவர்கள், அவர்கள் வாழ்ந்த கால கட்டத்தில் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே திகழ்ந்தார்கள் என்றால் அதில் மிகையில்லை.

அன்னையவர்கள் மிகவும் இளகிய மனதுடையவர்கள். அவர்களது வீட்டிற்குள் நுழைந்த எவரும் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றதில்லை. வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக இறைவனின் ஸலாத்தைப் பெற்றுக் கொண்ட நற்பேறு பெற்றவர்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மலரிதழ்களின் மூலமாக சொர்க்கம் உண்டென நன்மாராயத்தைப் பெற்றுக் கொண்டவர்களுமாவார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இறுதி வாழ்வு அன்னையவர்களின் மடியில் தான் கழிந்தது. அதிலும், அன்னையவர்கள் வாழ்ந்த அந்த வீடு தான் இறுதித் தூதர் (ஸல்) அவர்களின் மண்ணறையாகவும், நெடுதுயில் கொள்ளும் இடமாகவும் ஆனது. அன்னையவர்கள் வாழ்ந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் எப்பொழுதும் அவர்கள் வாழ்ந்த அந்த இல்லம் வானவர்களால் எப்பொழுதும் சூழப்பட்ட நிலையிலும், இறைவனின் சாந்தியும், சமாதானமும், அருளும் இறங்கிக் கொண்டிருக்கக் கூடிய, புகலிடமான மதீனாவாகவும் இருந்து கொண்டிருக்கின்றது.

இந்த உலகத்தில் தோன்றிய, இன்னும் தோன்றவிருக்கின்ற பெண்களில் மர்யம் பின்த் இம்ரான் (அலை) அவர்களைத் தவிர, மற்றவர்களைக் காட்டிலும் மிகச் சிறந்த அருட்கொடைகளுக்கு உரித்தானவராகத் திகழ்கின்றார்கள்.

- வானவர் தூதர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அன்னையவர்களின் உருவத்தை பச்சைப் பட்டில் வைத்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கனவில் அன்னையவர்களின் உருவத்தைக் காண்பித்து, இவர் தான் இந்த உலகிலும், மறு உலகிலும் உங்களுக்கு மனைவியாக வாய்க்கப் போகின்ற பெண்மணி என்ற நன்மாரயத்தைப் பெற்றுக் கொண்டவர்களும்,

- இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மணமுடித்துக் கொண்ட பெண்களில் கன்னிப் பெண்ணாக இருந்த நிலையில் மணமுடிக்கப்பட்டவரும்,

- இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இறுதி வாழ்வு அன்னையவர்களின் மடியில் கழிந்தது. இன்னும் அன்னையவர்கள் வசித்த இல்லத்தில் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அடக்கமும் செய்யப்பட்டார்கள்.

- இறைத்தூதர் (ஸல்) அவர்களும், அன்னையவர்களும் ஒன்றாக இருந்த பல சமயங்களில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக வஹி அருளப்பட்ட நற்பெயருக்கு உரித்தானவரும்,
- இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஆருயிர்த் தோழர், உற்ற நண்பர் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் மகளும்,
- அன்னையவர்களின் மீது களங்கம் சுமத்தப்பட்ட பொழுது, அத்தகைய களங்கத்திற்கு சொந்தக்காரரல்ல என்று இறைவனே சாட்சியமளித்து திருமறை வசனத்தை அன்னையின் பொருட்டால் இறங்கிய நற்பேற்றுக்கும் உரித்தானவரும்,
- முஸ்லிமாகவே பிறந்து, முஸ்லிமாகவே வளர்க்கப்பட்டவரும், மிகவும் பரிசுத்தமான சூழ்நிலையில் வார்த்தெடுக்கப்பட்டவரும்,
- வல்லோனானாம் அல்லாஹ் தனது மன்னிப்பையும், பேரருட் கொடைகளையும் அன்னைக்கு வழங்க இருப்பதாக வாக்குறுதி அளித்த அதிர்ஷ்டத்தையும் பெற்றுக் கொண்டவர்களாவார்கள்.

## பிறப்பும் வளர்ப்பும், நினைவாற்றல்

ஆயிஷா (ரலி) அவர்களின் தாய் வழியும், தந்தை வழியும் மக்காவின் மிகச் சிறந்த பிரபலமான நன்கறியப்பட்ட குலமாக இருந்த காரணத்தால், மக்காவின் செழிப்பு மிக்க குடும்பத்துப் பெண்ணாகப் பிறந்தார்கள். இவர்களது தாயார் உம்மு ருமான் (ரலி), தந்தையோ மிகப் பிரபலமான நபித்தோழரும், முதல் கலீபாவுமான அபுபக்கர் (ரலி) அவர்களாவார்கள். உம்மு ருமான் (ரலி) அவர்களது முதல் கணவரது பெயர் அப்துல்லா அஸ்தி, இவருக்குப் பிறந்த மகனின் பெயர் அப்துர் ரஹ்மான். உம்மு ருமானின் முதல் கணவர் இறந்ததன் பின்னர் அபுபக்கர் (ரலி) அவர்கள் இவரை மணந்து கொண்டார்கள். இவருக்கும் அபுபக்கர் (ரலி) அவர்களுக்கும் பிறந்த செல்வம் தான் ஆயிஷா (ரலி) ஆவார்கள். கி.பி. 614 ஆம் ஆண்டு ஆயிஷா (ரலி) அவர்கள் பிறந்தார்கள். இவரது தந்தையாரான அபுபக்கர் (ரலி) அவர்களைப் பற்றி திருமறைக் குர்ஆனில் இறைவன் மிகவும் போற்றி சிலாகித்துக் கூறியுள்ளான். அபுபக்கர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை முதன் முதலில் ஏற்றுக் கொண்ட நற்பேற்றைப் பெற்றவரும், இன்னும் மிகச் சிறந்த இறையச்சம் உடையவரும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது தூதுத்துவப் பணிக்காலத்தில், மக்கத்துக் குறைஷிகள் சொல்லொண்ணா துயரங்களைத் தந்த போது, அந்த இக்கட்டான தருணங்களில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குப் பக்க பலமாக இருந்த இறைநம்பிக்கையை வெளிப்படுத்தியவரும், இன்னும் தன்னுடைய உயிரை விட தூதர் (ஸல்) அவர்களின் உயிரை மதித்தவரும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உற்ற தோழருமாக ஆயிஷா (ரலி) அவர்களின் தந்தை அபுபக்கர் (ரலி) அவர்கள் இருந்த காரணத்தினால், அவரது புகழுக்கு ஏற்றவாறு ஆயிஷா (ரலி) அவர்களின் புகழும் மிகவும் கீர்த்தி மிக்கதுதான். இன்னும் ஆயிஷா (ரலி) அவர்களின் தந்தை அபுபக்கர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பின்னால் கூட தன்னுடைய ஆருயிர்த் தோழரான இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மிக அருகில் அடக்கம் செய்யப்பட்ட நற்பேறுக்கு உரித்தானவராகவும் திகழ்ந்தார்கள். இன்னும் சுவனச் சோலைகளில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இணைந்து நுழையும் பாக்கியம் பெற்றவர்களுமாவார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் ஐந்து வயதே நிரம்பிய சிறுமியாக இருந்த நேரமது. அப்பொழுது பொம்மைகளை வைத்து விளையாடுவது என்பது சிறுமிகளுக்கே உரிய பொழுது போக்கு மற்றும்

விளையாட்டு என்ற அடிப்படையில், ஆயிஷா (ரலி) அவர்களும் இதில் விலக்காக இருக்கவில்லை, அக்கம் பக்கத்திலுள்ள சிறுமிகளுடன் பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு சமயம், ஆயிஷா (ரலி) அவர்கள் இறக்கை உள்ள குதிரையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கையில்,

என்ன ஆயிஷாவே! உங்களுடைய குதிரையில் இறக்கை முளைத்துள்ளது. குதிரைக்கு இறக்கை இருக்காதல்லவா என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கிண்டலாகக் கேட்டார்கள். துடிப்பும், வேடிக்கையும், நகைச்சுவை உணர்வும் கொண்ட சிறுமியாக இருந்த ஆயிஷா (ரலி) அவர்கள், அந்த இளம் வயதில் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கிண்டலான பேச்சுக்கு இவ்வாறு பதில் கூறினார்கள்.

ஆம்! இறைத்தூதர் சுலைமான் (அலை) அவர்களிடம் இருந்த குதிரைகளுக்கு இறக்கை இருந்ததல்லவா! என்று பதில் கூறினார்கள்.

மேற்கண்ட சம்பவம் மூலம், ஆயிஷா (ரலி) அவர்கள் புத்திக் கூர்மையுள்ள, கேள்விகளுக்கு உடனுக்குடன் தக்க பதில் கொடுக்கக் கூடிய திறன், மார்க்கத்தைப் பற்றிய அறிவு, மற்றும் வரலாறு சம்பந்தமான அறிவு ஆகியவற்றை அந்த இளம் வயதிலேயே பெற்றிருந்த பாங்கைக் காண முடியும்!

இன்னும் கம்ப்யூட்டர் போல மிகச் சிறந்த ஞாபக சக்தியைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் எந்த சம்பவத்தையும் மறந்ததாக குறிப்புகள் இல்லை. அவர் எதனையும் மறந்து விட்டார் என்று கூறுவதற்குக் கூட ஆதாரங்களில்லை.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து, புறப்பட்ட வேளையில் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுக்கு எட்டு வயது தான் நிரம்பியிருந்தது. ஆனால் அந்த சமயத்தில் நடந்த சின்னச் சின்ன விசயங்களைக் கூட அன்னை அவர்கள் ஞாபகம் வைத்திருந்தார்கள். முதன் முதல் இஸ்லாமிய சாம்ராஜ்யம் ஒன்று மதீனாவில் உதயமான அந்த வேளையில் நடந்த அத்தனை வரலாற்றுச் சம்பவங்களையும் அன்னை அவர்கள் மிகவும் ஞாபகப்படுத்தி வைத்திருந்தார்கள்.

## மணவாழ்க்கை

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கைத் துணைவியாக அவர்கள் வாழ்க்கைப் பட்ட பொழுது, அவர்களுக்கு ஒன்பது வயது தான் நிரம்பி இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு முழுக்க முழுக்க ஆதரவளித்து அரவணைத்துக் கொண்டிருந்த அன்னை கதீஜா (ரலி) அவர்களின் பிரிவினால் அண்ணலார் முஹம்மது (ஸல்) அவர்கள் வாடிக் கொண்டிருந்த சமயத்தில் தான் இந்தத் திருமணம் நடந்தது. அன்றைய அரேபியாவின் இரு பெரும் தலைமைக் குலங்களாகத் திகழ்ந்த கதீஜா (ரலி) மற்றும் அபூதாலிப் ஆகியோர்கள், மக்காவின் அத்தனை எதிர்ப்புகளிலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய இருவரும் ஒரு சேர இறையடி சேர்ந்து விட, அந்த இக்கட்டான தருணங்களில், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனிமையில் விடப்பட்டது போலவும், எதையோ இழந்து விட்டது போலவும் மிகவும் கைசேதத்துக்குரியவராக இருந்தார்கள். இன்னும் இவர்கள் இருவரும் இறந்ததன் பின்னர் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களும், அவர்களது தோழர்களும் மிகவும் கொடிய கொடூரமான கால கட்டத்தை மக்காவில் சந்திக்க ஆரம்பித்தார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களது குடும்பத்தில் இணைந்த பொழுது, அவர்கள் மிகப் பெரிய அரண்மனை வாழ்க்கையை வாழவில்லை. மிகப் பெரிய அறையில் தங்க வைக்கப்படவில்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலுக்கு அருகில் பனூ நஜ்ஜார்

கோத்திரத்தார்கள் வசித்த இடத்திற்கு அருகில் கட்டப்பட்ட மிகச் சிறிய அறையில் தான் தனது மண வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறை 6 அடி நீள அகலத்தையும், மண்ணால் ஆன தரையையும், ஓலையால் வேய்ந்த கூரையையும் கொண்டதாக இருந்தது. மழை நீர் வீட்டினுள் விழாமல் இருப்பதற்கு துணியால் மூடப்பட்டிருந்தது. இன்னும் அந்த அறைக்கு ஒரே ஒரு கதவு தான் இருந்தது. அந்தக் கதவு என்றுமே மூடப்பட்டதுமில்லை. அந்தக் கதவில் மறைப்புக்காக ஒரு துணி ஒன்று தொங்கிக் கொண்டிருக்கும். அந்த அறையை அடுத்து ஒரு அறை சற்று உயரமாக இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நம்பிக்கையாளர்களின் தாய்மார்களை விட்டும் ஒதுங்கி இருந்த கால கட்டத்தில் இந்த அறையில் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனித்திருந்தார்கள். அறையின் உயரம் ஒரு ஆள் நிற்கும் அளவு உயரம் தான் இருந்தது. அந்த அறையில் பாய் ஒன்றும், தட்டு ஒன்றும், தோளால் ஆன தண்ணீர்ப் பை ஒன்றும், மரச் சிறாய்கள் வைத்து தைக்கப்பட்ட தலையணை ஒன்றும் தான் அந்த வீட்டின் சொத்தாக இருந்தது. இதனைத் தவிர்த்து, இந்த உலக வாழ்வை ஞாபகப்படுத்தக் கூடிய பொருட்கள் எதுவும் கிடையாது, இன்னும் மறுமையை ஞாபகப்படுத்தும் பொக்கிஷங்கள் தான் அங்கே காணப்படக்கூடியதாக இருந்தது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களும் இந்த உலக வாழ்வின் ஆடம்பரங்களை விரும்பவில்லை. மாறாக, மரணத்தின் பொழுது ஏழையாகவே மரணிக்க விரும்பினார்கள். இன்னும் உயிர் கொடுத்து எழுப்பப்படக் கூடிய அந்த மறுமை நாளிலே, ஏழைகளுடனும், தேவையுடையவர்களுடனுமே எழுப்பப்பட வேண்டும் என்று தான் அவர்களது பிரார்த்தனையும் இருந்தது.

### அன்னையவர்களின் தயாள குணம்

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது மற்றும் அவர்களது தேவைகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பாளராக பிலால் (ரலி) அவர்கள் இருந்தார்கள். இன்னும் அன்னையவர்களுக்கு தேவையான பொருளாதார உதவிகளைக் கூட பிலால் (ரலி) அவர்களிடம் பெற்றுக் கொண்டு, தங்களது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வசதி கூட அவர்களுக்கு இருந்தது. இன்னும் அன்றைய அரேபியாவின் முழு ஆட்சிப் பொறுப்பும் இஸ்லாத்திடம் இருந்து கொண்டிருந்தது. இஸ்லாமிய அரசின் நிறைசேரி என்றழைக்கக் கூடிய நிதியமைச்சகத்துக்கு நாடெங்கிலும் இருந்து பொருள்களும், செல்வங்களும், தானியங்களும் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. ஆனால், மிகப் பெரிய சாம்ராஜ்யத்திற்குச் சொந்தக்காரராக இருந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்த தினத்தன்று, அவர்களது வீட்டில் சமைக்கக் கூடிய தானியங்கள் இல்லாத நிலை தான் இருந்தது.

இந்த உதாரணமிக்க வாழ்வை ஆயிஷா (ரலி) அவர்கள் தங்களது இறுதி நாட்கள் வரை கூடக் கடைபிடித்து வாழ்ந்தார்கள். தனக்கு உதவிப் பணமாக நிதியமைச்சகத்திலிருந்து வரும் பணத்தை ஏழைகளுக்கும், தேவையுடையவர்களுக்கும் செலவிடக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்களது இல்லத்துக்கு வந்து திரும்பும் எந்த ஏழையும் வெறுங் கையுடன் திரும்பியதில்லை.

இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்து தினமும் நிதியமைச்சுக்கு பொருள்களும், செல்வங்களும் குவிந்து கொண்டிருந்த நிலையில், அன்னையவர்கள் நினைத்திருந்தால் மிகச் சிறந்த செல்வச் செழிப்பு மிக்க வாழ்வை வாழ்ந்திருக்க முடியும். ஆனால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த வாழ்வை, தனது இறுதிக் காலம் வரைக்கும் கடைபிடித்து வாழ்ந்து வந்தார்கள்.

அப்துல்லா பின் ஜு பைர் (ரலி) அவர்கள் அன்னை ஆயிஷா (ரலி) மற்றும் அன்னையின் உடன் பிறந்தாளான அஸ்மா (ரலி) ஆகிய இருவரது கொடைத்தன்மையை இங்கு நமக்கு நினைவு இவ்வாறு நினைபடுத்துகின்றார்கள்.

அவர்கள் பெறுகின்ற அனைத்து செல்வங்களையும் அல்லாஹ்வின் பெயரால் தானம் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு செல்வம் சேர்ந்தவுடன் அவற்றை தேவைப்படுகின்ற ஏழை எளியவர்களுக்கு தானமாக வழங்கக் கூடியவர்களாகவும், அதே நேரத்தில் அஸ்மா (ரலி) அவர்கள் அவ்வப்பொழுது சேர்ந்த பணத்தை தானமிடக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். அஸ்மா (ரலி) அவர்களோ, தான் கடன் வாங்கும் நிலையில் இருந்து கொண்டிருக்க நிலையில் கூட, யாராவது எதையாவது கேட்டு வந்து விட்டால் தன்னிடம் இருப்பவற்றைக் கொடுத்து விடக் கூடியவர்களாக இருந்தார்கள். அப்பொழுது, நீங்களே கடன் வாங்கும் நிலையில் இருக்கும் பொழுது, எதற்கு பிறருக்கு வழங்குகின்றீர்கள் என்று பிறர் கேட்கும் பொழுது, திருப்பிச் செலுத்துகின்ற எண்ணத்துடன் வாங்கும் கடனை அடைப்பதற்கு அல்லாஹ் உதவி புரிவதாக வாக்களித்திருக்கின்றான் அல்லவா! என்று கூறுவார்களாம். இன்னும் நான் அல்லாஹ்வின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என்றும் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஒரு சமயம், தன்னிடம் இருந்த 70 ஆயிரம் திர்ஹம்களை ஒரே நேரத்தில் அல்லாஹ்வின் பாதையில் செலவிட்டார்கள் அன்னையவர்கள். அப்பொழுது அவர்களது கைத்துண்டு தான் அவர்களிடத்தில் மிச்சமிருந்தது. இன்னும் ஒரு மாலைப் பொழுதில் அவர்களுக்கு ஒரு லட்சம் தினார்களை முஆவியா (ரலி) அவர்கள் சிரியாவிலிருந்து அனுப்பி வைத்தார்கள். அதனை அப்பொழுதே தானமாக மக்களுக்கு வழங்கி விட்டார்கள். அப்பொழுது, அவர்களுக்கு பணிப்பெண்ணாக இருந்த பெண்ணொருத்தி, அன்னையவர்களே..! நீங்கள் இன்றைக்கு நோன்பு வைத்துள்ளீர்கள், உங்களுக்காக எதையாவது ஒதுக்கி வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிய பொழுது, நீங்கள் எனக்கு ஏன் இதனை முன்பே தெரியப்படுத்தவில்லை என்று தான் கேட்டார்கள். இன்னும் ஒரு முறை அப்துல்லா பின் ஜு பைர் (ரலி) அவர்கள் ஒரு லட்சம் திர்ஹம்களை அனுப்பி வைத்தார்கள். அது வந்த வேகத்தில் தானமாக வழங்கப்பட்டு விட்டது அன்னையவர்களால்..!

ஒரு நாள் அன்னையவர்கள் நோன்பு வைத்திருந்தார்கள். அப்பொழுது ஒரு ஏழைப் பெண் தானமாக எதனையாவது பெற்றுக் கொள்ளும் நோக்கில் அன்னையவர்களின் வீட்டுக்கு வந்திருந்தாள். அப்பொழுது அன்னையவர்கள் தனது பணிப் பெண்ணை நோக்கி, நம்மிடம் இருக்கின்ற அந்த துண்டு ரொட்டியை எடுத்து அந்தப் பெண்ணுக்குக் கொடுக்குமாறு கூறினார்கள். அந்தப் பணிப் பெண்ணோ, அன்னையே..! நீங்கள் நோன்பு திறப்பதற்கு இந்த ரொட்டித் துண்டை விட்டால் நம்மிடம் எதுவும் கிடையாது என்று கூறினார்கள். அதற்கு அன்னையவர்கள், அவளோ பசியென்று நம் வீடு தேடி வந்து நிற்கின்றாள். முதலில் அவளது பசியைப் போக்குவோம். மாலையில் நம் பசியைப் போக்க இறைவன் வேறு எதாவதொரு ஏற்பாட்டைச் செய்வான் என்று கூறினார்கள். அன்றைய மாலைப் பொழுதில், நோன்பு திறக்கும் நேரத்தில் ஒரு வீட்டிலிருந்து அன்னைக்காக சமைத்த இறைச்சித் துண்டு வந்திருந்தது. அப்பொழுது, பார்த்தாயா பெண்ணே..! நாம் காலையில் தானம் கொடுத்ததை விடச் சிறந்த உணவை அல்லாஹ் நமக்காக ஏற்பாடு செய்து தந்திக்கின்றான் என்று கூறினார்கள். முஆவியா (ரலி) அவர்களுக்கு விற்ற வீட்டில் தான் அன்னையவர்கள் இருந்தார்கள், இன்னும் தனக்கு வருகின்ற பரிசுப் பணம், உதவிப் பணம் ஆகியவற்றை அல்லாஹ்வின் நேசத்திற்காக அனைத்தையும் தானம் வழங்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இன்னும், தனது அக்காள் அஸ்மா (ரலி) அவர்களது மகனான அப்துல்லா பின் சுபைர் (ரலி) அவர்கள் மீது அளப்பரிய பாசம் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக அப்துல்லா பின் சுபைர் (ரலி)

அவர்களும் தனது சிறிய தாயார் மீது அளப்பரிய பாசத்தை வைத்திருந்ததோடு, அவர்களின் தேவையை நிறைவு செய்து உதவி வந்தார்கள்.

ஒருமுறை, அன்னையவர்கள் மித மிஞ்சி தான தர்மங்கள் வழங்கி வருவதையிட்டு, அப்துல்லா பின் சுபைர் (ரலி) அவர்கள் ஏதோ ஒரு விமர்சனமான வார்த்தைகளை, அன்னையவர்களைப் பற்றிக் கூறி விடுகின்றார்கள். அதனைக் கேட்ட அன்னையவர்கள் மிகவும் கோபம் கொண்டு, அல்லாஹ்வின் பாதையில் எனது பொருள்களைச் செலவழிப்பதை விமர்சனம் செய்வதற்கும், அதனைத் தடுப்பதற்கும் இந்தப் பூமியில் யாருக்கும் எந்த அதிகாரமும் கிடையாது. அவர் எவ்வாறு இப்படிப்பட்ட விமர்சனத்தைச் சொல்லலாம். இனி ஒரு போதும் நான் அப்துல்லா பின் சுபைர் (ரலி) அவர்களிடம் பேச மாட்டேன் என்று சத்தியம் செய்து விட்டார்கள். பின் அவர்களது கோபம் தணிந்தது. தனது தவறை நினைத்து, அதற்குப் பிராயச்சித்தமாக சத்தியமிட்டதற்குப் பகரமாக பல அடிமைகளை விடுதலை செய்தார்கள்.

இன்னும் அன்னையவர்கள் மிகவும் இளகிய மனதுடையவர்கள், எளிதில் அவர்களது கண்கள் கண்ணீரைச் சொறிந்து விடும் அளவுக்கு இளகிய மனதுடையவர்கள். ஒரு சமயம் ஒரு பெண் தனது இரு குழந்தைகளுடன் அன்னையின் வீட்டு வாசலில் தானம் கேட்டு வந்து நின்றார். அப்பொழுது அன்னையவர்களிடம் மூன்று பேரீச்சம் பழங்கள் தான் இருந்தது. அதனை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தார்கள், அதனைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெண் - தனது குழந்தைகளுக்கு முறையே ஒரு பழத்தைக் கொடுத்து விட்டு, ஒன்றைத் தானும் வாயில் போட்டுக் கொண்டாள். அதில் ஒரு குழந்தை தனக்குக் கொடுக்கப்பட்ட பழத்தை மிக வேகமாகத் தின்று முடித்து விட்டு, தாய் அசை போட்டுக் கொண்டிருக்கும் வாயையே பார்த்துக் கொண்டிருந்தது. தனது குழந்தைகளின் அகோரப் பசிப் பிணியை அறிந்த அந்தத் தாய், தனது வாயிலிருந்த பழத்தை வெளியில் எடுத்து, இரு குழந்தைகளுக்கு ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொடுத்தாள். அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அன்னை ஆயிஷா (ரலி) அவர்களால் தாங்க இயலாமல், அழுதே விட்டார்கள். அவர்களால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அழத் தொடங்கி விட்டார்கள்.

### களங்கம் சுமத்தியவர்களை இனங்காட்டினான் இறைவன்

அன்னையவர்களது வாழ்வு பரிசுத்தமானது, இறையச்சம் மிகுந்தது, இருப்பினும் அவர்கள் கூட நயவஞ்சகர்களின் சதித் திட்டத்திலிருந்து தப்பிக்க இயலவில்லை. ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஷ.்பான் மாதம் கதீத் என்ற இடம் நோக்கி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது படையணியை நடத்திச் சென்று கொண்டிருந்தார்கள். பனூ முஸ்தலக் என்ற கோத்திரத்தாருக்கும் இறைத்தூதர் (ஸல்) அவர்களது படைக்கும் இடையே சிறியதொரு போர் ஒன்று நடந்தது. இந்தக் குறிப்பிட்ட போரின் பொழுது, இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் பல நயவஞ்சகர்கள் சேர்ந்து வந்திருந்தார்கள். அந்தப் போரின் பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்களது படை மரீஸா என்ற ஆற்றின் கரையை அடைந்த பொழுது, அங்கு சிறிது தங்கி இளைப்பாறி விட்டுச் சென்றார்கள்.

அந்தப் போரின் பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் வந்திருந்த ஆயிஷா (ரலி) அவர்களுக்கு 19 வயது நிரம்பியிருந்தது, இன்னும் அவர்கள் மிகவும் ஒல்லியாக இளைத்துமிருந்தார்கள். அப்பொழுது, தனது அக்காளான அஸ்மா (ரலி) அவர்களிடமிருந்து ஒரு கழுத்து மாலை ஒன்றை இரவல் வாங்கி அணிந்து வந்திருந்தார்கள். பாலைவன நடுவே படைகள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பொழுது, தனது சிறு தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அன்னையவர்கள் ஒதுக்குப்புறமான இடம் தேடிச் சென்று விட்டார்கள். திடீரென தான் அணிந்திருந்த கழுத்து மாலையைக் காணாத அன்னையவர்கள், தான் வந்த வழியில் எங்கேயேனும் விழுந்திருக்கக் கூடும் என்று நினைத்து, வந்த வழியே திரும்பி

தேடிச் செல்ல ஆரம்பித்தார்கள். இந்த நேரத்தில் அவர்கள், தனது இருப்பிடத்திற்கு மீண்டும் திரும்பி வந்து பார்த்த பொழுது, படைகள் அந்த இடத்தை விட்டும் சென்று விட்டிருந்தன.

அந்தக் காலப் பழக்கம் எவ்வாறிந்ததென்றால் பெண்கள் ஆண்களிடமிருந்து தனித்து வைக்கப்படுவார்கள். இன்னும் பெண்கள் ஒட்டகத்தின் மீது பயணம் செய்யும் பொழுது, அவர்கள் பெட்டி போன்ற பரிகையில் அமர்ந்து பயணம் செய்வார்கள். அந்தப் பெட்டியில் திரைச் சீலைகள் தொங்க விடப்பட்டிருக்கும். இதனால் ஆண்கள் அவர்களைப் பார்ப்பது தவிர்க்கப்பட்டிருந்தது. படைகள் கிளம்பும் பொழுது, ஒட்டகத்தை ஓட்டி வரக் கூடியவர்கள், பெண்கள் உட்கார்ந்திருக்கக் கூடிய அந்தப் பெட்டியை ஒட்டகத்தின் மீது தூக்கி வைக்க, ஒட்டகம் பின் எழுந்து தனது பயணத்தைத் துவங்கும். அது போல ஆயிஷா (ரலி) அவர்கள் அமர்ந்து வந்த பெட்டியும் தூக்கி வைக்கப்பட்டது. ஆனால் ஆயிஷா (ரலி) அப்பொழுது, மிகவும் இளைத்திருந்த காரணத்தால், பெட்டியைத் தூக்கி வைத்தவர்களுக்கு, உள்ளே ஆள் இருக்கின்றதா? அல்லது இல்லையா என்பதை அறிய இயலாதிருந்தது. எனவே, ஆள் இல்லாமலேயே பெட்டி தூக்கி வைக்கப்பட்டு, படைகள் அந்த இடத்தை விட்டும் நகர்ந்து வெகு தூரம் சென்று விட்டன. இந்த நிலையில், கழுத்து மாலையைத் தேடி விட்டு, திரும்பி வந்த அன்னையவர்கள் படையைக் காணாது, தன்னைக் காணாது மீண்டும் அவர்கள் தன்னை இதே இடத்திற்கு தேடி வருவார்கள் என நினைத்து, பயப்படாமல் அந்த இடத்திலேயே உட்கார்ந்து விட்டார்கள்.

அன்றைய தின வழக்கப்படி, படைகள் விட்டுச் சென்ற பொருட்களை எடுத்து வருவதற்காகவே ஒருவரை நியமித்து வைத்திருப்பார்கள். இவர் படைகள் கிளம்பிச் சென்றவுடன் மிகவும் தாமதமாக அந்த இடத்தை விட்டும் கிளம்பி வருவார். அவ்வாறு அதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர் தான் சஃப்வான் பின் முஅத்தல் (ரலி) என்பவர். இவர் படைகள் எதனையும் விட்டுச் சென்றிருக்கின்றார்களா என்று அந்த இடத்தில் தேடிக் கொண்டு வரும் பொழுது, ஹிஜாப் அணிந்த நிலையில் ஒரு உருவம் ஒன்று, அங்கு தரையில் படுத்துக் கிடப்பதைக் காண்கிறார்கள். தரையில் படுத்துக் கிடப்பது பெண் என்று தெரிந்ததும், சஃப்வான் (ரலி) அவர்கள் சற்று ஒதுங்கி நின்று, தனது ஒட்டகத்தை ஓட்டும் தொனியில் குரல் கொடுக்கின்றார்கள். அந்தக் குரலைக் கேட்டு படுத்திருக்கும் பெண் எழும்பட்டும் என்று தான் அவர்கள் அவ்வாறு செய்தார்கள். ஒட்டகத்தை அதட்டும் குரலின் ஒலியைக் கேட்ட அன்னையவர்கள் விழித்தெழுந்தார்கள். பின் அந்த ஒட்டகத்தில் ஏறி அமர்ந்து உட்கார, சஃப்வான் (ரலி) அவர்கள் அந்த ஒட்டகத்தை கையில் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள்.

அன்றைய தினம் மதிய வேளையில் இன்னொரு இடத்தில் படையணி தங்கக் கூடாரம் அடித்துக் கொண்டிருந்த பொழுது, ஆயிஷா (ரலி) அவர்கள் சஃப்வான் (ரலி) அவர்களுடன் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இன்னும் அனைத்து படைவீரர்கள் முன்னிலையிலும் அந்த ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கினார்கள். இந்தக் காட்சி, குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்று வந்திருந்த நயவஞ்சகர்களுக்கு அவல் கிடைத்தது போலாகி, அவர்கள் அனைவரும் அப்துல்லா பின் சலூல் என்ற நயவஞ்சகனின் தலைமையில் தங்களது சதித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இவனுக்கென்றே தனியானதொரு குணம் உண்டு. அந்த கேடு கெட்ட குணத்தை வைத்து, சந்தேகத்தையும், கிசுகிசுக்களையும் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது கதை கட்டி, முஸ்லிம் படைகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த ஆரம்பித்தான்.

இந்த கிசுகிசு மதீனாவின் அனைத்து வீதிகளிலும் ஒலிக்க ஆரம்பித்தது. இந்த கிசுகிசுவில் ஹஸன் பின் தாபித், ஹம்னா பின் ஜஹ்ஸ், மற்றும் மஸ்தா பின் அதாதா ஆகியோரும் முன்னணியில் இருந்தார்கள். அந்தக் கிசுகிசுவில் ஆயிஷா (ரலி) அவர்களின் கற்பின் மீது களங்கத்தைச் சுமத்தி பேசப்பட்டது (இறைவன் பாதுகாப்பானாக!). நயவஞ்சகர்கள் தங்களது நயவஞ்சகச் சேற்றை அன்னை

மீது வாறி இறைத்த வண்ணமிருந்தார்கள். மேலும், இந்த கிசுகிசுக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களது காதிற்கும் எட்டியது. தனது குடும்பத்துப் பெண், இன்னும் தனது பிரியமான மனைவியின் மீது களங்கம் சுமத்தப்படுத்திப் பேசப்படுவது, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு அதிகமான சங்கடத்தை ஏற்படுத்தியது. ஆனால் தன்னைச் சுற்றி நடக்கின்ற இந்த அநாகரீக செயல்கள் எதனையும் அறியாதவர்களாக மதீனாவில் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தில் ஆயிஷா (ரலி) தனது கடமைகளைச் செய்து வந்தார்கள்.

ஒருநாள் இரவு, வயதான மஸ்தா பின் அதாதா (ரலி) அவர்களுடன் ஆயிஷா (ரலி) அவர்கள் தனது சிறு தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் மதீனாவின் ஒதுக்குப் புறமான இடத்திற்குச் சென்ற பொழுது, தனது மகனின் கேடு கெட்ட செயலை மனதில் வைத்துக் கொண்டு, தனது மகனைக் குறித்து சாபமிட்டுக் கொண்டே வருகின்றார். அதனைக் கேட்ட ஆயிஷா (ரலி) அவர்கள், ஏன் நீங்கள் உங்கள் மகன் மீது சாபமிடுகின்றீர்கள், அவர் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடைய தோழரும், இன்னும் பத்ருப் போரில் கலந்து கொண்ட நற்பேற்றுக்கும் உரியவராவார், நீங்கள் எச்சரிக்கையுடன் உங்கள் மகனைப் பற்றிப் பேசுங்கள் என்று கூறுகின்றார்கள். தனது மகனின் இழி செயலைக் குறித்து விசனப்பட்ட அந்தத் தாய், இந்தப் பிரச்னையை ஆயிஷா (ரலி) அவர்களது காதுகளுக்குக் கொண்டு செல்கின்றார்.

தன்னைச் சுற்றி நடந்து கொண்டிருப்பவைகள் குறித்து எதுவுமே அறியாதிருந்த அன்னையவர்கள், தனது காதில் விழுந்த அந்த செய்தியைக் கேட்டவுடன், தன்னைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கும் சதிவேலைகளை அறிந்தவுடன் அன்னையால் தாங்க முடியவில்லை. அவர்களது முகம் வெளிறிப் போனது. விரைவாக வீடு வந்து சேர்ந்த அன்னையவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் தனது தாய், தந்தையரைப் பார்த்து வருவதாகக் கூறி அனுமதி பெற்றுக் கொண்டு, நேரே தனது தாய் வீட்டிற்கு வந்து விடுகின்றார்கள். மதீனாவில் உலவி வந்த இந்த கிசுகிசுக்களை அவர்களும் கேட்டிருந்த காரணத்தினால், அன்னையவர்கள் அணையுடைத்த வெள்ளம் போல அழ ஆரம்பித்து விட்டார்கள். அன்னையவர்களின் பிரியத்திற்குரிய தாயார் தனது மகளின் நிலையை அறிந்து, அவரைத் தேற்ற முயன்றும் அவர்கள் தோற்றுத்தான் போனார்கள். அன்னையவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய் ஓடிக் கொண்டிருந்தது.

நீங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பிரியத்திற்குரிய மனைவியாக இருக்கின்ற காரணத்தினால், உங்கள் மீது பொறாமை கொண்டவர்கள் தான் இந்த களங்கத்தைச் சுமத்தி இருக்கின்றார்கள். எனவே, அழ வேண்டாம், எல்லாம் விரைவில் சரியாகி விடும் என்று அந்த அன்னையவர்கள் வீடு தேடி வந்த தனது மகளான ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். ஆனால், தூய்மையான வாழ்வுக்குச் சொந்தக்காரரான அன்னையவர்கள் எந்த ஆறுதல் வார்த்தைகளையும் செவி கொடுத்துக் கேட்கும் நிலையில் இல்லை. தன் மீது களங்கம் சுமத்தப்பட்டிருக்கும் நிலையில் தன்னால் எவ்வாறு அமைதியாக இருக்க முடியும், மனதில் பாரத்தை வைத்துக் கொண்டு எவ்வாறு நிம்மதி அடைய முடியும் என்றார்கள். இரண்டு நாட்கள் இரவும் பகலும் அழுது கொண்டே இருந்ததன் காரணமாக அன்னையின் உடல் நலிவடைந்திருந்தது.

மூன்றாம் நாள் அன்னையவர்களின் தாய் மற்றும் தந்தை அபுபக்கர் (ரலி) அவர்களும் வீட்டில் அமர்ந்து கொண்டு தங்களது ஆசை மகளுக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறிக் கொண்டிருக்கும் நிலையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அங்கு வருகின்றார்கள்.

ஆயிஷாவே! நீங்கள் தவறிழைத்திருக்கும் பட்சத்தில் இறைவனிடம் பாவ மன்னிப்புத் தேடிக் கொள்ளுங்கள் என்று அமைதியான குரலில் அன்னைக்கு அறிவுரை கூறினார்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்.

கண்ணில் நீர் வற்றியிருந்த கண்களோடு சோகத்துடன் இருந்த அன்னையவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு பதில் அளிக்க அனுமதி வழங்குமாறு தன் தாயிடம் கேட்கின்றார்கள். ஆனால் அன்னையின் தாயார் அவர்களோ எந்தப் பதிலையும் கூறாது அமைதியாக இருக்கின்றார்கள். பின் தனது தந்தையை நோக்கி, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு நான் பதில் அளிப்பதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்க, அபுபக்கர் (ரலி) அவர்களோ வந்திருந்த இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆயிஷா (ரலி)அவர்கள் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அனுமதியும் வழங்கவில்லை.

இறுதியாக, அன்னையவர்கள் தனது ஆருயிர்க் கணவரைப் பார்த்துக் கூறினார்கள், நான் தவறிழைத்திருக்கவில்லை என்று சொல்லி மறுத்தால், எனது சொல்லை யாரும் நம்பும் நிலையில் இல்லை. ஆனால் நான் குற்றமற்றவள், அல்லாஹ் மட்டுமே இதனை அறிவான் என்று கூறி விட்டு, என் மீது சுமத்தப்பட்ட களங்கத்திற்குச் சரியான பதில் இதுவாகத் தானிருக்கும் என்று, யூசுப் (அலை) அவர்களது தந்தை அளித்த பதிலாக வருகின்ற, யூசுப் அத்தியாயத்தின் கீழ்க்கண்ட வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

எனவே (எனக்கு இந்நிலையில் அழகிய) பொறுமையை மேற்கொள்வதே நலமாக இருக்கும் மேலும், நீங்கள் கூறும் விஷயத்தில் அல்லாஹ்வே உதவி தேடப்படுபவன்” என்று கூறினார். (12:18)

அன்னையவர்கள் இருந்த நிலையில், யூசுஃப் (அலை) அவர்களது தந்தையாரான யஃகூப் (அலை) அவர்களது பெயரைக் கூட ஞாபகப்படுத்த முடியாத அளவுக்கு மனதால் மிகவும் நொந்து போய் இருந்தார்கள். இந்த கணத்தில் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு கீழ்க்காணும் வசனம் இறக்கி அருளப்பட்டு, அன்னையவர்கள் குற்றமற்றவர்கள் என்பதை இறைவன் அறிவித்துக் கொடுத்தான்.

இந்த வசனம் அருளப்பட்ட பின் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் புருவங்களைச் சுற்றியும் வியர்வை முத்துக்கள் பணித்திருந்தன. பின் ஆயிஷா (ரலி) அவர்களின் பக்கம் திரும்பியவர்களாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கீழ்க்காணும் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

எவர்கள் பழி சுமத்தினார்களோ, நிச்சயமாக அவர்களும் உங்களில் ஒரு கூட்டத்தினரே! ஆனால் அது உங்களுக்குத் தீங்கு என்று நீங்கள் எண்ண வேண்டாம். அது உங்களுக்கு நன்மையாகும். (பழி சுமத்தியவர்கள்) ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் சம்பாதித்த பாவம் (அதற்கொப்ப தண்டனை) இருக்கிறது. மேலும், அ(ப்பழி சுமத்திய)வர்களில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவனுக்குக் கடினமான வேதனையுண்டு. (24:11)

முஃமினான ஆண்களும், முஃமினான பெண்களுமாகிய நீங்கள் - இதனைக் கேள்வியுற்றபோது, தங்களைப் (போன்ற முஃமினானவர்களைப்) பற்றி நல்லெண்ணங் கொண்டு, “இது பகிரங்கமான வீண் பழியேயாகும்” என்று கூறியிருக்க வேண்டாமா? (24:12)

அ(ப்பழி சுமத்திய)வர்கள் அதற்கு நான்கு சாட்சிகளைக் கொண்டு வர வேண்டாமா, எனவே அவர்கள் சாட்சிகளைக் கொண்டு வரவில்லையெனில், அவர்கள் தாம் அல்லாஹ்விடத்தில் பொய்யர்களாக இருக்கிறார்கள். (24:13)

இன்னும், உங்கள் மீது இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹ்வின் அருளும், அவனுடைய ரஹ்மத்தும் இல்லாதிருந்தால், நீங்கள் இச் சர்ச்சையில் ஈடுபட்டிருந்தமைக்காக கடினமான வேதனை நிச்சயமாக உங்களைத் தீண்டியிருக்கும். (25:14)

இப்பழியை (ஒருவரிடமிருந்து ஒருவராக) உங்கள் நாவுகளால் எடுத்து(ச் சொல்லி)க் கொண்டு, உங்களுக்குத் (திட்டமாக) அறிவில்லாத ஒன்றைப் பற்றி உங்கள் வாய்களால் கூறித் திரிகின்றீர்கள் இன்னும் இதை நீங்கள் இலேசானதாகவும் எண்ணி விட்டீர்கள். ஆனால் அது அல்லாஹ்விடத்தில் மிகப்பெரிய (பாவமான)தாக இருக்கும். (25:15)

இன்னும் இதை நீங்கள் செவியேற்ற போது, "இதைப் பற்றி நாம் பேசுவது நமக்கு(த் தகுதி) இல்லை (நாயனே!) நீயே தூயவன் இது பெரும் பழியாகும்" என்று நீங்கள் கூறியிருக்கலாகாதா? (24:16)

நீங்கள் (திடமாக) முஃமின்களாகயிருப்பின் நீங்கள் இது போன்ற (பழி சுமத்துவ)தின் பால் மீளலாகாது என்று அல்லாஹ் உங்களுக்கு போதிக்கிறான். (24:17)

இன்னும், அல்லாஹ் (தன்) வசனங்களை உங்களுக்கு (நன்கு விவரித்துக் கூறுகிறான் மேலும் அல்லாஹ் (யாவும்) அறிந்தவன் விவேகம் மிக்கோன். (24:18)

எவர்கள் ஈமான் கொண்டுள்ளோரிடையே இத்தகைய மானக்கேடான விஷயங்கள் பரவ வேண்டுமெனப் பிரியப்படுகிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் நோவினை செய்யும் வேதனையுண்டு. அல்லாஹ் (யாவற்றையும்) அறிகிறான். நீங்கள் அறியமாட்டீர்கள். (24:19)

இன்னும், உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும், அவனுடைய ரஹ்மத்தும் இல்லாதிருந்தால் (உங்களை வேதனை தீண்டியிருக்கும்.) மேலும், நிச்சயமாக அல்லாஹ் இரக்கமுடையவனாகவும், அன்புடையயோனாகவும் இருக்கின்றான். (24:20)

ஈமான் கொண்டவர்களே! ஷைத்தானுடைய அடிச்சவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள் இன்னும் எவன் ஷைத்தானுடைய அடிச்சவடுகளைப் பின்பற்றுகிறானோ அவனை, ஷைத்தான் மானக் கேடானவற்றையும், வெறுக்கத்தக்கவற்றையும், (செய்ய) நிச்சயமாக ஏவுவான் அன்றியும், உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும், அவனுடைய ரஹ்மத்தும் இல்லாதிருந்தால், உங்களில் எவரும் எக்காலத்திலும் (தவ்பா செய்து) தூய்மையயடைந்திருக்க முடியாது - எனினும் தான் நாடியவர்களை அல்லாஹ் துய்மைப் படுத்துகிறான் - மேலும் அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், நன்கறிவோனாகவும் இருக்கின்றான். (24:21)

மேலே கண்ட இறைவசனம் இறங்கியதன் பின், தங்களது செல்வத்தின் மீது சுமத்தப்பட்ட களங்கம் பொய்யென்று இறைவனால் நிரூபிக்கப்பட்டு விட்டது குறித்தும், தனது மகளின் நிலை கண்டு, இறைவன் திருவசனத்தை இறக்கியது குறித்தும், அன்னையவர்களின் பெற்றோர்கள் அகமகழிந்து போனார்கள். நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

ஆயிஷாவே! நீங்கள் உங்கள் கணவரிடம் சென்று நன்றி கூறுங்கள்..! என்று கூறிய பொழுது, நான் அல்லாஹ்வுக்குத் தான் நன்றிக் கடன் பட்டிருக்கின்றேன் என்று பதில் கூறி, அல்லாஹ் தான் என்மீது சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைத்தெறிந்தான். இன்னும் எனது கண்ணியத்தைக் காக்கும் பொருட்டு தனது வசனங்களை இறக்கி அருளியமைக்காக அல்லாஹ் தான் என் நன்றிக்கு உரியவன் என்று பதிலிறுத்தார்கள். இன்னும் இந்த வசனங்கள் மறுமை நாள் வரை ஒலிக்கும். இந்த வரலாற்றுச் சம்பவம், இஸ்லாமிய வரலாற்றில் உஃபுக் என்றழைக்கப்படுகின்றது.

## மதிப்பும் கௌரவமும்

இந்த சம்பவத்திற்குப் பின்பாக அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் மீது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வைத்திருந்த பிரியம் இன்னும் அதிகமாயிற்று. ஒருமுறை அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களே! இந்த உலகத்தில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான நபர் யாராக இருக்கும்? என வினவிய பொழுது, ஆயிஷா (ரலி) அவர்கள் தான் இந்த உலகத்திலேயே எனக்கு மிகவும் பிடித்தமான நபர் என்று பதிலளித்தார்கள். பின்பு, ஆண்களில் யார் என வினவிய பொழுது, அபுபக்கர் சித்தீக் (ரலி) என்று பதிலளித்தார்கள்.

ஒருமுறை உமர் (ரலி) அவர்கள் தனது மகளும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது மனைவியுமான ஹப்ஸா (ரலி) அவர்களிடம், ஆயிஷா (ரலி) அவர்களுடன் போட்டி போட வேண்டாம் என்றும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருக்கின்றார்கள் என்றும், அவரைக் குறைத்துமதிப்பிடாது கௌரவமாக உயர்ந்த அந்தஸ்துடன் கண்ணியத்துடன் பழகி வரும்படி அறிவுரை கூறினார்கள்.

இதன் காரணமென்னவெனில், அன்னையவர்கள் இஸ்லாமிய மார்க்க அடிப்படைச் சட்டங்களிலும், அதன் விளக்கத்திலும் தன்னிகரற்ற அறிவு ஞானத்தைப் பெற்றிருந்ததேயாகும்.

இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களைப் பேச விட்டு ரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஒருமுறை ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த வீரர்கள், அம்புகளை எறிந்து கொண்டு தங்களுக்குள் வீர விளையாட்டு ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார்கள். அதனை அன்னையவர்கள் பார்க்க விரும்பிய பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன்னிற்க அவர்களுக்குப் பின் அன்னையவர்கள் மறைந்து நின்று கொண்டு, பிறர் தன்னைக் கவனிக்காதவாறு விளையாட்டைக் கண்டு ரசித்தார்கள். அந்த விளையாட்டு முடியும் வரைக்கும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அந்த இடத்தை விட்டும் நகரவில்லை. இன்னும் இருவரும் தங்களுக்கிடையில் மாறி மாறி பல கதைகளைப் சொல்லிக் காட்டிக் கொள்வார்கள்.

கணவனும் மனைவியும் எவ்வாறு நட்புடன் வாழ வேண்டும் என்பதற்கு அன்னையவர்களின் வரலாறு மிகுந்த படிப்பினை மிக்கது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தங்களது மனைவிமார்களுடனும், குடும்பத்தவர்களுடனும் பிரியத்துடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாலும், அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து அவர்கள் சிறிதும் கவனக் குறைவாக இருந்தது கிடையாது. தொழுகைக்கு அழைப்புக் கொடுக்கப்பட்டு விட்டால், தனக்கு அருகில் குடும்பத்தவர்கள் இருக்கின்றார்களே, அவர்களுடன் இருந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், பொழுது சந்தோசமாகக் கழிந்து கொண்டிருக்கின்றதே என்று எண்ண மாட்டார்கள். மாறாக, தங்களது குடும்பத்தவர்களுடன் தான் இதுவரை அமர்ந்திருந்தோமா என்று பிறர் நினைக்கும் அளவுக்கு, பாங்கு சொன்ன உடனேயே அந்த இடத்தை விட்டும் அகன்று பள்ளியை நோக்கி விரையக் கூடியவர்களாக இருப்பார்கள். குடும்பத்தவர்கள் மீதான அன்பு இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமையினின்று அவர்களைப் பராக்காக்கி விடாது.

அன்னையவர்களின் வரலாற்றில் இன்னுமொரு சம்பவம் அவர்களது மதிப்புக்கு மணி மகுடம் சூட்டியது போலாகி விட்டது. ஆம்! அன்னையவர்களின் பொருட்டால் அப்பொழுது ஒரு இறைவசனத்தை இறைவன் இறக்கி அருளினான். ஒரு பயணத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் அபுபக்கர் (ரலி) மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் ஆயிஷா (ரலி) அவர்களும் அந்தப் பயணத்தில் உடன் சென்றிருந்தார்கள். பாலைவனத்தில் ஒரு இடத்தில் பயணத்தை இடை நிறுத்தி தங்கிக் கொண்டிருந்த பொழுது, அன்னையவர்களின் கழுத்து மாலை ஒன்று மீண்டும் காணாமல் போய்

விட்டது. நபித்தோழர்கள் பலர் அந்த மாலையைத் தேடிச் சென்றும், அதனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது கூடாரத்தில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அதிகாலைத் தொழுகைக்கு பாங்கும் சொல்லப்பட்டு விட்டது. ஆனால், அவர்கள் கூடாரம் அடித்துத் தங்கிய இடத்தில் அதிகாலைத் தொழுகைக்கு தங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள அங்கு தண்ணீர் கிடைக்கவில்லை.

நபித்தோழர்களோ அதிகாலைத் தொழுகைக்கு நேரமாகிக் கொண்டிருக்கின்றது, தண்ணீரும் அருகில் இல்லை, எங்கே தொழுகை தவறி விடுமோ என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் இந்த இக்கட்டான சூழ்நிலை ஏற்படுவதற்கு அன்னையவர்கள் தான் காரணம் என்றும், காரணம் கற்பித்துக் கொண்டிருந்தார்கள். நபித்தோழர்களிடம் காணப்பட்ட அந்த வருத்தத்தக்க நிலையைக் கண்ட அபுபக்கர் (ரலி) அவர்களோ, இந்த சூழ்நிலை உங்களால் தானே வந்தது என்று தனது மகளான அன்னை ஆயிஷா (ரலி) அவர்களைக் கடிந்து கொள்ளும் நிலைக்கு சூழ்நிலை இறுக்கமானது. அந்த நேரத்தில் தான் அன்னையவர்களின் பொருட்டால், இறைவன் கீழ்க்கண்ட வசனத்தை இறக்கி அருளினான் :

நீங்கள் நோயாளியாகவோ, யாத்திரையிலோ, மலஜலம் கழித்தோ, பெண்களைத் தீண்டியோ இருந்து (சுத்தம் செய்து கொள்ள) தண்ணீரைப் பெறாவிடின், சுத்தமான மண்ணைத் தொட்டு உங்களுடைய முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவி "தயம்மும்" செய்து கொள்ளுங்கள் (இதன்பின் தொழலாம்) நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவனாகவும், மன்னிப்பவனாகவும் இருக்கின்றான். (4:43)

இதுவரைக்கும் அன்னையவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்த நபித்தோழர்கள், மேற்கண்ட இறைவசனம் இறங்கியதன் பின்பு, இறைவன் தங்கள் மீது காட்டிய கருணையை எண்ணி மகிழ்ந்தவர்களாக, அன்னையவர்களின் பொருட்டால் தான் இந்த சலுகை எங்களுக்குக் கிடைத்தது என்று புகழ ஆரம்பித்து விட்டார்கள்.

அஸீத் பின் ஹு தைர் (ரலி) அவர்கள் கூறுவார்கள், அன்னையவர்களின் பொருட்டாலும், அவர்களது தந்தை அபுபக்கர் (ரலி) அவர்கள் பொருட்டாலும், இறைவன் நம் மீது பல நன்மைகளை அருளியுள்ளான், இந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தக் குடும்பத்தவர்கள் தான் காரணகர்த்தாக்கள் என்று அடிக்கடி கூறுவார்களாம்.

சற்று முன்பு தனது மகளைக் கடிந்து கொண்ட அபுபக்கர் (ரலி) அவர்கள் கூட இப்பொழுது தனது மகள் மீது இறைவன் சொறிந்த கருணை மழையைக் கண்டு புன்னகை பூக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் கூறினார்கள் : இந்த இறைவசனம் இறங்கும் வரைக்கும், இவ்வளவு பெரியதொரு அருட்கொடையை எனது மகளின் பொருட்டால் இறைவன் இறக்கி அருளுவான் என்று நான் நினைக்கவில்லை, இந்த அருட்கொடை எமக்கு மட்டும் உரித்தானதல்ல, மாறாக, உலக இறுதி நாள் வரைக்கும் தொடர்ந்து வரக் கூடியதல்லவா என்று தனது மகளுடன் இறைவன் இருந்து கொண்டிருக்கின்றான் என்பதை இட்டு எண்ணி எண்ணி அபுபக்கர் (ரலி) அவர்கள் மகிழ்ந்தார்கள். இன்னும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்தவர்களாக, தனது மகளுக்கு இறைவன் நீடித்த ஆயுளை வழங்க வேண்டும் என்றும், அதன் மூலம் இந்த முஸ்லிம் உம்மத் எண்ணற்ற அருட்கொடைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பிரார்த்தித்தார்கள்.

அன்றைய தினத்தினுடைய அதிகாலைத் தொழுகை நிறைவடைந்து, பயணத்திற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, கிளம்பிய ஒட்டகங்களின் ஒன்றின் கீழாக இருந்து, காணாமல் போன கழுத்து மாலை கண்டெடுக்கப்பட்டும் விட்டது.

பிரிவும், பதிலும்

ஹிஜ்ரி 9 ம் வருடம், இஸ்லாம் அரபுப் பிரதேசத்தையும் தாண்டி தனது ஆட்சிப் பரப்பை அதிகரித்துச் சென்று கொண்டிருந்தது. இஸ்லாத்தை ஆறத் தழுவிக் கொண்ட அரபுப் பூமியின் புதிய தலைநகராக மதீனத்துந்நபவி திகழ்ந்து கொண்டிருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாக, மிகவும் வசதி வாய்ப்புகளுடனும் வாழ்ந்திருந்த மனைவிமார்கள் சிலர், இப்பொழுது மதீனாவில் காணப்படும் செல்வச் செழிப்புக்கு ஈடாக தங்களுக்குக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் செலவுத் தொகைகள் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர். இறைத்தூதர் (ஸல்) அவர்களது மனைவிமார்களது உலகாதாய நோக்கம் கொண்ட இந்த கோரிக்கை இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சங்கடப்பட வைத்தது, கவலை கொள்ளச் செய்தது.

இதன் காரணமாக எந்த மனைவியரிடத்திலும் சேர்ந்திருப்பதில்லை என்று உறுதி பூண்டவர்களாக ஆயிஷா (ரலி) அவர்களது வீட்டினை ஒட்டிய அறையில் தங்கிக் கொண்டார்கள். இந்த கால கட்டத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் குதிரையில் இருந்து தவறி விழுந்ததன் காரணமாக சிறு காயமும் ஏற்பட்டிருந்தது. இந்த சூழ்நிலை இறைத்தூதர் (ஸல்) அவர்களது குடும்பத்தவர்களிடையே சிறு சலனத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது.

28 நாட்கள் முடிந்து, 29 ம் நாள் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் தங்கியிருந்த அறைக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வந்து, ஆயிஷாவே! நான் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள். பின் உங்களது பெற்றோர்களிடம் ஆலோசனை கலந்து விட்டு உங்களது முடிவினைச் சொல்லுங்கள் என்று கூறியவர்களாக, இந்த உலக வாழ்க்கையின் கஷ்டங்கள், வறுமை ஆகியவற்றையா அல்லது வசதியான வாழ்க்கையா.., இந்த இரண்டில் எது வேண்டும் என்பதை நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுங்கள். அதற்கு முன் இதுபற்றி உங்களது பெற்றோர்களுடன் கலந்தாலோசனை செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இதனைக் கேட்ட ஆயிஷா (ரலி) அவர்களது மனதில் இருந்து பட்டென பதில் வந்தது. நானும் என்னுடைய குடும்பத்தவர்களும், தேவை ஏற்படும் எனில் எங்களது வாழ்வையே உங்களுக்காக அற்பணம் செய்வதற்குத் தயாராகவே இருக்கின்றோம். இது விசயத்தில் எனது குடும்பத்தவர்களுடன் கலந்தாலோசனை செய்வதற்கு எந்த அவசியமுமில்லை. நான் என்னுடைய வாழ்வை உங்களுடன் வாழ்வதற்கே விரும்புகின்றேன், இந்த உலக வாழ்க்கையின் ஆடம்பரங்களை அல்ல என்று அன்னையவர்கள் கூறி முடித்தார்கள். இந்த பதிலைக் கேட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வதனத்தில் அழகிய புன்சிரிப்பு தவழ்ந்தது. அதன் பின் அல்லாஹ் கீழ்க்கண்ட வசனத்தை இறக்கி அருளினான் :

நபியே! உம்முடைய மனைவிகளிடம் "நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும், இதன் அலங்காரத்தையும் நாடுவீர்களானால், வாருங்கள்! நான் உங்களுக்கு வாழ்க்கைக்கு உரியதைக் கொடுத்து அழகிய முறையில் உங்களை விடுதலை செய்கிறேன். "ஆனால், நீங்கள் அல்லாஹ்வையும், அவன் தூதரையும், மறுமையின் வீட்டையும் விரும்புவீர்களானால், அப்பொழுது உங்களில் நன்மையாளர்களுக்காக அல்லாஹ் மகத்தான நற்கூலி நிச்சயமாக சித்தம் செய்திருக்கிறான்" என்றும் கூறுவீராக! (33:28-29)

ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஏற்பட்ட இந்த வாதங்கள் முடிவுற்ற பின், இறைத்தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் என்னிடம் பெற்றுக் கொண்ட இந்த பதிலை நீங்கள் மற்ற மனைவியர்களிடத்தில்

கூற வேண்டாம். அவர்கள் என்ன பதிலைச் சொல்கின்றார்கள் என்பதை நான் பார்க்க வேண்டும் என்று குலைந்தபடி ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களோ..! ஆயிஷாவே! நான் கற்பித்துக் கொடுக்கும் ஆசிரியனாகத் தான் என்னுடைய இறைவனால் அனுப்பப்பட்டுள்ளேனே தவிர, அடக்குமுறையாளனாக அல்ல..! அவரவர் முடிவில் தலையிடும் அதிகாரம் எனக்கில்லை என்று கூறி முடித்தார்கள்.

பின் மற்ற மனைவியர்களிடத்தில் அவரவர் விருப்பம் என்னவென்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கேட்ட பொழுது, அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் என்ன பதிலைக் கூறினார்களோ அதே பதிலையே மற்றவர்களும் கூற, மிக நீண்ட நாட்களாக வருத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த அந்தப் பிரச்னை ஒரு முடிவுக்கு வந்தது. மதீனாவைச் சூழ்ந்திருந்த இறுக்கமான சூழ்நிலை கலைந்து, மீண்டும் அமைதியும் மகிழ்ச்சியும் திரும்பியது.

இன்னும், அன்னையவர்கள் இருமுறை நேரடியாக வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களை நேரில் பார்த்திருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

### வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களைக் காணும் பாக்கியம் பெற்றவர்கள்

ஒரு சமயம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் குதிரையின் மீது அமர்ந்திருந்த ஒரு மனிதரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். (இதனைப் பார்த்த ஆயிஷா (ரலி) அவர்கள்) இறைத்தூதர் (ஸல்) அவர்களே! யார் அந்த மனிதர்? என்று வினவினார்கள். ஆயிஷா (ரலி) அவர்களின் கேள்வியை ஆச்சரியத்துடன் கேட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அந்த மனிதரை நீங்கள் பார்த்தீர்களா? என்று கேட்டு விட்டு, அவர் தான் ஜிப்ரீல் (அலை) அவர்கள், அவர்கள் மனித உருவில் வந்திருந்தார்கள், இன்னும் உங்களுக்கு அவர்கள் தனது ஸலாத்தை எத்தி வைத்து விடும்படி கேட்டுக் கொண்டார்கள் என்று கூறினார்கள். உடனேயே, யா அல்லாஹ்! எங்களது விருந்தினரும், இன்னும் உன்னுடைய கண்ணியமிக்க தூதுவருமான ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு நற்பேறுகளை வழங்குவாயாக! என்று பிரார்த்தித்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களது வீட்டில் தங்கியிருந்த சமயத்தில், ஜிப்ரீல் (அலை) அவர்கள் அங்கு வருகை தந்தது பற்றி அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் இந்த செய்தியில், ஒரு முறை ஆயிஷா (ரலி) அவர்களது வீட்டின் முன் முன்பின் அறியாத மனிதர் ஒருவர் நின்று கொண்டிருப்பதைப் பற்றி, தொழுது கொண்டிருந்திருந்த இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொழுது முடித்து விட்டு, வீட்டுக்கு வெளியில் வந்து பார்க்கின்றார்கள், யாரை எதிர்பார்த்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காத்திருந்தார்களோ, அந்த ஜிப்ரீல் (அலை) அவர்கள் தான் அங்கு வந்து நின்று கொண்டிருந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்களே! ஏன் நீங்கள் உள்ளே வர மறுக்கின்றீர்கள்..! உள்ளே வாருங்கள்..! என்று அழைக்கின்றார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்களோ, நாயும் இன்னும் உருவப் படங்களும் உள்ள இடங்களுக்கு நாங்கள் வர மாட்டோம் எனப் பதில் கூறுகின்றார்கள். பின்னர் வீட்டினுள் சென்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பார்த்த பொழுது, ஒரு பொம்மை வீட்டின் ஒரு மூலையில் கிடந்ததை அப்புறப்படுத்திய பின் வானவர் தூதர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களது வீட்டினுள் நுழைந்தார்கள்.

### நபிமொழி அறிவிப்பாளராக..!

இன்னும், அன்னையவர்களுக்கு இருந்த கல்வி ஞானத்தின் காரணமாக மிகச் சிறந்த உயர்ந்த அந்தஸ்திற்குரியவர்களாக திகழ்ந்தார்கள். மார்க்கத்தின் மிகவும் சிக்கலான பல கேள்விகளுக்கு பல நபித்தோழர்களும், பெண்களும் அன்னையிடம் வந்து அதற்கான விளக்கத்தையும் தெளிவையும் பெற்றுச் செல்லும் அளவுக்கு மார்க்க விசயங்களில் மிகவும் கற்றறிந்த மேதையாகத் திகழ்ந்தார்கள். இன்னும் ஸஹீஹான பல நபிமொழிகள் அன்னையின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் வாழ்ந்த இன்னும் அவர்களுடன் எப்பொழுதும் இருந்து கொண்டிருந்த பல நபித்தோழர்களில், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையை நமக்கு நபிமொழிகளாக அறிவித்த, இன்னும் தனிச்சிறப்பாக ஆயிரக்கணக்காக நபிமொழிகளுக்கு சொந்தக்காரர்களின் முதல் ஏழு நபித்தோழர்களின் வரிசையில் அன்னையவர்களும் இடம் பெற்றுள்ளார்கள்.

1. அபூஹுரைரா அப்துர் ரஹ்மான் பின் சகர் தோசி (ரலி) (5374 ஹதீஸ்கள்)
2. அப்துல்லா பின் உமர் பின் கத்தாப் (ரலி) – (2630 ஹதீஸ்கள்)
3. ஆயிஷா (ரலி) (2210 ஹதீஸ்கள்)
4. அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) (1660 ஹதீஸ்கள்)
5. ஜாபிர் பின் அப்துல்லா அன்ஸாரி (ரலி) (1540)
6. சஅத் பின் மாலிக் அபூ ஸயீத் அல் குத்ரீ (ரலி) (1540)
7. அனஸ் பின் மாலிக் (ரலி) (2286)

மற்ற பெண்களைக் காட்டிலும் அன்னையவர்கள் கல்வி ஞானத்தில் தேர்ச்சி பெற்ற முதல் தர பெண்மணியாகத் திகழ்ந்தார்கள் என்று இமாம் தகபி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். கல்வி ஞானம் பெற்றவர்களில் அவர் முதலாமவராகத் திகழ்ந்தார்கள். அன்னையைப் பற்றி மதிப்பிட வேண்டும் என்றால், அவர்கள் தனது இளமைக் காலத்தில் அபுபக்கர் (ரலி) போன்ற உன்னதமிக்க மனிதரைப் பெற்றோராகவும், இன்னும் தனது மணவாழ்க்கையை மிக இள வயதில் ஆரம்பித்து அதனை இறைத்தூதர் (ஸல்) அவர்களுடனும் வாழ்ந்த காரணத்தினால் அவர்களது வாழ்க்கையே ஒரு பாடப் புத்தகமாகத் திகழ்ந்ததே, அவர்களைக் கல்விக் கடலாகப் பரிணமிக்கச் செய்தது. இன்னும் இறைவனின் தூய ஞான ஒளியானது அன்னைக்கு நேரடியாக இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மூலமாகக் கிடைத்ததும், இன்னும் அவர்களின் பொருட்டு இறைவன் பல முறை பதில் தந்திருக்கின்றான், தனது திருவசனங்களை அன்னையின் பொருட்டால் அருள் செய்திருக்கின்றான் என்பதிலிருந்து, உலகத்துப் பெண்களில் அன்னையவர்கள் ஒலிக் கீற்றாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றால் அதில் மிகையில்லை.

கலீபாக்களின் ஆட்சிக் காலத்தில் அன்னையவர்களின் மார்க்க தீர்ப்புகள் (ஃபத்வாக்கள்) ஏற்றுக் கொள்ளப்பட்டன. சொத்துப் பங்கீடு விசயத்தில் அன்னையவர்கள் மிகச் சிறந்த கல்வி ஞானத்தைப் பெற்றிருந்த காரணத்தினால், மக்கள் அதில் ஏற்படும் சந்தேகங்களுக்கு அன்னையை அணுகக் கூடியவர்களாக இருந்தார்கள். சொத்துப் பங்கீடு விசயத்தில் மிகவும் சிக்கலான பிரச்னைகளுக்கு அன்னையவர்கள் மிக எளிதாக, அதனை தீர்த்து வைக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். உர்வா பின் சுஹைர் (ரலி) என்பவர் அன்னையவர்களின் உடன் பிறந்த சகோதரியின் மகனாவார், இவர் மார்க்க விசயங்களில் ஏற்படும் சந்தேகங்களுக்கு அன்னையிடம் சென்று பதில் பெற்று வரக் கூடியவராக இருந்தார். இன்னும் அஸ்மா (ரலி) அவர்களின் மகனார், அன்னைக்கு மஹரமானவர் என்பதால், எந்த நேரமும் அன்னையிடம் சென்று மார்க்க விசயங்களில் ஏற்படும் சந்தேகங்களுக்கு பதில் பெற்று வரக் கூடியவராக இருந்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) இறுதிக் கணமும், அன்னையும்..,

ஆயிஷா (ரலி) அவர்களுக்கிருந்த மார்க்க விசய ஞானம், இன்னும் சிறப்பான குணநலன்கள் ஆகியவற்றின் காரணமாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னையவர்கள் மீது அலாதியான அன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தார்கள். ஒரு சமயம் இறைத்தூதர் (ஸல்) அவர்களும் உடல் நலமற்றிருந்தார்கள், அன்னையவர்களும் உடல் நலமற்றிருந்தார்கள். அப்பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஆயிஷாவே! எனக்கு முன்பாக நீங்கள் இறந்து விட்டீர்கள் என்று சொன்னால், நானே உங்களைக் குளிப்பாட்டுவேன், நானே உங்களுக்கு கஃபன் இடுவேன், இன்னும் நானே உங்களை மண்ணறைக்குள் இறக்கி வைப்பேன் இன்னும் உங்களுக்காக நான் பிரார்த்தனையும் செய்வேன் என்று கூறினார்கள். இதனைக் கேட்ட அன்னையவர்கள், எனது மரணத்தை நீங்கள் கொண்டாடுவீர்கள் போலிருக்கின்றதே! என்று வேடிக்கையாகக் கேட்டு விட்டு, உங்களுக்கு முன் நான் மரணித்து விட்டால், நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த வீட்டிற்கு ஒரு புது மனைவியைக் கொண்டு வந்து விடுங்கள் என்று கூறினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னையைப் பார்த்து புன்முறுவல் பூத்தார்கள், உடல் நலம் தேறாமலேயே தன்னைப் படைத்தவனிடம் சென்று சேர்ந்தார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்கள்..!

என்னுடைய முறையின் பொழுது எனது வீட்டில் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில், அதுவும் எனது மடியில் வைத்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணித்தது கண்டு நான் பெருமைப்படுகின்றேன், அதனைப் பாக்கியமாகவும் கருதுகின்றேன் என்று அன்னையவர்கள் பெருமையோடு கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அன்னையவர்களின் சகோதரர் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அந்த இறுதிக் கணங்களில் அன்னையவர்களின் இல்லத்தில் நுழைகின்றார்கள். நுழைந்தவரின் கையில் பல் துலக்கக் கூடிய மிஸ்வாக் குச்சி இருக்கின்றது. அந்த மிஸ்வாக் குச்சியை ஆசையுடன் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பார்க்கின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் விருப்பத்தை அறிந்து கொண்ட அன்னையவர்கள், உங்களுக்காக மிஸ்வாக்கைக் கொண்டு பல் துலக்க ஆசையாக இருக்கின்றதா? எனக் கேட்க, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சைகையால் சம்மதம் தெரிவிக்க, அன்னையவர்கள் தனது சகோதரரிடமிருந்து மிஸ்வாக்கைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த மிஸ்வாக் கடினமாக இருந்த காரணத்தால் அன்னையவர்கள் தனது பற்களால் கடித்து, அந்த மிஸ்வாக்கை மிருதுவாக்கி, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பற்களை துலக்கி சுத்தப்படுத்தி விடுகின்றார்கள். அருகில் இருந்த பாத்திரத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது கைகளை நனைத்து அடிக்கடி தனது முகத்தில் தடவிக் கொண்டே..,

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, மரணம் அதிக வேதனையுடையதாக இருக்கின்றது.

பின் தனது விரல்களை உயரே சுட்டிக் காட்டியவர்களாக, மிகச் சிறந்த நண்பரை நோக்கி (நான் விரைகின்றேன்) என்று கூறினார்கள்.

அது கணமே, உடல் என்னும் கூட்டுக்குள் சிறையிருந்த உயிர், வல்லோனை நோக்கி விரைந்தது.

### கனவு நிறைவேறுதல்

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறப்பதற்கு முன் அன்னையவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அந்தக் கனவில் மூன்று நிலவுகள் அன்னையின் இல்லத்தில் இறங்குவதாகக் கண்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்த பொழுது, அன்னையவர்களின் இல்லத்தில் தான் அவர்களது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இன்னும், அன்னையவர்கள் கண்ட கனவில் தோன்றிய மூன்று நிலவுகளில், ஒரு நிலவு அவர்களது இல்லத்தை ஒளியூட்டிக் கொண்டிருப்பதன் மூலம் அவர்கள் கண்ட கனவின் ஒரு பகுதி நிறைவடைந்து விட்டது என்று அபுபக்கர் (ரலி) அவர்கள் அந்தக் கனவின் விளக்கத்தைக் கூறினார்கள். பின்னர் அன்னையவர்களின் தந்தையாரான அபுபக்கர் (ரலி) அவர்கள் இறந்த பொழுது, தனது ஆருயிர்த் தோழர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். பின் உமர் (ரலி) அவர்களும் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டதுடன், அன்னையவர்களின் கனவு நிறைவேறியது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் யார் மீது அதிகமான அன்பு கொண்டிருந்தார்களோ, இன்னும் அவர்களது அதிக விருப்பத்திற்கு உரியவராக இருந்தார்களோ, அந்த அன்னையவர்களின் இல்லத்திலேயே அவர்களது உயிரும் பிரிந்தது என்று இமாம் தகபி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆம்! இதன் மூலம் தனது விருப்பத்திற்குரிய மனைவியான ஆயிஷா (ரலி) அவர்களதும், இன்னும் தனது விருப்பத்திற்குரிய இடமுமான அன்னையவர்களின் இல்லத்திலேயே இறந்தார்கள், அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அன்னையவர்கள் ஹிஜ்ரி 58 ஆம் ஆண்டு இந்த மண்ணுலகை விட்டு, சொர்க்கச் சோலைகளை நாடிச் சென்று விட்டார்கள். தனது 66 ம் வயதில் ரமளான் மாதம் 17 ஆம் நாள் மரணமடைந்தார்கள்.

இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மதீனாவில் ஜன்னத்துல் பக்கீ என்ற நல்லடக்க பூமியில் அன்னையவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அபூஹுரைரா (ரலி) அவர்கள் அன்னையவர்களுக்கு இறுதித் தொழுகையை முன்னின்று நடத்தினார்கள். அப்துல்லா பின் முஹம்மது பின் அப்துர்ரஹ்மான் பின் அபூபக்கர் சித்தீக் (ரலி) மற்றும் அப்துல்லா பின் அப்துர்ரஹ்மான் பின் அபூபக்கர் சித்தீக் (ரலி) ஆகிய இருவரும் அன்னையின் உடலை மண்ணறைக்குள் வைத்தனர்.

**(ஆனால், அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்). (89:27-30)**

## அன்னை ஸெளதா பின் ஸமாஆ (ரலி)

கதீஜா (ரலி) அவர்களின் மரணத்தை அடுத்து இறைத்தூதர் (ஸல்) அவர்களது வாழ்க்கைத் துணைவியாக வாழ்க்கைப்பட்ட இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களின் வரிசையில், ஸெளதா பின் ஸமாஆ (ரலி) அவர்கள் இருந்தார்கள். இறைநம்பிக்கை, கீழ்ப்படிதல் மற்றும் அர்ப்பணம் ஆகியவற்றில் தாயவர்கள் மிகச் சிறந்த இடத்தை வகித்தார்கள். இவர்களது எளிமை மற்றும் சுயநலமில்லாத தயாள

குணம் ஆகிய நற்குணங்கள் ஆயிஷா (ரலி) அவர்களது மனதை மிகவும் கவர்ந்ததாக இருந்தது. ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய மக்களில் ஒருவராகவும், இன்னும் இருமுறை ஹிஜ்ரத் செய்த பாக்கியத்தைப் பெற்றவர்களுமாவார்கள். ஒருமுறை அபிசீனியாவிற்கும் இன்னுமொரு முறை மதீனாவிற்கும் ஹிஜ்ரத் சென்றார்கள். இவர்களது வாழ்வு, உலகத்துப் பெண்மணிகளுக்கோர் முன்னுதாரணமாகும்.

ஸௌதா பின் சமாஆ (ரலி) அவர்களது தாயார் குறைஷிகளின் பனூ நஜ்ஜார் என்ற குலத்தைச் சார்ந்தவர்கள், தந்தையும் குறைஷிக் குலத்தில் பனூ ஆமிர் பின் லூய் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவராவார். ஸௌதா பின் சமாஆ (ரலி) அவர்கள் முதலில் சக்ரான் பின் அமர் என்பவரையும், இந்த முதல் கணவரது மரணத்தை அடுத்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களையும் மணந்தார்கள். இவருடைய முதல் கணவரது சகோதரர்களான சுஹைல், சஹல், ஹதீப் மற்றும் சலீத் ஆகியோர்கள் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டவர்களின் பட்டியலில் உள்ள மிகச் சிறப்புப் பெற்ற நன்மக்களாவார்கள். இன்னும் இவர்கள் அபிசீனியாவிற்குச் சென்ற ஹிஜ்ரத்தின் இரண்டாவது குழுவிலும் அடுத்து வந்த மதீனா ஹிஜ்ரத்திலும் இடம் பெற்ற சிறப்பிற்குரியவர்களுமாவார்கள். அபீசீனியாவில் வைத்து, அன்னையவர்களுக்கு அப்துர் ரஹ்மான் என்ற ஆண் மகவும் பிறந்தது. மக்காவிற்குத் திரும்புவதற்கு முன் ஒரு குறிப்பிட்ட கால அளவு அபிசீனியாவில் அன்னையவர்கள் தங்கியிருந்தார்கள்.

ஒருநாள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னையவர்களது இல்லத்தில் நுழைந்து, அன்னையின் கழுத்தைப் பற்றிப் பிடிப்பது போலக் கனவு கண்டார்கள். தான் கண்ட கனவினைத் தனது கணவரிடம் எடுத்துரைத்த பொழுது, நான் இறந்தவுடன் நீ இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்து கொள்வாய் என்று அந்த கனவுக்கு, அவரது கணவர் விளக்கமளித்தார்கள். இன்னுமொரு சமயத்தில், அவர்களது மடியில் நிலவு வந்து இறங்குவது போன்றும் கனவு கண்டார்கள். இதனையும் தனது கணவர் சக்ரான் (ரலி) அவர்களிடம் தெரிவித்த பொழுது, மேலே உள்ள விளக்கத்தையே மீண்டும் கூறினார்கள். இன்னும் எனது மரணம் நெருங்கி விட்டது, எனது மரணத்திற்குப் பின் நீங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்து கொள்ளுங்கள் என்று கூறிய சில நாட்களிலேயே நோய்வாய்ப்பட்டு மரணத்தையும் தழுவினார்கள். தனது கணவர் இறந்தவுடன், வாழ்க்கையில் எந்த அர்த்தமுமில்லாமல் இருப்பதாக உணர்ந்து, அன்னையவர்கள் மிகவும் கவலையில் தோய்ந்து போனார்கள்.

அன்னையவர்களின் தோழியர்களில் கவ்லா பின்த் ஹகீம் (ரலி) அவர்கள் மிகச் சிறப்புப் பெற்றவர்கள், இவர்கள் உத்மான் பின் மத்ஆன் (ரலி) அவர்களது தாயாருமாவார். ஒருநாள் இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சந்திக்கச் சென்ற கவ்லா (ரலி) அவர்கள், கணவரை இழந்து நான்கு பெண் பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு தனிமையில் மிகவும் சிரமப்படும் அன்னை ஸௌதா (ரலி) அவர்களது அவல நிலையையும், இன்னும் கதீஜா (ரலி) அவர்கள் இறந்த பின் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அடைந்திருக்கும் துன்ப நிலையையும் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள் கவ்லா (ரலி) அவர்கள். அப்பொழுது, கதீஜா (ரலி) அவர்களைப் பற்றி கவ்லா (ரலி) அவர்கள் சொன்னவற்றை ஆமோதித்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஆம்! நீங்கள் சொன்னது போலவே அவர்கள் மிகவும் சிறந்த பெண்மணி தான்.

இன்னும் நீங்கள் கதீஜா (ரலி) அவர்களது நினைவிலேயே இருந்தால் என்னாவது? நீங்கள் திருமணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் கவ்லா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு ஆலோசனை கூறினார்கள்.

என்னை யார் மணந்து கொள்வார்கள், இன்னும் எனது மக்களையும் என்னைப் போலவே யார் கவனித்துக் கொள்வார்கள் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

அந்தக் கவலையை நீங்கள் விடுங்கள், நீங்கள் திருமணம் முடித்துக் கொள்ளச் சம்மதித்தீர்கள் என்று சொன்னால், நான் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் நபரை அனுகி விபரத்தைக் கேட்டறிந்து அவர்களது சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு திரும்புகின்றேன் என்று கவ்லா (ரலி) அவர்கள் கூறினார்கள். இன்னும் அவர்கள் தேர்ந்தெடுத்து வைத்திருக்கின்ற நபரைப் பற்றியும் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கூறிய கவ்லா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களது சம்மதத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களது சம்மதத்தைப் பெற்றுக் கொண்ட கவ்லா (ரலி) அவர்கள், நேரே ஸெளதா (ரலி) அவர்களிடம் வருகின்றார்கள்.

ஸெளதாவே! உங்களுக்கு நான் ஒரு சந்தோஷமான செய்தியைக் கொண்டு வந்திருக்கின்றேன் என்று சொன்ன கவ்லா (ரலி) அவர்கள், அந்தச் சந்தோஷமான செய்தி என்னவென்று அவர்களுக்குச் சொன்னவுடன், அதனை ஏற்றுக் கொண்டு, இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதம் தெரிவித்த அவர்கள், எதற்கும் நான் என்னுடைய தந்தையிடம் கலந்தாலோசனை செய்து என்னுடைய இறுதி முடிவைச் சொல்கின்றேன் என்று கூறினார்கள். நிச்சயமாக இந்தச் செய்தியைக் கேட்டவுடன், சந்தோஷப்படக் கூடிய முதல் மனிதர் அவராகத் தான் இருக்க முடியும், ஆம்! விதவையான தன்னுடைய மகள் தன்னுடைய உயிரை விடவும் மேலான தன்னுடைய தோழர் இறைத்தூதர் (ஸல்) அவர்களை அல்லவா மணமுடிக்கப் போகின்றார்.

ஸெளதா (ரலி) அவர்களது சம்மதத்தையும் பெற்றுக் கொண்ட கவ்லா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்று இந்த சந்தோஷமான செய்தியைக் தெரிவிக்கின்றார்கள். இரு பக்கமும் சம்மதம் பெற்றுக் கொண்டவுடன், மிக விரைவாகவே திருமண வேலைகள் நடந்தன. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னை ஸெளதா (ரலி) அவர்களுக்கு 400 திர்ஹம்களை மஹராகக் கொடுத்தார்கள்.

இந்தத் திருமண நிகழ்ச்சியை சந்தோஷமாகக் கொண்டாட வேண்டிய அன்னையின் சகோதரன் அப்துல்லா என்பவர், ஏதோ நடக்கக் கூடாத ஒன்று நடந்து விட்டதைப் போல, தன்னுடைய தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டு, அந்த அறியாமைக் காலப் பழக்கத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்தார். பின்னாளில், அவர் இஸ்லாத்தைத் தழுவிய பின்பு.., தான் செய்த அந்த மூடப்பழக்கத்தை எண்ணி எண்ணி அவர் வருந்தியும் இருக்கின்றார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தமக்கையை மணமுடித்ததன் மூலம், தங்களைக் கௌரவப்படுத்தி விட்டதாக இப்பொழுது உணர ஆரம்பித்தார்.

***********************

இப்பொழுது, திருமண முடிந்து விட்ட நிலையில் ஸெளதா (ரலி) அவர்கள் கதீஜா (ரலி) அவர்கள் வாழ்ந்த வீட்டிற்கு குடித்தனம் வந்தார்கள். அங்கு தான் கதீஜா (ரலி) அவர்களுக்குப் பிறந்த மகள்களான உம்மு குல்தூம் (ரலி), ஃபாத்திமா (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். தனது முதல் கணவர் இறந்ததன் பின் இப்பொழுது தான் தன்னுடைய வாழ்வுக்கு ஒரு அர்த்தம் கிடைத்திருப்பதாக உணர்ந்தார்கள், பாதுகாப்பை அனுபவித்தார்கள். மேலும் தன்னுடைய அபிசீனிய ஹிஜ்ரத்தின் பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மகள்களில் ஒருவரான ருக்கையா (ரலி), அவர்களது கணவர் உதுமான் பின் அஃப்ஃபான் (ரலி) அவர்களைப் பற்றியும், அந்த கடந்த கால அனுபவங்களைப் பற்றியும், இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள்,

தனது மகள் பெற்ற அந்த கஷ்டமாக வாழ்வை நினைத்து, மிகவும் ஆவலுடன் அந்த அனுபவங்களை அன்னையிடம் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஒரு சமயம்! இறைத்தூதர் (ஸல்) அவர்களது முதல் மனைவியான கதீஜா (ரலி) அவர்கள் இறந்து விட்ட நேரம் அது! இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மகள்களில் ஒருவரான ருக்கையா (ரலி) அவர்கள், ஹிஜ்ரத்திலிருந்து – அபிசீனியாவிலிருந்து திரும்பி மக்காவிற்கு வருகின்றார்கள். தனது உடன் பிறந்த தங்கையை எதிர்கொண்டு இருவேறு நிலைகளில் ஃபாத்திமா (ரலி) அவர்களும், உம்மு குல்தூம் (ரலி) அவர்களும் வரவேற்கின்றார்கள். மிக நீண்ட காலங்கள் கழித்து தனது உடன் பிறந்தாளைக் காண்கின்ற சந்தோஷம், அதே நேரத்தில் தங்களது பாசத்திற்குரிய தாயை இழந்த துயரத்துடன், அந்த சோகமான நிகழ்வுக்குப் பின் முதன் முதலாக இப்பொழுது தான் ருக்கையா (ரலி) அவர்களைச் சந்திக்கவும் செய்கின்றார்கள்.

சௌதா (ரலி) அவர்கள் வாசலுக்கு வந்து, ருக்கையா (ரலி) அவர்களை ஆறத் தழுவி வரவேற்றார்கள். ருக்கையா (ரலி) அவர்கள் அபிசீனியாவில் இருந்த பொழுது நினைத்துப் பார்த்திராத சம்பவம் ஒன்று தங்களது வாழ்வில் நடந்திருப்பதை இப்பொழுது தனது கண்களால் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது தான் சௌதா (ரலி) அவர்களைத் தனது தாயாகவும், தான் அவர்களது மகளாகவும் மாறி இருப்பதை எண்ணி எண்ணி சந்தோசமடைந்தார்கள் ருக்கையா (ரலி) அவர்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு இந்த நாள் மிகவும் சந்தோஷமான, தனது உள்ளத்தை நிறைத்து விட்ட காட்சியாக அந்தக் காட்சி அமைந்து விட்டிருந்தது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மகள் மூலமும், மருமகன் உதுமான் (ரலி) அவர்கள் மூலமும் நஜ்ஜாஸி மன்னனிடம் தஞ்சம் புகுந்திருக்கும் தனது தோழர்களின் நிலை பற்றியும், அங்கு என்னென்ன நடந்து கொண்டிருக்கின்ற என்பது பற்றியும் கேட்டறிந்து கொண்டார்கள்.

ஆனால் மக்காவின் நிலை மிகவும் வேகமாக மோசமடைந்து கொண்டிருந்தது. குறைஷிகள் தங்களது கொடூரமான தாக்குதலை இறைத்தோழர்கள் மீதும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதும் மிகவும் கடுமையாகக் கட்டவிழ்த்து விட்டிருந்தார்கள். ஒவ்வொரு நாளும் புதுப் புது செய்திகள் மக்காவை நிறைத்துக் கொண்டிருந்தன. அந்தச் செய்திகளில் இறைத்தோழர்களை எவ்வாறெல்லாம் விதவிதமாக மக்கத்துக் குறைஷிகள் கொடுமைப்படுத்தியும், சித்தரவதைகள் செய்து கொண்டிருந்தார்கள் என்பதையும் உரத்துச் சொல்லிக் கொண்டிருந்தது. இப்பொழுது, இந்த அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள், கொடுமைகள், சித்தரவதைகள் ஆகியவற்றிலிருந்து நிவாரணம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், ஹிஜ்ரத் செய்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

இந்த நிலையில், அத்தனை சூழ்நிலைகளையும் எடைபோட்டுப் பார்த்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், இந்தக் கொடுமைகளிலிருந்து தனது தோழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால், தனது தோழர்களுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு அறிவுறுத்துவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை, எனவே, இப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களை மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்யுமாறு உத்தரவிட்டார்கள்.

சில நாட்களிலேயே இறைத்தூதர் (ஸல்) அவர்களையும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து செல்லுமாறு அல்லாஹ் உத்தரவிட்டான். இறைவனின் கட்டளை கிடைத்ததும், தனது உற்ற தோழர் நன்னம்பிக்கையாளர் அபுபக்கர் (ரலி) அவர்களுடன் தனது ஹிஜ்ரத் பயணத்தை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அமைத்துக் கொண்டார்கள். மதீனாவை அடைந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அபூ அய்யூப் அல் அன்சாரி (ரலி) அவர்களது வீட்டில் தங்கினார்கள். மதீனாவில் தனது இருப்பிடத்தைக்

அமைத்துக் கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தனது ஆருயிர்த் தோழர்களான ஜைத் பின் ஹாரிதா (ரலி) மற்றும் அபூ ரா.ஃபிஆ (ரலி) ஆகியோர்களை அழைத்து, அவர்களிடம் சில ஒட்டகங்களையும், 500 திர்ஹம்களையும் கொடுத்து, மக்காவில் இருக்கும் தனது குடும்பத்தவர்களை அழைத்து வரும்படி பணித்தார்கள்.

அவர்கள் எப்பொழுது மக்காவை அடைந்தார்களோ, உடனேயே இறைத்தூதர் (ஸல்) அவர்களது குடும்பத்தவர்களான அவர்களது மனைவி சௌதா (ரலி), மற்றும் மகள்களான ருக்கையா (ரலி), உம்மு குல்தூம் (ரலி), ஃபாத்திமா (ரலி) ஆகியோர்களையும், இன்னும் ஜைத் பின் ஹாரிதா (ரலி) அவர்களது மனைவியான உம்மு ஐமன் (ரலி) அவர்களது மகன் உஸாமா (ரலி) ஆகியோர்களையும் இந்தப் பயணத்தில் இணைத்துக் கொண்டு, மதீனாவை நோக்கி பயணமானார்கள். இவர்கள் அனைவரும் மதீனாவை அடைந்தவுடன், அனைவரையும் நபித்தோழர் நு.ஃமான் அன்சாரி (ரலி) அவர்களது வீட்டில் தங்க வைத்தார்கள். மதீனாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த ஆரம்ப கால கட்டத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களையும் மணந்து கொண்டார்கள்.

பின்பு, அன்னை ஹ.ஃப்ஸா பின் உமர் (ரலி), ஜைனப் பின் ஜஹஸ் (ரலி), உம்மு சல்மா (ரலி) இன்னும் மற்ற அன்னையர்களையும் மணந்து கொண்டார்கள்.

இப்பொழுது மதீனா நகரம் மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. அரபுத் தீபகற்பத்தில் மதீனா சிறப்புக்குரிய நகரமாக, அதிலும் முஸ்லிம்களின் தலைமைப் பீடமாக வளர்ந்து கொண்டிருந்தது. வானவர் தூதர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அடிக்கடி வந்து சென்று போய்க் கொண்டிருக்கின்ற தளமாக மதீனா விளங்கிக் கொண்டிருந்தது.

நாட்கள் வேகமாக நகர்ந்ததில், அன்னை சௌதா (ரலி) அவர்களுக்கு மிகவும் அதிக வயதாகி முதுமை அடைந்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது, தனக்கு அதிக முதுமை ஆகி விட்டதன் காரணமாக எங்கே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னை மணவிலக்குச் செய்து விடுவார்களோ என்ற பயமும் அதிகரித்தது. எனவே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னுடன் தங்கியிருக்கக் கூடிய தனக்காக ஒதுக்கப்பட்ட நாளை, ஆயிஷா (ரலி) அவர்களுக்குக் கொடுத்தார்கள். இந்த நேரத்தில் அன்னையைக் குறித்து இறைவன் ஒரு வசனத்தை இறக்கியருளினான் :

ஒரு பெண் தன் கணவன் தன்னை வெறுத்து விடுவான் என்றோ அல்லது புறக்கணித்து விடுவான் என்றோ பயந்தால், அவர்கள் இருவரும் தங்களுக்குள் (சமாதானமான) ஒரு முடிவைச் செய்து கொண்டால் அவ்விருவர் மீது குற்றமில்லை அத்தகைய சமாதானமே மேலானது (4:128)

இப்பொழுது முன்னைக் காட்டிலும் ஆயிஷா (ரலி) அவர்கள் சௌதா (ரலி) அவர்களுடன் மிகவும் நெருக்கமாகி விட்டார்கள். அன்னை சௌதா (ரலி) அவர்களின் இதயம் மிகவும் சுத்தமானது, அதில் போட்டிகளுக்கோ பொறாமைகளுக்கோ இடம் கிடையாது.

சௌதா (ரலி) அவர்கள் மிகவும் உயரமாக வளர்ந்திருப்பார்கள், இன்னும் ஆரோக்கியமான நகைச்சுவைக் குணமுடையவர்கள். ஒருமுறை சௌதா (ரலி) அவர்கள் எவ்வாறு இரவுத் தொழுகையை நிறைவேற்றினார்கள் என்பதை, இப்னு சஅத் (ரலி) அவர்கள் நமக்குக் கற்றுத் தருகின்றார்கள்.

மிக நீண்ட அந்த இரவுத் தொழுகையின் போது இறைவன் மீது கொண்ட அச்சத்தின் காரணமாக தனது நாடி நரம்புகள் யாவும் புடைத்து, சுவாசக் குழாயின் நரம்புகள் வெடித்து எங்கே மூக்கின்

வழியாக இரத்தம் வழிந்தோடி விடுமோ என்ற அளவுக்கு தான் உணர்ந்ததாக அன்னையவர்கள் மறுநாள் காலையில் இப்னு சஅத் (ரலி) அவர்களிடம் தெரிவித்தார்கள்.

அவர்களது உருவத் தோற்றம் இறைத்தூதர் (ஸல்) அவர்களை குதூகலத்தில் ஆழ்த்தி, சிரிப்பை வரவழைத்து விடும். அன்னையவர்கள் மிகவும் எளிமையான, பழகுவதற்கு பண்பான குணமுடையவர்கள்.

இயற்கையிலேயே அன்னையவர்கள் மிகவும் மெதுவாக ஆடி அசைந்து நடக்கக் கூடியவர்கள். இதனால் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் ஒரு ஹஜ்ஜில் கலந்து கொண்டிருந்த பொழுது, கூட்ட நெரிசலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, முஸ்தலிபாவிலிருந்து மிக விரைவாக மினாவுக்குச் சென்று கல்லெறிவதற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சிறப்பு அனுமதியைப் பெற்றார்கள்.

தஜ்ஜாலைப் பற்றி இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் முதன்முதலாக அறிந்து கொண்டு, கதிகலங்கியவர் அன்னையவர்கள் தான். அன்னையவர்களின் உடலமைப்பையும், எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மையையும் வைத்து, மற்றவர்கள் அவரை உணர்ச்சி வசப் பட வைத்து, பின்பு அதனையிட்டு கேலி செய்து சிரித்து மகிழ்வார்கள்.

ஒருமுறை ஆயிஷா (ரலி) அவர்களும் அன்னை சௌதா (ரலி) அவர்களும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் அன்றைய தினம் ஒரு சிறப்பு உணவைத் தயாரித்து பின்னவரான சௌதா (ரலி) அவர்களுக்குக் கொடுக்க வந்தார்கள். ஆனால் அன்னையவர்கள் தனக்கு வேண்டாம் என மறுத்துக் கொண்டிருந்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்களோ அப்பொழுது மிகவும் இளமைத்துடிப்புடன் உள்ள சிறுமியாகத் தான் இருந்தார்கள். எனவே, தான் செய்த அந்த உணவை கண்டிப்பாகச் சாப்பிட்டே ஆக வேண்டும் என அடம் பிடித்து, வலுக்கட்டாயமாக அதனை அன்னையர்வர்களுக்கு ஊட்டி விட முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அன்னையவர்கள் மறுக்க, ஆயிஷா (ரலி) அவர்கள் வலுக்கட்டாயமாக முயற்சித்துக் கொண்டிருக்க, இறுதியில் அந்த உணவு அன்னையவர்களின் முகத்தில் கொட்டி விட்டது.

இன்றைக்கு அக்கா தங்கைகளுக்கிடையே இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்குமென்று சொன்னால் அன்றைக்கு வீடே இரண்டு பட்டுப் போயிருக்கும். ஆனால் சக்களத்திகளாக அவர்கள் இருந்தும், எந்தவித கெட்ட எண்ணமோ, பொறாமைக் குணங்களோ அவர்களிடம் இல்லாமல், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து சந்தோஷமான வாழ்வை வாழ்ந்தார்கள். இந்தக் கலவரங்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, பாங்கு சப்தம் கேட்டு விட்டால் தன்னுடைய குடும்பத்தவர்களுடன் இருந்து கொண்டிருக்கிறோம் என்ற பிரக்ஞையே இல்லாத அளவுக்கு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விறுவிறு என்று பள்ளிவாசலை நோக்கி நடக்க ஆரம்பித்து விடுவார்கள்.

பத்ர் யுத்தத்தின் பொழுது நடந்த கீழ்க்கண்ட இந்த நிகழ்ச்சி அத்தபரி, காமில் - இப்னு அதீர் மற்றும் சீறா இப்னு ஹிஸாம் ஆகியவற்றிலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது

அதாவது, முஸ்லிம் படை பத்ர் யுத்தத்தில் வெற்றி பெற்றுத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. போரில் பிடிபட்ட எதிரிகளில் அன்னையவர்களின் முதல் கணவராக சக்ரான் பின் அம்ர் (ரலி) அவர்களது சகோதரர் சுஹைல் பின் அம்ர் அவர்களும் ஒருவராக இருந்தார். பிடிபட்ட எதிரிகளை கைது செய்து மதீனாவுக்கு அழைத்து வந்து கொண்டிருந்தார்கள். அவ்வாறு அழைத்து வரப்பட்ட சுஹைல் பின் அம்ர் அவர்கள், மாலிக் பின் தாக்தம் (ரலி) அவர்களது பொறுப்பில் வந்து கொண்டிருந்தார்கள்.

அந்த நிலையில், தானாக தன்னை விடுவித்துக் கொண்டு, சுஹைல் தப்பித்து விட்டார். இந்த விஷயம் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு எட்டியவுடன், முழு இராணுவப் படையையும் நிற்கச் சொல்லி விட்டு,

தப்பித்துப் போன அந்தக் கைதியைப் பிடித்து வரும் வரை இராணுவம் இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் உத்தரவிடுகின்றார்கள். இந்த உத்தரவைப் பெற்றுக் கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்களது தோழர்கள், தப்பித்துப் போனவரைத் தேடி அலைந்து, இறுதியில் ஒரு மரத்திற்குப் பின் ஒளிந்து கொண்டிருந்த சுஹைலைக் கைது செய்து, அவரது கைகளைக் கட்டி, அதனை கழுத்துடன் பிணைத்து இழுத்து வந்தார்கள். இந்த நிலையிலேயே மதீனாவிற்குள்ளும் அழைத்து வந்தார்கள்.

இந்தக் கோரக் காட்சியைப் பார்த்த அன்னையவர்கள், சுஹைலினுடைய அந்த இழிநிலையைப் பார்த்த அன்னையவர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்களாக, இந்த இழிநிலையைப் பார்த்துக் கொண்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் நான் கண்ணியமான முறையில் இறந்திருக்க வேண்டுமே! அதுவே மேலானது, அவமானம்..! என்று வாய் தவறிக் கூற ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள் கூறிய இந்த வார்த்தைகளை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் செவிமடுக்கக் கூடும் என்பதை அன்னையவர்கள் அறியவில்லை. அன்னையவர்கள் கூறிய இந்த வார்த்தை இறைத்தூதர் (ஸல்) அவர்களை மிகவும் புண்படுத்தி விட்டது.

நீங்கள் என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள். நீங்கள் கூறிய இந்த வார்த்தை அல்லாஹ்வின் மற்றும் இறைத்தூதராகிய என்னுடைய எதிரியுமான இவர்களை உசுப்பேத்தி விடக் கூடியதாக இருக்கின்றதே! இன்னும் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் எதிர்த்துப் போர் புரிகின்ற எதிரிகள் எவ்வாறு கண்ணியமான முறையில் மரணமடைய முடியும்?

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்தக் கேள்வி அன்னையவர்களை வெட்கப்படச் செய்தது, உடனே அவர்கள் தன்னுடைய அந்த செயலுக்காக வருத்தம் தெரிவித்தார்கள். மன்னிப்புக் கோரினார்கள். என்னுடைய இந்த வார்த்தை இவ்வளவு மோசமானதாக இருக்கும் என நினைக்கவில்லை, கைதிகள் கொண்டு வரப் பட்ட அந்தக் காட்சியைப் பார்த்தவுடன், என்னுடைய மூளையில் உதித்ததை நான் கொட்டி விட்டேன் என்று வருத்தப்பட்டுக் கூறினார்கள். இன்னும் நான் கூறியது இறைமார்க்கத்திற்கு எந்த வகையிலாவது பாதகமாக இருக்குமென்று சொன்னால், இன்னும் அல்லாஹ்வினதும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களதும் உத்தரவுக்கு நான் கட்டுப்படுகின்றேன், அதாவது என்ன தண்டனை கொடுத்தாலும் அதனை நான் ஏற்கத் தயாராக இருக்கின்றேன் என்று கூறி, தனது பணிவையும், கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் புன்னகைத்தவர்களாக, பிடிபட்ட கைதிகளை நல்ல விதமாக நடத்தும்படி உத்தர விட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களது இந்த உத்தரவைச் செவி மடுத்த தோழர்கள், அது நிமிடம் முதல் கைதிகளுக்கு உணவு பரிமாறி விட்டுத் தான், அவர்கள் சாப்பிட ஆரம்பித்தார்கள். நபித்தோழர்களது இந்த பண்பாடான செயல்களால், அதனால் கவரப்பட்டு பல இறைநிராகரிப்பாளர்கள் இஸ்லாத்தினுள் தங்களை இணைத்துக் கொண்டார்கள். அவ்வாறு இஸ்லாத்தில் இணைந்து கொண்டவர்களில் சுஹைல் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள்.

************************

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ் முடிந்தவுடன், இனிமேல் இந்த ஹஜ்ஜு க்குப் பின் நீங்கள் உங்களது இல்லங்களிலேயே தங்கி இருங்கள், இது அல்லாஹ்வினுடைய கட்டளை என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மனைவிமார்களை நோக்கிக் கூறினார்கள்.

**(நபியின் மனைவிகளே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள் (33:33)**

அதன் பின் அன்னையவர்களும், இன்னும் ஜைனப் பின்த் ஜஹ்ஸ் (ரலி) அவர்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பின்னால், எங்கும் பயணம் செய்ததில்லை, மதீனாவிலேயே தங்கியிருந்தார்கள். நாங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் ஹஜ்ஜு ம் செய்தாகி விட்டது, உம்ராவும் செய்தாகி விட்டது, இறைத்தூதர் (ஸல்) அவர்களது கட்டளைக்கு ஏற்ப நாங்கள் இனி எங்கும் பயணம் செல்ல மாட்டோம், வீட்டிலேயே தங்கியிருந்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிய விரும்புகின்றோம் என்று கூறினார்கள்.

இன்னும் ஸௌதா (ரலி) அவர்கள் மிகவும் தயாள குணம் படைத்தவர்களாகவும் விளங்கினார்கள். ஒருமுறை உமர்(ரலி) அவர்களது ஆட்சிக் காலப் பிரிவில், உமர் (ரலி) அவர்கள் அன்னையவர்களுக்கு ஒரு பை நிறைய திர்ஹம்களைக் கொடுத்தனுப்பினார்கள். அந்தப் பையில் உள்ளவை திர்ஹம் என்பதை அறிந்த மாத்திரத்திலேயே, இது என்ன பேரீத்தம் பழம் நிறைக்கப்பட்ட பையைப் போல உள்ளது எனக் கூறியவர்களாக, அந்தப் பையில் உள்ள அனைத்து திர்ஹம்களையும் தானமாக ஏழைகளுக்கும் இன்னும் தேவையுடைய மக்களுக்கு வழங்கி விட்டார்கள்.

இமாம் தஹபீ அவர்களது கூற்றுப்படி, அன்னையின் பெயரால் ஐந்து ஹதீஸு கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆடு ஒன்று இறந்து விட்டபின், அந்த ஆட்டின் தோலை உரித்து, அதனைப் பதனிட்டு எவ்வாறு பயன்படுத்தினோம் என்று அன்னையவர்கள் அறிவிப்புச் செய்த அந்த ஹதீஸின் மூலமாக, இறந்த ஆட்டினுடைய தோலைப் பயன்படுத்தலாம், அனுமதிக்கப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிந்தது.

இன்னுமொரு ஹதீஸ் அன்னையவர்களின் பெயரால் இமாம் அஹமது அவர்கள் தனது முஸ்னதில் பதிவு செய்திருக்கின்றார்கள். ஒருமுறை ஒரு மனிதர் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, நான் வயதான எனது தகப்பனாருக்காக ஹஜ்ஜு ச் செய்யலாமா? என்று கேட்டு விட்டு, இன்னும் அவர் அதன் கிரியைகளைச் செய்யச் சக்தி பெறவே மாட்டார் என்றும் கூறினார்.

இதைக் கேட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், உனது தந்தையின் கடனை அடைப்பதும், இன்னும் அதுபோல உள்ளவற்றையும் அடைப்பது உன்மீது கடமையாக இருக்குமென்று சொன்னால், இதுவும் அது போல ஏற்றுக் கொள்ளத்தக்கதே என்று கூறினார்கள். ஆம்! அவ்வாறு (கடனை) அடைப்பதும் என்மீது உள்ளதே என்றும் கூறினார். பின்னர், அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணையுடையவனாகவும் இருக்கின்றான், நீங்கள் முதலில் உங்களுக்காக ஹஜ்ஜு ச் செய்து கொள்ளுங்கள், பின்னர் உங்களது தகப்பனாருக்காக ஹஜ்ஜு ச் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்ததன் பின்பு வந்த கலீபாக்கள் அத்தனை பேரும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது மனைவிமார்கள் மீது அளப்பரிய மரியாதை செலுத்தி, அன்னையவர்களது நலன்களில் அதிகக் கவனம் செலுத்தினார்கள். இன்னும் இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களான அவர்களை பாதுகாப்பதும், கண்ணியப்படுத்துவதும் தம் மீது உள்ள கடமையாகக் கருதினார்கள்.

ஸௌதா (ரலி) அவர்கள், தனது தள்ளாத முதுமை வரையிலும், அதவாது 80 வயது வரை வாழ்ந்தார்கள். உமர் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தின் பொழுது அன்னையவர்கள் இறையடி சேர்ந்தார்கள், அவர்களது உடல் ஜன்னத்துல் பக்கீ யில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவர்கள் தான் அல்லாஹ் சூரா அல் பஜ்ர் – ல், இறைநம்பிக்கையுடன் வாழ்ந்து மறைந்த உத்தமர்களான அந்த நன்னம்பிக்கையாளர்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

(ஆனால், அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்). (89:27-30)

## உம்முல் மு.ஃமினீன் ஷ.ஃபிய்யா பின்த் ஹு யைய் (ரலி)

ஹு தைபிய்யா உடன்படிக்கை நடந்து முடிந்த நேரம். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னுடைய படையணியை கைபரை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்த தருணம். ஏனெனில் கைபரில் வாழ்ந்த பனூ நதீர் கோத்திரத்தைச் சேர்ந்த யூதர்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை முறித்திருந்த காரணத்தினால் அவர்களுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தவர்களாக கைபரை நோக்கி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தங்களுடைய தோழர்களுடன் படையெடுத்துச் சென்றார்கள்.

அகழ் யுத்தத்தின் பொழுது, தங்களுக்கு எதிராக அரபுக் குலங்களை

முஸ்லிம்களின் படையணி கைபரை அதிகாலை நேரத்தில் வந்தடைந்திருந்தது, ஆனால் படையணிகள் ஊருக்குள் நுழையாமல் நன்கு பொழுது புலரும் வரை காத்திருந்தது. அதிகாலை நேரத்தில் வயல்வேலைகளுக்காக தங்களது வீடுகளை விட்டு மண்வெட்டி சகிதம் வந்த யூதர்கள், தங்களது வயல் வெளிகளின் பக்கம் முஹம்மது (ஸல்) அவர்களது படையணியைப் பார்த்து விட்டு, நம்மைத் தாக்க முஹம்மது அவர்களின் படை வந்திருக்கின்றது என்று கத்திக் கொண்டே ஊருக்குள் விரைந்தார்கள்.

யாருக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டதோ, அவர்களது அன்றைய காலைப் பொழுது கெட்ட பொழுதாகவே புலர்ந்தது. இறைத்தூதுர் (ஸல்) அவர்கள் பனூ நதீர் கோத்திரத்தாரின் ஒவ்வொரு கோட்டையாகக் கைப்பற்றிக் கொண்டு சென்றார்கள். அவர்களின் சொத்துக்கள் மற்றும் பெண்களையும் கைப்பற்றினார்கள். அத்தகைய பெண்களில் கைதியாகப் பிடிக்கப்பட்டவர் தான் அன்னை ஷ.ஃபிய்யா பின் ஹு யைய் (ரலி) அவர்கள்.

யூதக் குலத்தில் பிறந்திருந்தாலும் மிகவும் கண்ணியமிக்க அழகு மிக்க பெண்மணியாகத் திகழ்ந்த அன்னையவர்கள், முந்தைய தூதரான ஹாரூன் (அலை) அவர்களது வழித்தோன்றல்களில் வந்தவர்களாகவும் இருந்தார்கள். அன்னையவர்களின் முந்தைய கணவர் கினானா இந்த கைபர் போரில் கொல்லப்பட்டதோடல்லாமல், அவர்களது ஒன்று விட்ட சகோதரியும் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

இவர்களை பிலால் (ரலி) அவர்கள் யூதர்கள் கொல்லப்பட்டுக் கிடந்த வயல் பரப்பின் வழியாக நடத்திக் கூட்டி வந்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன் நிறுத்தினார்கள். இறந்து கிடந்தவர்களைப் பார்த்த ஷ.ஃபிய்யா பின் ஹு யைய் அவர்களின் ஒன்று விட்ட சகோதரி விறிட்டுக் கத்தியவர்களாக முகத்தில் அறைந்து கொண்டும் தங்கள் ஆடைகளைக் கிழித்துக் கொண்டும் கத்த ஆரம்பித்தார்கள்.

இந்த அலங்கோலக் காட்சியைப் பார்த்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், இந்தப் பெண் ஷைத்தானை இந்த இடத்தை விட்டும் அப்புறப்படுத்துங்கள் என்று கூறினார்கள். ஆனால் ஷ.ஃபிய்யா பின் ஹு யைய் அவர்களோ தனது ஒன்று விட்ட சகோதரி நடந்து கொண்டதைப் போன்று நடந்து கொள்ளவில்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஷ.ஃபிய்யா அவர்களின் துன்பத்தை உணர்ந்து கொண்டார்கள்.

பின்னர் பிலால் (ரலி) அவர்களை நோக்கி, ஓ பிலால் அவர்களே! இறைவன் உங்களது இதயத்திலிருந்து இரக்கத்தை எடுத்து விட்டானா? தங்களது ஆண்கள் கொலை செய்யப்பட்டுக் கிடக்கும் நிலையில் அவர்களுக்கு மத்தியில் இரண்டு பெண்களை நீங்கள் இவ்வாறு அழைத்து வந்து கொண்டிருக்கின்றீர்களே? என்று வருத்தத்துடன் கூறினார்கள்.

ஷபிய்யா பின்த் ஹு யைய் அவர்களை பிலால் அவர்களுக்கு பின்னால் நிறுத்துமாறு கேட்டுக் கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னை அவர்களை நோக்கி தனது மேலாடைத் துண்டை எறிந்தார்கள். ஷபிய்யா பின்த் ஹு யைய் அவர்களை தனது மனைவியாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தேர்வு செய்து கொண்டார்கள் என்பதை, அப்பொழுதே இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழர்கள் புரிந்து கொண்டார்கள்.

ஷஃபிய்யா அவர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அந்த ஆறுதல் வார்த்தைகளையும் தன்னை அவர்களது மனைவியாகத் தேர்வு செய்திருப்பதையும் எண்ணி அவர்கள் ஆச்சரியமடையவில்லை. அதற்குக் காரணமும் இருந்தது.

## அன்னை ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி)

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா ஆட்சித் தலைவரான உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் மகள் தான் அன்னை ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி) அவர்கள். இவர் இறைத்தூதர் (ஸல்) அவர்களால் ஜனாஸா - மரணத் தொழுகை தொழுவிக்கப்பட்டு, ஜன்னத்துல் பக்கீயில் முதன் முதல் அடக்கம் செய்யப்பட்ட நபித்தோழரான உத்மான் பின் மாஸு ன் (ரலி) அவர்களின் மருமகளுமாவார்கள். இன்னும் சிறிய தந்தையான நபித்தோழர் ஜைத் பின் கத்தாப் (ரலி) அவர்கள், இஸ்லாமிய படைத்தலைவராக பணியாற்றியவரும் இன்னும் உயிர்த்தியாகியுமாவார். தனது சகோதரர் ஜைத் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றி உமர் (ரலி) அவர்கள் பெருமைபடக் குறிப்பிடும் போது, எனது சகோதரர் இறைநம்பிக்கை கொள்வதிலும் என்னை முந்திக் கொண்டார், உயிர்த்தியாகம் செய்வதிலும் என்னை முந்திக் கொண்டார் என்று குறிப்பிடுவார்களாம். இன்னும் அன்னையின் சகோதரர்களில் ஒருவரான அப்துல்லா பின் உமர் (ரலி) அவர்களை, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த நற்பண்புள்ளவர் என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

அன்னையவர்கள் இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களை மிகவும் பேணுதலுடன் பின்பற்றும் பெண்மணியும், இன்னும் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதிலும், நோன்பு நோற்பதிலும் அன்னையவர்கள் மிகுந்த கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். அன்னையவர்கள் மிகச் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவர்களாகவும், இறைவேதமான குர்ஆனை அழகிய தொணியில் ஓதக் கூடியவர்களாகவும் இருந்ததோடு, இன்னும் ஏழு சகோதர, சகோதரரிகளில் ஒருவராகவும், இன்னும் பத்ருப் போரில் கலந்து கொண்ட மிகச் சிறப்பு வாய்ந்த குடும்பத்தவர்களில் ஒருவராகவும் அன்னையவர்கள் திகழ்ந்தார்கள். அன்னையவர்களின் தந்தை உமர் பின் கத்தாப் (ரலி), சிறிய தந்தையார் ஜைத் பின் கத்தாப் (ரலி), அன்னையவர்களின் முதல் கணவர் ஹானீஸ் பின் ஹதாஃபா (ரலி), இன்னும் அன்னையவர்களின் தாயாருடைய சகோதரர்களான உத்மான் பின் மாசூன் (ரலி), குதாஃபா பின் மாசூன் (ரலி), அப்துல்லா பின் மாசூன் (ரலி), இன்னும் ஸாயிப் பின் அப்துல்லா பின் மாசூன் (ரலி) ஆகியோர்கள் பத்ருப் போரில் கலந்து கொண்ட சிறப்பு மிக்கவர்களாவார்கள். இவர்கள் அனைவரும் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டு, இஸ்லாத்தை உயிர்ப்பிக்கப் போராடியவர்களாதலால்,

இறைத்தூதர் (ஸல்) அவர்களினால் சுவனத்தை அனந்தரக் கொள்ளக் கூடியவர்கள் என்று நற்செய்தி பகரப்பட்டவர்களுமாவார்கள்.

அன்னையவர்கள் மேலே கண்ட மிகச் சிறந்த பாரம்பரியத்தையும், குலச் சிறப்புக்களையும் பெற்றிருந்த காரணத்தால், அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஒப்பிட்டுச் சொல்லும்படியான சிறப்புத் தகுதிகளை அன்னையவர்கள் பெற்றிருந்தார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மிகச் சிறந்த தோழரான உமர் (ரலி) அவர்களின் செல்வப் புதல்வியானபடியால், இளமையிலேயே இறையச்சமிக்க நற்குணமுள்ள பெண்மணியாக வார்த்தெடுக்கப்பட்டார்கள். இன்னும் முன்மாதிரி மிக்க அவரது வாழ்க்கை நமக்கெல்லாம் ஒரு பாடமாக அமைந்துள்ளது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இளமைக் காலத்தின் பொழுது, இன்னும் அவர்களுக்கு நபிப்பட்டம் வழங்காதிருந்த பொழுது, க..பாவை புனர்நிர்மாணம் செய்தவற்காக குறைஷிகள் திட்டமிட்டனர். இந்த திட்டமிடலில் யார் க..பாவின் கருப்புக்கல்லை எடுத்துவைப்பது என்ற சர்ச்சையில், பல காலங்கள் அவர்களுக்குள் போர்களும் நடந்தன. பல உயிர்கள் குடிக்கப்பட்டன. இந்த சர்ச்சையை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எளிதாகத் தீர்த்து வைத்த ஆண்டில் தான் அன்னையவர்கள் உமர் (ரலி) அவர்களுக்கு மகளாகப் பிறந்தார்கள். எனவே, அன்னையவர்கள் சற்று பருவம் எய்திய காலத்தில் இஸ்லாத்தில் வெளிச்சப்புள்ளிகள் மக்காவை ஒரு சேர தழுவிக் கொண்டிருந்த காரணத்தினால், அன்னையவர்கள் இளமைச் சூழல் முழுக்க முழுக்க இஸ்லாமியச் சூழலில் வார்த்தெடுக்கப்பட்டிருந்தது. இந்த கால கட்டத்தில் உமர் (ரலி) அவர்களும், அன்னையவர்களின் தாயும், இன்னும் சிறிய தந்தையர்கள், மாமன்மார்கள் என அனைவரும் இஸ்லாத்தினை வாழ்வியல் நெறியாக ஏற்றிவிட்டிருந்ததும், இந்த இஸ்லாமியச் சூழல் உருவாகக் காரணமாக இருந்தது. இன்னும் அன்னையவர்கள் பருவமெய்திய பின், ஹானீஸ் பின் ஹுஸ..பா ஸெஹ்மி (ரலி) என்ற நபித்தோழருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்கள். இவர் அபுபக்கர் (ரலி) அவர்களின் அழைப்பின் தாக்கத்தின் காரணமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவராவார்.

அன்னையவர்களின் கணவர் ஹானீஸ் பின் ஹுஸ..பா (ரலி) அவர்கள் இஸ்லாத்தினை தனது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டு விட்டதை அறிந்த மக்கத்துக் குறைஷிகள் மற்ற நபித்தோழர்களுக்கு எந்தளவு தொல்லைகளையும், துன்பங்களையும் கொடுத்தார்களோ, அது போலவே பல கொடுமைகளை இவர் மீதும் கட்டவிழ்த்து விட்டார்கள். எனவே, அபீசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற குழுவினரில் இவரும் ஒருவராக இணைந்து கொண்டார். அபீசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற ஹானீஸ் பின் ஹுஸ..பா (ரலி) அவர்களுக்கு வீட்டு ஞாபகம் அதிகம் வந்ததன் காரணமாக, மீண்டும் தான் பிறந்து வளர்ந்து வாலிபமாகிய மக்காவிற்கே திரும்பி வந்து விட்டார்கள். மிக நீண்ட காலம் மக்காவை விட்டு அபீசீனியாவில் தங்கியிருந்து, அதன் பின் மக்காவிற்குத் திரும்பி வந்த போதிலும், முஹம்மது (ஸல்) அவர்களது தூதுத்துவத்திற்கு எதிரான குறைஷிகளின் தாக்குதல்கள் குறைந்தபாடில்லை. இந்த கால கட்டத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களை மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து செல்லும்படி அறிவுறுத்தவே, அவ்வாறு ஹிஜ்ரத் செய்து செல்பவர்களின் குழுவில் ஹானீஸ் பின் ஹுஸ..பா ஸெஹ்மி (ரலி) அவர்களும் ஒருவராகக் கலந்து கொண்டு, மதீனாவை நோக்கி தனது மனைவியுடனேயே ஹிஜ்ரத் செய்தார். இவரை அப்துல் மன்ஸர் (ரலி) அவர்கள் வரவேற்று தனது இல்லத்தில் தங்க வைத்துக் கொண்டார்கள். இன்னும் இதற்குப் பின் இறைத்தூதர் (ஸல்) அவர்களும், மக்காவில் நிறைவேற்ற வேண்டிய சில பொறுப்புக்களுக்கு அலி (ரலி) அவர்களை நியமித்து, தானும் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து விட்டார்கள்.

மதீனாவை அடைந்ததும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது முதல்பணியாக மக்காவில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த முஹாஜிர்களையும், சொந்த பூமியின் மைந்தர்களும் உதவியாளர்களுமாகிய

அன்ஸார்களையும் ஒரு குடும்பத்து மக்களாக இணைத்து வைத்து, சகோதர பாசத்தை விதைத்தார்கள். அவ்வாறு சகோதரர்களாக்கப்பட்டவர்கள் தான் நமது ஹானீஸ் பின் ஹுஸஃபா ஸெஹ்மி (ரலி) அவர்களும், அபூ அப்பாஸ் பின் ஜாபர் அன்சாய் (ரலி) அவர்களும். இருவரும் மிகச் சிறந்த குதிரை ஏற்ற வீரர்கள். இன்னும் உலகில் மிகச் சிறந்த பள்ளிக் கூடமாகிய இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வியல் நெறிப் பள்ளியில் பாடம் பயின்ற மாணவர்களுமாவார்கள். இன்னும் இருவரும் மிகச் சிறந்த படைவீரர்களுமாவார்கள்.

மதீனாவின் சூழல் புதிதாக இருந்தாலும், அடக்குமுறை, ஒடுக்குமுறை, இன்னும் அச்சுறுத்தல்கள் ஆகிய அனைத்தும் நீங்கி, நிம்மதிப் பெருமூச்சு விட்ட வாழ்க்கையை, புதியதொரு வாழ்வை ஹானீஸ் (ரலி) அவர்களும், இன்னும் ஹஃப்ஸா (ரலி) அவர்களும் அனுபவித்தார்கள்.

இந்தப் புதிய சூழல் தந்த மாற்றங்களில், ஹப்ஸா (ரலி) அவர்கள் அவ்வப் பொழுது இறங்கக் கூடிய இறைவசனங்களை மனனமிடக் கூடியவர்களாகவும், இன்னும் அதன் அர்த்தம் அதன் விரிவுரை ஆகியவற்றிலும் கூடுதல் கவனம் செலுத்தக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஹப்ஸா (ரலி) அவர்கள் குர்ஆனின் மீது அலாதியான ஈடுபாடு கொண்டிருந்த பொழுது, அவரது கணவரான ஹானீஸ் (ரலி) அவர்களோ, இறைவழிப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்தார். எதிரிகள் குறித்த எச்சரிக்கை உணர்வோடு செயல்பட்ட ஹானீஸ் (ரலி) அவர்கள், எதிரிகளிடமிருந்து வரக் கூடிய எத்தகைய தாக்குதல்களையும் எதிர்கொண்டு சமாளிப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

இப்பொழுது, மக்கத்துக் குறைஷிகள் முஸ்லிம்களை பூண்டோடு இந்தப் பூமியை விட்டும் அப்புறப்படுத்தி விடுவதற்காக, மதீனாவை நோக்கிப் படை திரட்டி வந்து கொண்டிருக்கின்ற செய்தியை மதீனாவின் முஸ்லிம்கள் அறிந்து கொண்டார்கள். மிகச் சிறிய படையைக் கொண்ட முஸ்லிம்களை தாக்கி அழித்து விடுவதற்காக அபூஜஹ்ல் பெரும் படை ஒன்றைத்திரட்டி வந்து பத்ர் என்ற இடத்தில் மூன்று நாட்கள் தங்கி, அந்த மூன்று நாட்களிலும் ஆட்டும் பாட்டும் கொண்டாட்டுமாகக் கழித்து கொண்டிருந்தான். இன்னும் நாம் திரட்டி வந்திருக்கின்ற இந்த படையின் எண்ணிக்கையை அரபுக் குலத்தவர்களில் எவர் அறிந்து கொண்டாலும், நமக்கெதிராக போர் நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களில் நெஞ்சிலே துணிவு பிறக்காது என்றும் அவன் இருமாப்புக் கொண்டான். இன்னும் விரல் விட்டு எண்ணி விடக் கூடிய முஸ்லிம்கள், தன்னை எதிர்க்கும் பட்சத்தில் அவர்களது வாழ்நாளில் மறக்க இயலாத அளவுக்கு ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்து விட வேண்டும் என்றும் அவன் துடித்துக் கொண்டிருந்தான்.

அபூஜஹ்ல் திரட்டி வந்திருந்த படையோடு ஒப்பிடும் பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தலைமையில் வந்திருந்த முஸ்லிம் படை எல்லாவற்றிலும் பலம் குன்றியதாகவே காணப்பட்டது. இன்னும் முஸ்லிம்கள் போர்முகத்திற்கு வந்ததும், அவர்கள் செய்த ஒரே வேலை தண்ணீர் பிடிப்புப்பகுதியைத் தங்களது கைவசம் வைத்துக் கொண்டது தான். இதுதவிர ஆள்பலமோ, ஆயுத பலமோ முஸ்லிம்களிடத்தில் இல்லை என்று சொல்லும் அளவுக்குத் தான் இருந்தது. இங்கே, இறைத்தூதர் (ஸல்) அவர்களும், அவர்களுடன் வந்திருந்த முஸ்லிம்களும் அல்லாஹ் ஒருவனை நம்பி மட்டுமே களத்திற்கு வந்திருந்தனர். அவனது அருள் மழையை வேண்டி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிரார்த்தனையும் செய்தார்கள்.

இந்தப் போரில் ஹப்ஸா (ரலி) அவர்களின் கணவர், தந்தையாரான உமர் (ரலி) அவர்கள் மற்றும் தாய் வழி மற்றும் தந்தை வழிச் சொந்தங்களும் முஸ்லிம்களின் அணியில் பத்ருக் களம் நோக்கி வந்திருந்தார்கள். எதிரிகளைக் களம் கண்ட முஸ்லிம்கள், பத்ருப் போரில் தங்களது வீரத்தைக் காட்டினார்கள். அந்த வகையில் நமது ஹானீஸ் (ரலி) அவர்கள் எதிரிகளின் படைகளை ஊடறுத்துச்

சென்று தனது வீரத்தைக் காட்டினார். இதன் காரணமாக அவர்களுக்கு கடுமையான காயம் ஏற்பட்டது. எதிரிகளின் பல தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். போரின் இறுதி வெற்றி முஸ்லிம்களுக்குக் கிடைத்தது. உலக வரலாற்றில் ஆள் பலமற்ற, ஆயுத பலமற்றதொரு கூட்டம், முழு அளவு தயாரிப்புடன் வந்திருந்த படையை வெற்றி கொண்டதென்பது இந்தப் போரில் தான் என்பது வரலாற்றில் மாற்ற முடியாததொரு நிகழ்ச்சியாகும்.

போர் முடிந்ததன் பின், போரில் காயம் பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகவும், போரின் சில பின் நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பத்ர்க்களத்தில் மூன்று நாட்கள் தங்கி இருந்தார்கள்.

தனது கணவரின் வீர தீரச் செயல்களைக் கேள்விப்பட்ட ஹஃப்ஸா (ரலி) அவர்கள் உளம் மகிழ்ந்தார்கள். இன்னும் காயம்பட்ட இந்த நேரத்தில் தனது கணவருக்குப் பணிவிடை செய்து ஒத்தாசையாக இருப்பது அவசியம் எனப்பட்ட பொழுது, பத்ர் யுத்தத்தைப் பற்றி இறங்கிய இந்தக் கீழ்க்கண்ட வசனத்தை ஓதிக் கொண்டார்கள்,

உங்கள் இருதயங்கள் திருப்தியடைவதற்காகவும், ஒரு நன்மாராயமாகவும் (இந்த வெற்றியை) அல்லாஹ் ஆக்கினான் அல்லாஹ்விடமிருந்தே தவிர உதவி இல்லை நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான். (8:10)

அல்லாஹ் வாக்களித்த வெற்றியைக் கண்டு அகமகிந்த ஹஃப்ஸா (ரலி) அவர்கள், தனது கணவருக்குப் பணிவிடை செய்வதில் அகமகிழ்ந்தார்கள். ஆனாலும் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காயங்கள் ஏற்படுத்திய ரணங்களின் வடுக்கள், அவருக்கு இந்த உலக வாழ்வைக் குறுக்கி வைத்து, மறுமை வாழ்வை நெருக்கி வைத்தது. மிக விரைவிலேயே அவர் மரணித்து, சொர்க்கத்தை நன்மாரயமாகப் பெற்றுக் கொண்டவர்களின் கூட்டத்தில் இணைந்து கொண்டார். ஹஃப்ஸா (ரலி) அவர்களின் கணவர் இறந்த செய்தியைக் கேட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மிக கவலை அடைந்தவர்களாக, அவர்களை ஜன்னத்துல் பக்கீயில் அடக்கம் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ததுடன், தானே முன்னின்று ஜனாஸா தொழுகையை நிறைவேற்றினார்கள்.

தனது கணவரை இழந்த ஹஃப்ஸா (ரலி) அவர்கள், கவலை தோய்ந்திருந்தாலும் இறைவனின் வல்லமையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அமைதி காத்தார்கள். முன்னைக் காட்டிலும் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு, தனது நேரத்தை வணக்கத்திலும் இன்னும் இறைவனைப் புகழ்வதிலும் கழித்தார்கள். இந்த நிலையில் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு 21 வயதே தான் ஆகியிருந்தது.

தனது மகளின் இந்த நிலையைக் கண்ட உமர் (ரலி) அவர்கள் வலியின் வேதனையால் துடித்தார்கள். ஹஃப்ஸா (ரலி) அவர்கள் தனக்கேற்பட்ட இந்த சூழ்நிலையின் இறுக்கத்தைத் தணிப்பதற்காக குர்ஆனை ஓதிவதிலும், தொழுவதிலும் கழித்து, தன்னைப் படைத்தவனின் பெருமைகளை நினைவு கூர்வதில் அமைதியைக் கண்ட போதிலும், அந்த அமைதியே அந்த வீட்டில் உள்ளோருக்கு வேதனையைத் தந்து கொண்டிருந்தது. இதுவே ஹஃப்ஸா (ரலி) அவர்களின் வாழ்க்கையின் அங்கமாகவும் ஆகி விட்டிருந்தது.

இந்த சமயத்தில் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மருமகனாரான உதுமான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் தனது மனைவியும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மகளுமான ருக்கையா (ரலி) அவர்களை இழந்திருந்தார்கள். எனவே, ருக்கையா (ரலி) அவர்களின் இடத்தை தனது மகளால் நிரப்ப இயலும், அதற்கு தனது மகள் முற்றிலும் தகுதி வாய்ந்தவர் தானே என எண்ணிய உமர் (ரலி) அவர்கள் உதுமான் (ரலி) அவர்களை அனுகி, தனது மகளை மணந்து கொள்ளும்படி கோரினார்கள்.

சோகத்தின் இறுக்கத்தில் இருந்த உதுமான் (ரலி) அவர்களோ, உமர் (ரலி) அவர்களை ஒருமுறை பார்த்து விட்டு, சற்று அமைதி காத்து விட்டு பின்பு கூறினார்கள், உமர் (ரலி) அவர்களே..! இது பற்றி சிந்திப்பதற்கு எனக்கு சற்று அவகாசம் தேவைப்படுகின்றது.

மீண்டும் சில நாட்கள் கழித்து, தனது கோரிக்கையைப் பற்றி சிந்தித்தீர்களா உதுமான் (ரலி) அவர்களே..! என்று உமர் (ரலி) அவர்கள் கேட்ட பொழுது, நான் இப்பொழுது மணமுடிக்கும் நிலையில் இல்லை என்று கூறி விட்டார்கள்.

பின் அபுபக்கர் (ரலி) அவர்களிடம் சென்ற உமர் (ரலி) அவர்கள், அபுபக்கர் (ரலி) அவர்களே..! எனது மகளை நீங்கள் மணந்து கொள்ளுங்கள் என்றார்கள். அதனைக் கேட்ட அபுபக்கர் (ரலி) அவர்கள் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டவர்களாக எந்தப் பதிலையும் கூற மறுத்து விட்டார்கள். இந்த முழு சம்பவத்தையும் இமாம் புகாரீ அவர்கள் தனது ஹதீஸ் நூலில் பதிவு செய்திருக்கின்றார்கள்.

இரண்டு பேரிடமும் கிடைத்த பதில்கள் யாவும், தனது மகளை மணம் செய்து கொள்வதற்கு அவர்கள் மறுக்கவும் இல்லை, முடியாது என்றும் சொல்லவில்லை. இதனால் மிகவும் மனமுடைந்த போன உமர் (ரலி) அவர்கள் நேரே தனது ஆருயிர்த் தோழர் இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சந்தித்து நடந்த விபரங்களைக் கூறுகின்றார்கள்.

உமரே..! நீங்கள் வருத்தப்படவும் வேண்டாம், கவலைப் படவும் வேண்டாம். உதுமான் (ரலி) அவர்களை விடச் சிறந்த துணையை உங்களது மகளுக்கு அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுப்பான். அதுபோல உங்களது மகளை விடச் சிறந்த துணையை அல்லாஹ் உதுமான் (ரலி) அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பான் என்று கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் திருவதனங்களிலிருந்து நன்மாரயத்தைப் பெற்றுக் கொண்ட உமர் (ரலி) அவர்களுக்கு இப்பொழுது புதுக் கவலை ஒன்று தொற்றிக் கொண்டது, உதுமான் (ரலி) அவர்களை விட மிகச் சிறந்த நபர் யாராக இருக்கும்? என்ற கவலை தான்.

சில நாட்கள் கழித்து, தனது மகளான உம்மு குல்தூம் (ரலி) அவர்களை உதுமான் (ரலி) அவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மணமுடித்துக் கொடுத்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த சம்பவங்களில் ஒன்று இப்பொழுது நடந்து விட்டது, இன்னுமொரு பகுதி தனது மகளைப் பொறுத்து நிறைவேறாமல் இருக்கின்றதே, என்ற வினா இப்பொழுது தொற்றிக் கொண்டு, யார் அந்தப் பெருமகன்? என்ற சிந்தனை உமர் (ரலி) அவர்களைத் தொற்றிக் கொண்டது. உதுமான் (ரலி) அவர்களை விடச் சிறந்த அந்த மனிதர் யாராக இருக்கும்?

ஒரு நாள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹஃப்ஸா (ரலி) அவர்களைத் தான் மணக்க விரும்புவதாகத் தனது விருப்பத்தைத் தெரிவித்த பொழுது, உமர் (ரலி) அவர்களால் தனது காதையே நம்ப முடியவில்லை, இன்னும் தனது மகள் இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களின் வரிசையில் சேர்வதற்காக தேர்ந்தெடுத்திருப்பது குறித்து மிகவும் சந்தோசப்பட்டார்கள். ஏற்கனவே ஆயிஷா (ரலி) மற்றும் சௌதா (ரலி) ஆகிய அன்னையர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மணமுடிக்கப்பட்டிருந்தார்கள்.

உஹதுப் போருக்கு முன்பாக, ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் அன்னை ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது. இப்பொழுது அன்னையவர்களுக்கு 22 வயது நிரம்பியிருந்தது. தனது மகளை இறைத்தூதர் (ஸல்) அவர்களது இல்லத்தில் பார்க்கும் பொழுதெல்லாம், ஹஃப்ஸாவே..! நீங்கள் ஆயிஷா (ரலி) அவர்களுடன் போட்டி போடாதீர்கள், அவர்கள் உங்களைக் காட்டிலும் பல வகைகளில் சிறந்தவர்கள் என்று தனது மகளுக்கு அறிவுரை

கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். இன்னும் அவர்களுடன் அன்பாகவும், மரியாதையாகவும், பண்பாடாகவும் நடந்து கொள்ளும்படியும் அறிவுறுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.

## ஜைனப் பின்த் ஃகஸீமாஹ் (ரழி)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், சொர்க்கத்தை அனந்தரங்கொள்ளக் கூடிய பெண்களைத் தான் இறைவன் என்னை மணமுடித்துக் கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளான். அன்னை ஜைனப் பின்த் ஃகஸீமாஹ் (ரழி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தவர்களில் ஏழைகளுக்கு இரங்கக் கூடியவர்களாகவும், அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டக் கூடியவர்களாகவும் திகழ்ந்திருக்கின்றார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு நபித்துவப்பட்டம் வழங்கப்படுவதற்கு சற்று 13 வருடங்களுக்கு முன் பிறந்தவர்கள் தான் அன்னையவர்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் தனது தூதுத்துவப் பிரச்சாரத்தைத் தொடங்கிய பொழுது, இதுவரை அவரை நன்னம்பிக்கையாளர் என அழைத்துக் கொண்டிருந்த மக்கள் ஒரே நாளில் அவரைத் தூற்றவும், ஏன் கொலை செய்யவும் கூட முயற்சி செய்தார்கள். இந்த நிலையில், மக்காவில் வாழ்ந்த அபுபக்கர் (ரலி) மற்றும் கதீஜா (ரலி) போன்ற சிலர் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அழைப்புக்குச் செவிமடுத்ததோடல்லாமல், இறைவிசுவாசிகளாகவும் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள். அந்த ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்களில் ஒருவராக அன்னை ஜைனப் (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள்.

அன்னையவர்கள் அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி) என்ற நபித்தோழருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டிருந்தார்கள். உஹதுப் போர்க்களத்தில் இந்த அருமை நபித்தோழர் தனது இன்னுயிரை இஸ்லாத்திற்காக தியாகம் செய்த பின்பு, அன்னையவர்கள் விதவையாக தனிமரமானார்கள். அன்றைய வழக்கப்படி, போரில் இறந்த நபித்தோழர்களின் மனைவிமார்களை யாராவது ஒரு தோழர் மணந்து கொள்வதோடல்லாமல், அந்தத் தோழரது குழந்தையையும் தத்தெடுத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அதன்படி, அன்னையவர்களின் முதற் கணவர் அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்கள் உயிர்த்தியாகியாக ஆனதன் பின்பு, அன்னையவர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மணந்து கொண்டார்கள்.

ஹம்னாஹ் பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்களது கணவரும் கூட உஹதுப் போர்க்களத்தில் உயிர்த்தியாகியானார். சோகமே உருவான ஹம்னாஹ் (ரலி) அவர்களைப் பார்த்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள்,

ஒரு பெண்ணின் நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் கணவனின் நினைவை வேறு யாராலும் அகற்றி விட முடியாது என்று கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த ஆறுதல் வார்த்தையைக் கேட்ட ஹம்னாஹ் (ரலி) அவர்கள் வெட்கப்பட்டவர்களாக, அனாதைகளாகி விட்ட என்னுடைய குழந்தைகளின் தொந்தரவு தான் அதிகமாக இருக்கின்றது, பொறுமையும், துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் மனபக்குவத்தையும் அதற்கான ஆற்றலையும் இறைவன் எனக்கு வழங்கிட, எனக்காக நீங்கள் பிரார்த்திக்க வேண்டும் இறைத்தூதர் (ஸல்) அவர்களே..! என்று வேண்டிக் கொண்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பிரார்த்தனை, ஹம்னாஹ் (ரலி) அவர்கள் தல்ஹா பின் அப்துல்லா (ரலி) அவர்களை மணமுடித்துக் கொண்டதனால் நிறைவேறியது. இரக்க சுவாபமுள்ள தல்ஹா (ரலி) அவர்கள், ஹம்னாஹ் (ரலி) அவர்களது குழந்தைகளை பாசத்துடன், தனது குழந்தைகள் போல வளர்க்க ஆரம்பித்தார்கள்.

ஜைனப் (ரலி) அவர்களும், ஹம்னாஹ் (ரலி) அவர்களைப் போலவே உஹதுப் போர்க்களத்தில் தனது கணவரை இழந்திருந்தாலும், எந்த மனித சக்தியிடமும் தனது பிரச்னைகளைச் சொல்ல விரும்பாத ஜைனப் (ரலி) அவர்கள், தனது வேதனைகளை இறைவனிடமே முறையிட்டார்கள். தொழுகை மூலமும், திக்ருகள் மூலமும் இறைவனுடைய உதவியைக் கோரினார்கள். அவர்களது பொறுமைக்குப் பரிசாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கோரிக்கை ஜைனப் (ரலி) அவர்களின் வீட்டுக் கதவைத் தட்டியது. அன்னையவர்களை மணமுடிக்க விரும்புவதாகவும், அதற்கான சம்மதத்தைத் தரும்படி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தூது அனுப்பி இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவியாக வாழ்க்கைப்படுவதை விட வேறு என்ன பாக்கியம் வேண்டும் என்று சந்தோசத்தில் திளைத்த அன்னையவர்கள், சம்மதத்தை தெரிவிக்க, 400 திர்ஹம்களை மணக்கொடையாகக் கொடுத்து அன்னையவர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மணமுடித்துக் கொண்டார்கள்.

அன்னை ஹஃப்ஸா (ரலி) மற்றும் ஆயிஷா (ரலி) ஆகியோர்களின் இல்லத்திற்கு அருகே அன்னை ஜைனப் (ரலி) அவர்களுக்கு இல்லம் கட்டி கொடுக்கப்பட்டது. இதன் மூலம் அன்னையவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தவர்களில் ஒருவராக மலர்ந்தார்கள். அல்லாஹ் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான் :

(நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தங்களை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் நாடுகிறான். (33:33)

மேலும்,

நபியின் மனைவிகளே! நீங்கள் பெண்களில் மற்றப் பெண்களைப் போலல்ல. (33:32)

என்ற மேற்கண்ட வசனத்திற்கு இலக்கணமாக பிறருக்குக் கொடுத்தவி வாழ்ந்தார்கள் அன்னையவர்கள். ஏன்..! இஸ்லாத்தைத் தன்னுடைய வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே, அன்னையவர்களை – ஏழைகளின் தாய் என்று மக்களால் அன்போடு அழைக்கப்படக் கூடியவர்களாக இருந்தார்கள். பசியுடன் அல்லது தேவையுடையவர்களாக யாரையும் காண அன்னையவர்கள் சகிக்க மாட்டார்கள். இன்னும் ஏழைக்கு இரங்கும் இவர்களது தயாள குணத்தை அன்றைய கவிஞர்கள் கூட சிலாகித்துத் தங்களது பாடல்களில், உதாரணங் கூறிப் பாடியுள்ளனர்.

இப்னு கதீர் அவர்களின் கூற்றுப்படி, மேற்கண்ட சிறப்பை அன்னையவர்கள், தனது தயாள குணத்தின் காரணமாகவே பெற்றுக் கொண்டார்கள் என்று கூறியுள்ளார்.

கஸ்தலானி என்பவரது கூற்றுப்படி, இஸ்லாம் தனது வெளிச்சப் புள்ளிகளை விதைக்கு முன்பே அன்னையவர்கள் தயாள குணம் மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள் என்று கூறிப்பிடுகின்றார்.

பிறவியிலேயே அவரிடம் காணப்பட்ட இந்த தயாள குணம் இஸ்லாத்தைத் தனது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டவுடன், இன்னும் அதிகப்படியாக தாராளமாக பிறருக்கு வாறி வழங்கக் கூடியவர்களாக அவர்கள் மாற்றியது.

அன்னையவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்து கொள்வதற்கு முன்பாகவே, ஆயிஷா (ரலி) அவர்களும், ஹஃப்ஸா (ரலி) அவர்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவிமார்களாக வாழ்ந்து வந்தார்கள். ஜைனப் (ரலி) அவர்கள் கணவரை இழந்து கைம்பெண்ணாக வாழ்ந்து பின்பு

இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்து கொண்டதன் காரணத்தினால், அன்னையவர்களின் மீது இருவரும் அதிக பாசமும், நேசமும் கொண்டார்கள். இன்னும் முதல் கணவரை இழந்த துக்கத்தில் இருந்த அவர்களுக்கு, மேற்கண்ட இருவரின் துணையும், ஒத்துழைப்பும் ஆறுதலைத் தந்தது. இன்னும் அன்னையவர்களிடம் காணப்பட்ட அந்த அருங்குணமான ஏழைகளுக்கு இரங்கும் தன்மை அவர்களது கவலையைப் போக்கும் மருந்தாகவும் அமைந்து விட்டது. பிறரது துன்பத்தைக் கண்டு இரங்குவதன் மூலம், தனது துன்பத்தை மறந்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்ததன் பின்பு வெறும் எட்டு மாதங்களே அன்னையவர்கள் உயிருடன் இருந்தார்கள். அவர்கள் மரணமடைந்த பொழுது, அவர்களுக்கு வெறும் 30 வயது தான் ஆகியிருந்தது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன்னின்று ஜனஸாத் தொழுகையை நிறைவேற்ற, அன்னையவர்கள் ஜன்னத்துல் பக்கீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் முதன் முதலாக அன்னை கதீஜா (ரலி) அவர்களை இழந்தார்கள். அதன் பின் அன்னை ஜைனப் (ரலி) அவர்களை இரண்டாவதாக இழந்தார்கள்.

அல்லாஹ்..! அவர்களின் மீது கருணை மழையைப் பொழிவானாக..! அவர்கள் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டார்கள், அல்லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான்.

## உம்மு ஸலமா பின்த் அபூ உமைய்யா (ரலி)

அன்னையவர்களின் இயற்பெயர் ஹிந்த் பின்த் உமைய்யா என்றிருந்த போதும், உம்மு ஸலமா (ரலி) என்றே மிகப் புகழோடு அழைக்கப்பட்டு வந்தார்கள். வரலாறு அவ்வாறே அவர்களது பெயரைப் பதிவு செய்து வைத்திருக்கின்றது. பிறப்பு மற்றும் வம்சா வழிச் சிறப்புகளின் அடிப்படையில், இயற்கையிலேயே புத்திக் கூர்மையுள்ள, கல்யறிவுள்ள, நேர்மையான மற்றும் உறுதியான செயல்பாடுகள் கொண்டவர்களாக அன்னையவர்கள் திகழ்ந்தார்கள்.

அன்னையவர்களின் முதற் கணவரின் பெயர், அபூ ஸலமா என்றழைக்கப்படக் கூடிய அப்துல்லா பின் அப்துல் அஸத் மக்சூமி (ரலி) என்பவராவார். இவர் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தந்தை வழி மாமியான பர்ரா பின்த் அப்துல் முத்தலிப் அவர்களின் மகனுமாவார். இஸ்லாத்தினைத் தங்களது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்ட ஆரம்ப கால முஸ்லிம்களின் பட்டியலில் அபூ ஸலமா அவர்களும் இடம் பிடித்த, சிறப்புக்குரியவர்களாவார்கள். அந்த கால கட்டத்தில் இஸ்லாத்தினைத் தழுவிய 11 நபர்களில் இவரும் ஒருவர். இன்னும் இவர் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பால் குடிச் சகோதரரும் ஆவார்.

உம்மு ஸலமா (ரலி) அவர்களும் இஸ்லாத்தினைத் தனது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்ட ஆரம்பகால முஸ்லிம்களில் ஒருவராவார். இவரது தாயார் பெயர் அதீகா பின்த் ஆமர் பின் ரபீஆ பின் மாலிக் பின் கஸீமா ஆகும். இன்னும் இவரது தந்தையின் பெயர் உமைய்யா பின் அப்துல்லா பின் அம்ர் பின் மக்சூம் என்பதாகும். இவரது பொதுநலச் சேவைகள் மற்றும் தான தர்மங்களின் மூலமாக அரபுலகில் மிகவும் பிரபலமாக மதிக்கப்பட்டவர்களாவார்கள். இவருடன் பயணம் செய்யக் கூடியவர்கள் தங்களது தேவைக்காவென எந்தப் பொருட்களையும் தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை. தன்னுடன் வரக் கூடியவர்கள் அனைவரும் தனது விருந்தாளிகள் என மதிப்பளித்து,

அவர்களது உணவிலிருந்து அத்தனைச் செலவுகளையும் பொறுப்பேற்றுச் செலவு செய்யக் கூடிய தனவந்தராக உம்மு ஸலமாவின் தந்தை திகழ்ந்தார். எனவே, தனது தந்தையைப் போலவே உம்மு ஸலமா அவர்களும் ஏழைகளுக்கு இரங்கக் கூடியவராகவும், இன்னும் தான தர்மங்களில் அதிகம் ஈடுபடக் கூடியவராகவும் திகழ்ந்தார்கள். தமது அண்டை வீட்டுக்காரர்களுடன் உணர்வுப்பூர்வமாக மிகவும் நெருக்கமான உறவும் கொண்டிருந்தார்கள். உம்மு ஸலமா அவர்களின் கோத்திரம் எவ்வாறு உபகாரத்திலும், பிறருக்கும் உதவுவதிலும் இன்பங்கண்டதோ, அதே போலவே குணங்கள் அமையப் பெற்றவரும், மக்காவில் அன்றைய தினம் வாழ்ந்த குறிப்பிடத்தக்க செல்வந்தக் குடும்பங்களில் ஒன்றான மக்சூம் குலத்திலிருந்து வந்தவராக அபூ ஸலமா அவர்களைக் கைப்பிடித்து, மணமகளாக மக்சூம் கோத்திரத்தாரின் இல்லத்திற்கு சென்ற உம்மு ஸலமா அவர்கள், அங்கும் தனது பெருந்தன்மையான குணங்களின் மூலம் அனைவருக்கும் பிடித்தமான நங்கையாகத் திகழ ஆரம்பித்தார்கள். இப்பொழுது மக்சூம் குடும்பங்களில் அன்பும், விருந்தோம்பலும் இன்னும் அனைத்து வித சந்தோஷங்களும் கரை புரண்டோட ஆரம்பித்தன.

ஆனால், இந்த சந்தோஷங்களும், குதூகுலங்களும் அபூ ஸலமா தம்பதியினர் இஸ்லாத்தைத் தங்களது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டு விட்டதன் பின்பு, தலைகீழாக மட்டுமல்ல, அடியோடு அந்தச் சூழ்நிலைகள் மாற்றம் பெற ஆரம்பித்தன.

முழு கோத்திரத்தாரும் இவர்களுக்கு எதிராகப் புயலெனக் கிளர்ந்தார்கள். பிறரைக் கொடுமைப்படுத்தி அதில் இன்பங் காண்பதே பிழைப்பாகக் கொண்டு திரியும், வலீத் பின் முகீரா போன்றவர்கள் இவர்களுக்கு தினம் தினம் புதுப் புதுப் பிரச்னைகளைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். இறுதியாக, மக்கத்துக் குறைஷிகளின் கொடுமைகள் தாங்கவியலாத நிலைக்குச் சென்ற பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களை, மற்ற மதத்தவர்களுடன் அனுசரணையாகவும், சகிப்புத் தன்மையுடனும் நடக்கக் கூடியவரான நஜ்ஜாஸி மன்னர் ஆட்சி செய்து கொண்டிருந்த அபீஸீனியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அவ்வாறு அபீஸீனியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த முதல் குழுவில் இருந்த 16 நபர்களில், 12 பேர் ஆண்களும், 4 பெண்களும் இடம் பெற்றிருந்தார்கள். இந்தப் 16 பேர் கொண்ட குழுவில் அபூ ஸலமாவும், உம்மு ஸலமாவும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தப் 16 பேர்களின் பெயர்கள் வருமாறு :-

1. உதுமான் பின் அஃப்பான் (ரலி)
2. அபூ ஹுதைஃபா பின் உத்பா (ரலி)
3. அபூ ஸலமா அப்துல்லா பின் அப்துல் அஸத் மக்சூமி (ரலி)
4. ஆமிர் பின் ரபீஆ (ரலி)
5. ஸுபைர் பின் அவ்வாம் (ரலி)
6. முஸ்அப் பின் உமைர்
7. அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி)
8. உதுமான் பின் அவ்ஃப் (ரலி)
9. அபூ ஸப்ரா பின் அபீ ரஹும் (ரலி)
10. ஹாதிப் பின் அம்ர் (ரலி)

11. சொஹைல் பின் வஹ்ப் (ரலி)

12. அப்துல்லா பின் மசூத் (ரலி)

பெண்களின் பெயர்கள் வருமாறு :-

1. ருக்கையா பின்த் முஹம்மது (ரலி) (ஸல்) (உதுமான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் மனைவி)

2. ஸிஹ்லா பின்த் சொஹைல் (ரலி) (அபூ ஹு தைஃபா பின் உத்பா(ரலி) அவர்களின் மனைவி)

3. உம்மு ஸலமா (அபூ ஸலமா (ரலி) அவர்களின் மனைவி)

4. லைலா பின்த் அபீ ஹஷ்மா (ரலி) (ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்களின் மனைவி)

இந்தக் குழுவினர் அபிஸீனியாவிற்குச் செல்வதற்கு கடற்கரையை அடைந்த பொழுது, இரண்டு கப்பல்கள் அந்தத் துறைமுகத்தில் அபீஸீனியாவிற்குச் செல்வதற்காகக் காத்திருந்தன. அதில் ஏறிக் கொண்ட இந்தக் குழுவினர், அபிஸீனியாவைச் சென்றடைந்தனர்.

இந்த முதல் குழுவிற்கு அடுத்தாக ஒரு குழு அபிஸீனியாவிற்குக் கிளம்பியது. அதில் 83 ஆண்களும், 19 பெண்களும் அடங்குவர். இந்தக் குழுவில் ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களும் இடம் பெற்றிருந்தார். அபிஸீனியாவில் தொடங்கிய புது வாழ்க்கை எந்தவித அடக்குமுறைகளும் இல்லாமல் மிகவும் அமைதியான முறையில் ஆரம்பித்தது. இவ்வாறு சென்ற குழுவில் முதன் முதலாக உம்மு ஸலமா (ரலி) அவர்கள், ஜைனப் என்ற பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்கள். இதனை அடுத்து உமர் என்ற மகவையும் பெற்றெடுத்தார்கள். இறுதியாக இன்னொரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தார்கள், அதன் பெயர் துர்ரா.

அபிஸீனியாவின் மன்னர் நஜ்ஜாஸி அவர்கள் இந்தப் புது மார்க்கத்தை கடை பிடிப்பவர்களுடன் மிகவும் அன்பாக நடந்து கொண்டார். எனவே, மக்காவின் வாழ்க்கையோடு அபிஸீனியா வின் வாழ்க்கையை ஒப்பிடும் போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக, மிகவும் அமைதியாகக் கழிந்து கொண்டிருந்தது.

முஸ்லிம்கள் அபிஸீனியாவில் மன்னரது நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டதுடன், அங்கு அமைதியான வாழ்வை வாழ்கின்றார்கள் என்று கேள்விப்பட்ட மக்கத்துக் குறைஷிகள், இது புதுமார்க்கத்துக் கிடைத்த அங்கீகாரம். இந்த அங்கீகாரத்தை நீடிக்க விட்டால், அதுவே நமது பாரம்பரிய சமுதாயத்திற்கான சாவு மணி என்பதைப் புரிந்து கொண்ட அவர்கள், இந்த அமைதியை நீடிக்க விடக் கூடாது என்று அதற்கான சதித் திட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தார்கள். வளர்ந்து வரும் இஸ்லாத்தை, அதன் தூதை இனி வளரவே விடக் கூடாது, அதற்காக நாம் ஏதாவதல்ல, எதையாவது செய்தாக வேண்டும் என்று நிலைக்கு வந்தனர்.

மிக நீண்ட ஆலோசனைகளின் அடிப்படையில் அவர்கள், உறுதியான நடவடிக்கைகான செயல்முறைக்கு ஆயத்தமானார்கள். அன்றைக்கு அரபுலகின் மிகச் சிறந்த அரசியல் வல்லுநர்களாகக் கணிக்கப்பட்ட அம்ர் பின் ஆஸ் மற்றும் அப்துல்லா பின் ரபீஆ ஆகிய இருவரையும் பரிசுப் பொருட்களுடன் நஜ்ஜாஸி மன்னரது அவைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் மூலம் நஜ்ஜாஸி மன்னரைச் சந்தித்து, முஸ்லிம்களைக் கைதிகளாக மக்காவுக்குக் கொண்டு வரத் திட்டமிட்டார்கள்.

நஜ்ஜாஸி மன்னரைச் சந்திப்பதற்கு முன்பாக, அவரது அமைச்சர்களையும், ஆலோசகர்களையும் முதலில் சந்தித்த இந்த மக்கத்துத் தூதுக் குழுவினர், இறுதியாகத் தான் நஜ்ஜாஸி மன்னரைச் சந்தித்தார்கள். அமைச்சர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் விலையுயர்ந்த பரிசுப் பொருட்களை வழங்கி, மன்னரைச் சந்திக்கும் பொழுது, மக்காவிலிருந்து வந்து குடியேறியுள்ள முஸ்லிம்களை

வெளியேற்றுவதற்கு ஒருபக்கச் சார்பாகவும், தங்களுக்கு சாதகமான முறையில் மன்னருக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்றும் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

இறுதியாக, பரிசுப் பொருட்களுடன் மன்னரைச் சந்தித்த மக்கத்துக் குறைஷிகளின் குழு, மன்னருக்கு மரியாதை செலுத்தி விட்டு பரிசுப் பொருட்களையும் கொடுத்து விட்டு, தாங்கள் வந்ததன் காரணமென்னவென்பதை விளக்க ஆரம்பித்தார்கள்.

மன்னரே..! உங்களது நாட்டில் நீங்கள் அடைக்கலம் கொடுத்திருக்கின்ற இந்த முஸ்லிம்கள், எங்களது முந்தைய மார்க்கத்தைத் துறந்து விட்டு புதியதொரு மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு கலவரக்காரர்களாக இவர்கள் மாறி விட்டார்கள். அவர்களது புதிய மார்க்கத்தின் கொள்கையின் காரணமாக, இரத்த பந்தங்களுக்கிடையே பிரிவினையை உண்டு பண்ணுகின்றார்கள். தந்தையை மகனுக்கு எதிராகவும், சகோதரர்கள் சகோதரர்களுக்கு எதிராகவும் எதிர்த்து நிற்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி விட்டார்கள். எங்களது பாரம்பரியப் பழக்க வழக்கங்கள், கலாச்சாரம் மற்றும் முன்னோர்களது வழிமுறைகளைக் கூட இவர்கள் உடைத்தெறிகிறார்கள். உங்களது பரந்த மனப்பான்மையின் காரணமாக இவர்களை நீங்கள் அமைதியாக இங்கு வாழ விட்டிருக்கின்றீர்கள், ஆனால் இவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்லர். இந்த நாட்டிலே குழப்பத்தை உண்டு பண்ணக் காரணமாகி விடுவார்கள், ஏனெனில் இவர்கள் உங்களது மார்க்கமான கிறிஸ்துவத்தின் மீதும் நம்பிக்கை கொள்ளவில்லை. எங்களைப் போல நீங்களும் பிரச்னைகளிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமென்றால், இவர்களை நீங்கள் எங்கள் கையில் ஒப்படைத்து நாடு கடத்துவதைத் தவிர வேறு வழி இல்லை, இவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை எங்களைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள் என்று கூறி முடித்தார்கள்.

இப்பொழுது, நஜ்ஜாஸி மன்னர் தனது அவையோரைப் பார்த்து, நடக்கின்ற வழக்கில் நாம் என்ன தீர்ப்புச் சொல்வது என்று கேட்பது போல இருந்தது அவரது பார்வை. மந்திரிப்பிரதானிகளோ, இது அவர்களது உள்நாட்டுப் பிரச்னை நாம் ஏன் தலையிட வேண்டும், மேலும், குறைஷிகள் தங்களிடம் ஏன் அவர்களை ஒப்படைக்கச் சொல்கின்றோம் என்பதற்கு அவர்கள் கூறிய காரணமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகத் தான் இருக்கின்றது என்றும் அவர்கள் கருத்துக் கூறினார்கள். எனவே, இவர்களை அரசியல் குற்றவாளிகளாகக் கருதி, குறைஷிகளிடமே ஒப்படைத்து விடுவது நல்லது என்று கூறினார்கள்.

மன்னர் நஜ்ஜாஸி அனைவருடைய கருத்தையும் கேட்டுக் கொண்டு, நடுநிலையான, தொலைநோக்குச் சிந்தனை கொண்டு, எதனையும் வெளிப்படையாகப் பேசக் கூடிய அவர், இப்பொழுது தனது கருத்து என்னவென்பதைக் கூற ஆரம்பித்தார்.

தீர்ப்பு என்பது இருபக்கங்களின் விவாதங்களைக் கேட்ட பின்பே வழங்க வேண்டும் என்று முடிவெடுத்த மன்னர் நஜ்ஜாஸி, அகதிகளின் தலைவரை அழைத்து உங்களது பக்க வாதம் என்னவென்பதைக் கூறுமாறு பணித்தார். எனவே, தங்களது தரப்பு நியாயங்களை முன்வைப்பதற்காக, முஸ்லிம்கள் ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களை தலைவராகக் கொண்ட குழுவை அனுப்பி வைத்தார்கள்.

மன்னர் நஜ்ஜாஸியின் அவைக்கு வந்த முஸ்லிம்களின் குழு மன்னருக்கு முகமன் தெரிவித்து விட்டு, தங்களுக்கான இருக்கையில் அமர்ந்து கொண்டு, தங்களது கருத்துக்களைக் கூற ஆரம்பித்தார்கள்.

பார்த்தீர்களா..! இந்த முஸ்லிம்களை..! இவர்கள் மிகவும் அகம்பாவம் பிடித்தவர்கள் என்று எதையோ குறை கண்டு பிடித்தவர் போலப் பேசிய அம்ரு இப்னுல் ஆஸ் அவர்கள், இந்த அவைக்கென மரியாதை

இருக்கின்றது. இவர்கள் இந்த அவைக்குள் நுழைந்தவுடன் மன்னருக்கு சிர வணக்கம் செய்திருக்க வேண்டும் என்று குற்றச்சாட்டாகக் கூறினார்.

இப்பொழுது, மன்னர் முஸ்லிம்களைப் பார்த்துக் கேட்டார். நீங்கள் இந்த அவையின் ஒழுங்குகளை ஏன் பேணவில்லை..!?

நாங்கள் முஸ்லிம்கள்..! படைத்தவனை மட்டுமே வணங்கக் கட்டளையிடப்பட்டிருக்கின்றோமே ஒழிய, அவனது படைப்புகளை வணங்குமாறு எங்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. நாங்கள் படைப்புகளுக்கு சிரம்பணிய மாட்டோம் என்று தனது பக்க நியாயத்தைக் கூறினார், ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்கள்.

நீங்கள், ஏதோ ஒரு புதிய மார்க்கத்தைக் கண்டுபிடித்து அதனைப் பின்பற்றி வருவதாகக் கேள்விப்பட்டேனே..?! அதுபற்றி என்ன கூறுகின்றீர்கள் என்று கேட்டார் மன்னர் நஜ்ஜாஸி. இப்பொழுது, மீண்டும் தனது பதிலை ஆரம்பித்தார் ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்கள்..!

மேன்மை தங்கிய மன்னர் அவர்களே..! நாங்கள் நாகரீமற்ற மக்களாக சிலைகளை வணங்கிக் கொண்டிருந்தோம், செத்த பிராணிகளைத் தின்று கொண்டிருந்தோம் மற்றும் வடித்தெடுக்கப்பட்ட போதையூட்டும் மது பானங்களையும் அருந்திக் கொண்டிருந்தோம். எங்களுடைய சமூகத்தில் ஒரு குலம் இன்னொரு குலத்தாரை விட உயர்வாக எண்ணிக் கொண்டு, எங்களுக்குள் மாச்சரியங்களை வளர்த்துக் கொண்டு, அதன் காரணமாக நூறாண்டுகளுக்கும் மேலாகக் கூட பகைமையை வளர்த்துக் கொண்டிருந்தோம். நாங்கள் சொந்த பந்த உறவுகளை என்றுமே எங்களுக்குள் பேணிக் கொண்டதில்லை. எங்களிடம் காட்டுச் சட்டம் தான் மிகைத்திருந்தது. வலிமையுள்ளவன் செய்தது சரி என்ற சட்டமே மேலோங்கி இருந்தது. சுருங்கச் சொன்னால் நாங்கள் மிருகத்தைப் போலத்தான் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

பின் அல்லாஹ் எங்களிடையே ஒரு தூதரை அனுப்பி, எங்களை நேர்வழிப்படுத்தினான். அவர் எங்களில் ஒருவராகத் தான் இருந்து வருகின்றார், இன்னும் அவருடைய குலம் கூட எங்களால் நன்கு அறியப்பட்டது தான். அவரைப் பொறுத்தவரை அவரை நாங்கள் உறவுகளை ஒன்றிணைக்கக் கூடியவராக, மேன்மைக்குரியவராக இன்னும் கண்ணியமிக்கவராகக் காண்கின்றோம். அவர் எங்களை அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் என்றும், உண்மையையே பேச வேண்டும் என்றும், கொடுக்கல் வாங்கல்களில் நீதத்தைப் பேணுமாறும் இன்னும் வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் எங்களுக்கு அவர் அறிவுறுத்துகின்றார். இன்னும் அவர் எது அனுமதிக்கப்பட்டது என்றும், எது தடை செய்யப்பட்டது என்றும் அவர் எங்களுக்கு அறிவுறுத்துகின்றார். அநாதைகள், ஏழைகள், மற்றும் நோயாளிகள், பெண்கள் ஆகிய யாவரும் சம அந்தஸ்துடையவர்களே, நமது சமூகத்தில் அவர்கள் அனைவருக்கு உரிமைகள் உள்ளன என்றும் கூறுகின்றார். இன்னும் அவர்களது உரிமைகளைப் பறிப்பது தவறானது என்றும் கற்றுத் தந்திருக்கின்றார். கற்பையும் மற்றும் மானத்தையும் இன்னும் நல்லொழுக்கத்தையும் பேணிக் கொள்ளுமாறும், குற்றம் பிடிப்பது, கோள் சொல்லுதல் போன்றவற்றிலிருந்து விலகி இருக்குமாறும் அவர் எங்களுக்குப் போதிக்கின்றார். இன்னும் தொழுகையை முறையாகப் பேணுமாறும், இறைவனுக்காக நோன்பு இருப்பதையும், வருமானத்திலிருந்து ஏழைகளுக்கென ஒரு பங்கை ஒதுக்கி ஜகாத்தாக கொடுக்குமாறும் அவர் எங்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றார்.

இதனைப் பின்பற்றியே, உங்கள் முன் நாங்கள் இப்பொழுது முஸ்லிம்களாக இருந்து கொண்டிருக்கின்றோம் என்று கூறி விட்டு, சட்டம், ஒழுங்கைப் பேணக் கூடியவர்களாகவும், குற்றங்களிலிருந்தும், ஒழுக்கக் கேடுகளிலிருந்தும் தவிர்ந்து வாழக் கூடியவர்களாகவும், ஜெம்ன

விரோதங்கள், பகைகளை மறந்து வாழக் கூடிய மனிதர்களாக நாங்கள் இன்று மாற்றம் பெற்றிருக்கின்றோம். அன்றைக்கு சமூகத்தை மறந்து வாழ்ந்து கொண்டிருந்த நாங்கள் தான், இன்று சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய மக்களாக மாறி இருக்கின்றோம். தனக்கு எதனை விரும்புகின்றாரோ அதனையே தனது சகோதரனுக்கும் விரும்பக் கூடிய மக்களாகவும் நாங்கள் மாற்றம் பெற்றிருக்கின்றோம்.

இதன் காரணமாக எங்களது சமூகம் எங்கள் மீது வெறுப்புக் கொண்டு, எங்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்யாத குறையாக எங்களைத் தொந்தரவு செய்கின்றார்கள். ஆனால் அவர்களின் கொடுமைகளின் காரணமாக நாங்கள் மீண்டும் அந்தப் படுபாதகப் படுகுழியில் விழத் தயாராக இல்லை. எங்களின் மீது சொல்லொண்ணாக் கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு அதன் உச்சத்தை அந்தக் கொடுமைகள் தாண்டிய போது தான், நாங்கள் எங்களது வாழ்விடங்களை விட்டு விட்டு, அகதிகளாக உங்களது நாட்டில் வந்து தஞ்சமடைந்திருக்கின்றோம். இன்னும் நீங்கள் நீதமான, நேர்மையான ஆட்சியாளர் என்பதையும், மத சகிப்புத் தன்மை கொண்டவர் என்பதையும், எங்கள் மீது கருணை காட்டக் கூடியவர் இன்னும் நல்லமுறையில் நடத்தக் கூடியவர்கள் என்பதையும் அறிந்த காரணத்தால் தான் இங்கு வந்திருக்கின்றோம்....,

... என்று கூறி முடித்தார் ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்கள்.

ஜாஃபர் (ரலி) அவர்களின் விளக்கத்தைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மன்னர் நஜ்ஜாஸி அவர்கள்,

உங்களது இறைத்தூதருக்கு இறைவனிடமிருந்து தூதுச் செய்தி வருவதாக நான் கேள்விப்பட்டேன், அதிலிருந்து சிலவற்றை ஓதிக்காட்டுங்கள், அதனை நான் செவிமடுக்க விரும்புகின்றேன் என்று கூறினார்.

கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த ஜாஃபர் (ரலி) அவர்கள், அத்தியாயம் மர்யம் லிருந்து சில வசனங்களை கேட்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் அளவுக்கு ஓத ஆரம்பித்தார்கள். திருமறையின் வசனங்களைச் செவிமடுத்த மன்னர் நஜ்ஜாஸியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓடி, அவரது தாடியை நனைத்துக் கொண்டிருந்தது. இறுதியாக, சுயநினைவிற்கு வந்த மன்னர், இது பைபிளில் கூறப்பட்டிருக்கும் வசனங்களைப் போலவே இருக்கின்றது, இரண்டும் ஒரே மூலத்திலிருந்து வந்தவை தான் என்று கூறினார். இப்பொழுது அவையிலிருந்தோர் என்ன செய்வதென்றே தெரியாது திகைத்தவர்களாக, மக்காவிற்குள் நுழையும் மக்களை எவ்வாறு இவர்கள் மந்திர வித்தை கொண்டு கட்டிப் போடுவதைப் போல கட்டிப் போடுகின்றார்களோ, அதே மாயா ஜால வித்தையை மன்னரிடமும் காட்டி விட்டார்கள் என்றே குறைஷிகள் எண்ணினார்கள்.

இப்பொழுது, மக்காவிலிருந்து வந்திருந்த குறைஷிகளின் பிரதிநிதிகளை நோக்கிய மன்னர் நஜ்ஜாஸி அவர்கள், இவர்கள் உயர் பண்புகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள், இன்னும் இவர்கள் விரும்பும் காலம் வரைக்கும் இந்த அபீசீனிய மண்ணில் வாழ்ந்து கொள்ளலாம் என்று பதிலளித்தார். இன்னும் அவர்களுக்குத் தேவையான அனைத்து வித பாதுகாப்புகளும் கொடுக்கப்படும் என்றும் கூறிய அவர், எனக்கு நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தப் பரிசுப் பொருட்களையும் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள், நீங்கள் ஒரு மலையளவு தங்கத்தைக் கொண்டு வந்து கொட்டினாலும், இந்த நேர்வழி பெற்ற மக்களை நான் உங்களது கைகளில் ஒப்படைக்க மாட்டேன் என்று கூறி குறைஷிகளைத் திருப்பி அனுப்பி விட்டார்.

மன்னரின் இந்தப் பதிலைக் கேட்ட அம்ர் இப்னுல் ஆஸ் அவர்களும், அப்துல்லா பின் அபீ ராபிஆ அவர்களும் சிறுமை அடைந்தவர்களாய், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, எந்த முகத்தைக் கொண்டு நாம் மக்காவுக்குத் திரும்புவது, நம்முடைய தலைவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று கேட்டுக் கொள்வது போல அவர்களது பார்வை அமைந்திருந்தது.

அனைத்து முயற்சிகளும் விழலுக்கு இரைத்த நீராய் ஆகி விட்டதே..! இன்னும் அவர்கள் முடங்கி விடவில்லை, மக்காவிற்குத் திரும்புவதற்கும் விரும்பவில்லை. மாறாக, அவர்களுக்குள் கூடி ஆலோசனை செய்து, இன்னுமொரு சதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தீர்மானித்தனர்.

இறுதியாக, ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி அம்ர் அவர்கள், இந்த திட்டத்தின்படி நாம் நடந்தால் உண்மையிலேயே நஜ்ஜாஸி கண்டிப்பாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பார். இந்தத் திட்டம் நிச்சயமாக நமக்குத் தோல்வியைத் தராது என்றும் அவர் கூறினார். இதனைக் கேட்ட அப்துல்லா அது என்ன திட்டம் சொல்லுங்கள் என்று கேட்டார்.

அதாவது, முஸ்லிம்கள் ஈஸா (அலை) அவர்களை மனிதராகவும், இறைவனுடைய தூதராகவும் தான் நம்பிக்கை கொள்கின்றார்கள், ஆனால் கிறிஸ்தவர்களோ அவரை கடவுளாகக் கருதுகின்றார்கள். முஸ்லிம்களுடைய புதிய வேதமானது, இன்னும் முஸ்லிம்களின் அந்த நம்பிக்கையானது, முஸ்லிம்கள் மீது மன்னர் நஜ்ஜாஸி வைத்திருக்கக் கூடிய நம்பிக்கையைத் தகர்த்தெறியக் கூடியதாக இருக்கும். இன்னும் முஸ்லிம்கள் தரக் கூடிய பதிலால் மன்னரது அனைத்துப் பிரதானிகளும் கடுமையாகக் கொதித்தெழுவார்கள் என்றும் கூறினார்.

அடுத்த நாள் காலையில் மன்னரது அவைக்குச் சென்ற குறைஷிகளின் தூதுக் குழுவினர், நேற்றைய தினம் நாங்கள் ஒரு தகவலை உங்கள் முன் கொண்டு வரத் தவறி விட்டோம், அதாவது இந்த முஸ்லிம்கள் ஈஸா (அலை) அவர்களை இறைவனது மகனாக ஏற்றுக் கொள்வதில்லை, மாறாக, அவரை ஒரு மனிதராகவும் இன்னும் இறைவனது அடிமையாகவும் தான் கருதுகின்றார்கள். எனவே, நீங்கள் அந்த முஸ்லிம்களை மீண்டும் அழைத்து, ஈஸா (அலை) அவர்கள் மீது அவர்கள் கொண்டிருக்கக் கூடிய நம்பிக்கை என்னவென்பதைக் கேட்டறிய வேண்டும் என்ற கோரிக்கையை மன்னர் நஜ்ஜாஸி முன் வைத்தனர்.

இப்பொழுது முஸ்லிம்கள் அவைக்கு வரவழைக்கப்பட்டு, ஈஸா (அலை) அவர்கள் பற்றிய உங்களது நம்பிக்கைகள் என்ன என்று கேட்கப்பட்டது. ஜாஃபர் (ரலி) அவர்கள் சத்தியத்தை முழங்கினார்கள். எங்களது இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் ஈஸா (அலை) அவர்கள் பற்றிக் கூறும் போது, அவர் அல்லாஹ்வின் அடியாரும், அவனது திருத்தூதருமாவார்கள், இன்னும் அல்லாஹ்வினுடைய ஆவி (ரூஹ்)யினாலும், இன்னும் அவனது வார்த்தை (கலிமா) யினாலும் வந்துதித்தவராவார் என்றும், தனது பதிலை முடித்தார்.

ஜாஃபர் (ரலி) அவர்களிடமிருந்து, ஈஸா (அலை) பற்றித் தெரிவித்த அந்த முழுமையான கருத்தைச் செவிமடுத்த மன்னர் நஜ்ஜாஸி அவர்கள், தனது பாதங்களை தரையில் அடித்துக் கொண்டு, ஆச்சரியத்துடன், “நான் எதனை உங்களிடமிருந்து கேட்டேனோ அவை அனைத்தும் சத்தியம், ஈஸா (அலை) அவர்கள் தன்னைப்பற்றி என்ன கூறியிருக்கின்றார்களோ, அதிலிருந்து நீங்கள் எதனையும் மாற்றவுமில்லை, சேர்க்கவுமில்லை, மிகச் சரியாகச் சொன்னீர்கள் என்று கூறினார்.

இப்பொழுது முஸ்லிம்களின் பக்கம் திரும்பிய மன்னர் நஜ்ஜாஸி அவர்கள், நீங்கள் எனது தேசத்தில் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழலாம், உங்களுக்கு எந்த சிறு தொந்தரவுகளும் அனுகாது.

பின்னர் குறைஷிகளின் தூதர்களின் பக்கம் திரும்பிய மன்னர், “இறைவனுடைய மிகப் பெரும் கருணையால், நாங்கள் எங்களுக்குத் தேவையான பதிலையும், விளக்கத்தையும் பெற்றுக் கொண்டோம்”. நீங்கள் கொண்டு வந்த பரிசுப் பொருட்களை எடுத்துக் கொண்டு, உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

மக்காவிலிருந்து சதித் திட்டத்தை நிறைவேற்றும் எண்ணத்துடன் வந்த அந்தத் தூதுக் குழுவினர், வெறுங்கையுடன் ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார்கள்.

அபீசீனியாவில் நடந்த இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியை படம் பிடித்தவாறு நம்முடைய நினைவலைகளுக்கு விருந்தாக்கி வைத்திருப்பவர், அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள். அவர்கள் இந்த முழு வரலாற்றையும் பதிவு செய்து வைத்து, நமக்கு வரலாற்றுப் பொக்கிஷமாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

உம்மு ஸலமா (ரலி) அவர்கள், அபீசீனியா வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பது பற்றியும், அங்கு அவர்கள் அனுபவித்த அமைதியான வாழ்வு பற்றியும், மன்னர் நஜ்ஜாஸி அவர்களது உயர்ந்த பண்புகள், குணநலன்கள் பற்றியும் விவரித்திருந்தாலும், தமது சொந்த மண்ணைப் பிரிந்து வாழ்ந்த அவர்களது மனங்களில் மக்காவைப் பற்றி நினைவுகள் அடிக்கடி வந்து போய் அவர்களை நோய் பிடித்தவர்கள் போல வாட்டியது. அதுவே ஒரு மனநோயாகவும் மாறியது.

எப்பொழுது மக்காவில் அமைதி திரும்பும், எப்பொழுது நாம் நமது சொந்த மண்ணை மிதிப்போம் என்றே அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருநாள், உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள், இப்பொழுது மக்காவின் நிலைமை முற்றிலும் மாற்றம் பெற்று விட்டது என்ற செய்தியைக் கேள்விப்பட்டார்கள். உமர்(ரலி) அவர்கள் இஸ்லாத்தினைத் தழுவியதன் காரணமாக, அவர்களது தலையீட்டின் காரணமாக மக்காவில் முஸ்லிம்களுக்கு எதிரான கொடுமைகள் குறைந்திருப்பதாகவும் தகவல் கிடைத்தது. இந்தச் செய்தியைக் கேட்ட அபீசீனியாவில் இருந்த முஸ்லிம்கள் மிகவும் சந்தோசமடைந்தார்கள். இன்னும் தங்களது நாட்டிற்குத் திரும்பவும் முடிவெடுத்தார்கள். அவர்களுடன் உதுமான் பின் அஃப்பான் (ரலி) அவர்களும் தனது குடும்பத்துடன் மக்காவுக்கு திரும்பத் தீர்மானித்தார்கள். ஆனால் அவர்கள் மக்காவை அடைந்த போது தான், இது வெறும் புரளி என்பதையும், மக்காவில் எந்த மாற்றமும் உண்டாகவில்லை, கொடுமைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதையும் அறிந்து கொண்டார்கள். ஆனால் அவர்கள் அறிந்து கொண்ட செய்தி அவர்களுக்கு எந்தப் பலனும் அளிக்கவில்லை.

ஒரு நபிமொழி அறிவிப்பின்படி, கீழ்க்கண்ட சம்பவத்தின் பின்னணி தான் அபீசீனியாவிலிருந்து மக்காவிற்கு அவர்களைத் திரும்பத் தூண்டியது. ஒருமுறை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் குர்ஆனிலிருந்து சில வசனங்களை ஓதிக் கொண்டிருந்த பொழுது, அதனைக் கேட்டுக் கொண்டிருந்த இறைநிராகரிப்பாளர்கள் அனைவரும் தங்களையறியாமலேயே, நிலத்தில் சிரம் தாழ்த்தினார் (சுஜூ து செய்தார்)கள். இந்தச் சம்பவம் தான் பெரிதாக்கப்பட்டு, புரளியாக அபீசீனியாவிற்குச் சென்று, குறைஷிகள் அனைவரும் இஸ்லாத்தைத் தழுவி விட்டார்கள் என்ற செய்தியாகப் போய்ச் சேர்ந்தது. இந்தச் செய்தியை உண்மை என நம்பித்தான் அவர்கள் நாடு திரும்பினார்கள்.

முஸ்லிம்களுக்கெதிரான குறைஷிகளின் கொடுமைகள் குறையவில்லையாதலால், முஸ்லிம்கள் மீண்டும் அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்ய முடிவெடுத்தனர். அதேகால கட்டத்தில் முஸ்லிம்கள் அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்வதை நிறுத்தி விட்டு, மதீனாவிற்குச் செல்லுமாறு பணித்தார்கள். அகபாவில் உடன்படிக்கை எடுத்துக் கொண்ட மதீனத்து முஸ்லிம்கள், இப்பொழுது மக்காவில் உள்ள முஸ்லிம்களை ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வருமாறு அழைத்தார்கள், இறைத்தூதர் (ஸல்)

அவர்களும் அவர்களது அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு, அபீசீனியாவை விடுத்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து செல்லுமாறு பணித்தார்கள். இன்னும் ஹிஜ்ரத் (இடம் பெயர்ந்து) வருகின்ற முஸ்லிம்களை தங்களது சொந்த சகோதரர்கள் போல கவனித்துக் கொள்வதாகவும் அன்ஸார்கள் (மதீனத்து முஸ்லிம்கள்) வாக்குறுதி அளித்தார்கள்.

### அபூ ஸலமா (ரலி) குடும்பத்தினரின் ஹிஜ்ரத்

அபூ ஸலமா (ரலி) அவர்கள் தனது குடும்பத்தாருடன் மக்காவை விட்டு மதீனாவிற்கு ஒட்டகத்தில் ஏறி பயணமாகத் தொடங்கினார். இதனை அறிந்த உம்மு ஸலமா (ரலி) அவர்களது குடும்பத்தார் ஓட்டகத்தை மறித்து, ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு,

அபூ ஸலமாவே..! நீங்கள் எங்கு விரும்புகின்றீர்களோ.. அங்கு நீங்கள் போய்க் கொள்வதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை, ஆனால் உங்கள் மனைவியோ எங்களைச் சேர்ந்தவள், எனவே, அவரை நீங்கள் விட்டு விட்டுத் தான் போக வேண்டும்.

நேற்றைக்கு அபிசீனியாவிற்கு கூட்டிக் கொண்டு போனீர்..! இன்றைக்கு மதீனாவிற்குக் கூட்டிக் கொண்டு போகின்றீர், அவளை வைத்து நிம்மதியாக குடும்பம் நடத்தத் தெரியாத உமக்கு எதற்கு மனைவி என்று அவர்கள் ஏளனமாகச் சிரித்தார்கள்.

உம்மு ஸலமா (ரலி) அவர்களது குடும்பத்தினர் நடந்து கொண்ட விதத்தைக் கேள்விப்பட்ட அபூ ஸலமா குடும்பத்தினர் உம்மு ஸலமா (ரலி) அவர்களிடம் வந்து, நீ பெற்றிருக்கின்ற பிள்ளைகள் எங்களது இரத்த வழி வாரிசுகள், அதனை உன்னுடைய வளர்ப்பில் நாங்கள் விட முடியாது, அவர்கள் எங்களது இரத்தமும், சதையும் ஆவார்கள், எனவே அவர்களை நாங்கள் எடுத்துச் சென்று வளர்த்துக் கொள்கின்றோம் என்று கூறி, பிள்ளைகளைத் தங்களுடன் அழைத்துச் சென்று விட்டார்கள்.

சற்று முன் மதீனாவை நோக்கிய பயணத்தில் இருந்து கொண்டிருந்த ஒட்டு மொத்த குடும்பமும் இப்பொழுது, தனித்தனியாக மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு விட்டது. இவையெல்லாம் நடந்து கொண்டிருந்த பொழுது, அபூ ஸலமா (ரலி) அவர்கள் தனது மனைவியை விட்டு விட்டு தன்னந்தனியாக மதீனாவை நோக்கிய தனது பயணத்தைத் தொடர்ந்தார், உம்மு ஸலமா (ரலி) அவர்களை அவர்களது உறவுக்காரர்கள் அழைத்துச் சென்று விட்டார்கள், உம்மு ஸலமாவின் பிள்ளைகளை அபூ ஸலமா (ரலி) அவர்களின் குடும்பத்தவர்கள் அழைத்துச் சென்று விட்டார்கள்.

ஆக, மொத்த குடும்பமே இப்பொழுது முற்றிலும் பிரிந்து போய் நிற்க, நடப்பது அத்தனையும் நிஜமா..! என்று கண் கலங்கிய உம்மு ஸலமா (ரலி) அவர்கள், பிரிவுத் துயரால் வாடி நின்றார்கள். ஒவ்வொரு நாளும் தனது கணவரையும், பிள்ளைகளையும் பிரிந்த அந்த இடத்திற்கு வந்து அந்த சோக நினைவுகளில், தன்னை இழந்து அழுது கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அந்த வழியே போய்க் கொண்டிருந்த உம்மு ஸலமா (ரலி) அவர்களின் கோத்திரத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அந்த இடத்தில் அமர்ந்து அழுது கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, உம்மு ஸலமாவே..! உமக்கு என்ன நேர்ந்தது, ஏன் இப்படி அழுது கொண்டிருக்கின்றாய்? என்று கேட்டார். நடந்த அந்தத் துயர நிகழ்வுகளை அவரிடம் சொன்னார். அந்த மனிதர் உம்மு ஸலமா (ரலி) மற்றும் அபூ ஸலமா (ரலி) ஆகியோர்களின் உறவினர்களிடம் போய், இந்த பெண்ணை ஏன் நீங்கள் இப்படி சித்தரவதை செய்கின்றீர்கள். நீங்கள் இந்தப் பெண்ணை இப்படி குழந்தைகளைப் பிரித்து வைத்து அழகு பார்ப்பது முறையா? என்று அவர்களது தவறை தெளிவான முறையில் எடுத்துச் சொன்னதன் பின்பு, அவர்கள் தங்களது தவறை

உணர்ந்து, குழந்தைகளை திருப்பிக் கொண்டு வந்து உம்மு ஸலமா (ரலி) அவர்களிடம் கொண்டு வந்து விட்டுச் சென்றார்கள். அத்துடன் மதீனாவுக்குச் செல்வதற்கும் அவர்கள் அனுமதி தந்தார்கள்.

ஆனால் எப்படி அவரால் தன்னந்தனியாக மதீனாவுக்குச் செல்ல முடியும்? அவருடன் மதீனா வருவதற்கு யாரும் தயாராக இல்லை. இறுதியாக, தைரியத்தை வரவழைத்துக் கொண்ட உம்மு ஸலமா (ரலி) அவர்கள் தன்னந்தனியாகவே தனது பிள்ளைகளுடன் ஒட்டகத்தில் தனது பயணத்தைத் தொடர்ந்தார்கள். தன்ஈம் என்ற இடத்திற்கு அருகே செல்லும் போது, அந்த வழியே வந்து கொண்டிருந்த உதுமான் பின் தல்ஹா அவர்களை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் சந்தித்தார்கள். இந்த உதுமான் பின் தல்ஹா அவர்கள் அப்பொழுது இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை.

உம்மு ஸலமா (ரலி) அவர்களைப் பார்த்த உதுமான் பின் தல்ஹா அவர்கள், உம்மு ஸலமா அவர்களே..! தன்னந்தனியாக நீங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார். உம்முடன் வருவதற்கு உமது குடும்பத்தில் எவருமா கிடைக்கவில்லை? என்று வினா எழுப்பிய அவருக்கு, நான் எனது இறைவனை முழுமையாகச் சார்ந்து இந்தப் பயணத்தைத் துவங்கினேன், அவனே எனது பாதுகாவலன், அவனே எதிரிகளிடமிருந்து என்னைச் சூழ்ந்து காக்கிறவன், அவனால் மட்டுமே என்னைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையில் நான் பயணத்தைத் தொடங்கிவிட்டேன் என்று கூறினார்.

உதுமான் பின் தல்ஹா அவர்கள் உம்மு ஸலமா (ரலி) அவர்களுக்கு துணைக்காக மதீனா வரை வரச் சம்மதித்தவராக, ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

உம்மு ஸலமா (ரலி) அவர்கள் உதுமான் பின் தல்ஹா அவர்களது இந்த உதவியைப் பின்னாளில் இவ்வாறு நினைவு கூரக் கூடியவராக இருந்தார். அந்த அறியாமைக்காலத்திலும் இப்படியும் ஒரு மனிதரா! இவரைப் போல கிஞ்சிற்றும் கெட்ட எண்ணம் கொண்ட மனிதரை நான் பார்த்ததே இல்லை, அவர் எனக்கு எந்தக் கெடுதலும் நினைக்கவில்லை, எந்த தொந்தரவும் செய்யவில்லை. எப்பொழுதெல்லாம் ஓய்வெடுக்க ஒட்டகத்தை நிறுத்தினாலும், ஒட்டகத்தைக் கட்டிப் போட்டு விட்டு, அவர் எங்களை விட்டு தூரப் போய் விடுவார். அதன் மூலம் எனக்கு அவர் சங்கோஜமும், சங்கடமும் ஏற்படுவதிலிருந்து என்னைப் பாதுகாத்தார். பின்பு பயணத்தைத் துவங்கும் போது, நானும் எனது பிள்ளைகளும் ஒட்டகத்தில் ஏறி உட்காரும் வரைக்கும் தூர நின்று கொண்டு விட்டு, நாங்கள் ஏறி முடித்ததும், ஒட்டகத்தின் மூக்கணாங்கயிறைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்து விடுவார்.

சில நாட்கள் கழித்து மதீனாவின் வெளிப்புறப் பகுதியில் அமைந்த இடமான கூபாவிற்கு உம்மு ஸலமா (ரலி) அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அங்கு பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்தார்கள் அந்த இடத்தில் தான் குடியிருந்தார்கள். எனவே, அபூ ஸலமா (ரலி) அவர்களும் கூட இங்கு தான் இருக்க வேண்டும், நீங்கள் அவருடன் போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள் நான் திரும்பிப் போகின்றேன் என்று கூறி உதுமான் பின் தல்ஹா அவர்கள் திரும்பிப் போய் விட்டார்கள்.

உதுமான் பின் தல்ஹா அவர்கள் செய்த, இந்த காலம் அறிந்து செய்த உதவியானது மறக்கக் கூடியதல்ல, அவரது நற்பண்பு என்னை மிகவும் பாதித்து விட்டது என்று கூறுக் கூடியவர்களாக உம்மு ஸலமா (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

இறுதியாக, உம்மு ஸலமா (ரலி) அவர்கள் தனது கணவருடன் சேர்ந்து கொண்டார்கள், அளவில்லா சந்தோஷமடைந்தார்கள். இப்பொழுது உடைந்து சிதறிப் போன அபூ ஸலமா (ரலி) அவர்களின்

குடும்பத்தவர்கள் மீண்டும் ஒன்றிணைந்தார்கள், குழந்தைகளும் தங்களது பெற்றோர்களின் கண்காணிப்பில் சந்தோஷமடைந்தார்கள்.

அபூ ஸலமா (ரலி) ஏற்கனவே பத்ருப் போரில் கலந்து கொண்டு, சிறப்புப் பெற்றிருந்தார்கள், அதனைப் போலவே உஹதுப் போரிலும் கலந்து கொண்ட சிறப்புக்குரியவராகத் திகழ்ந்தார். ஆனால் இந்தப் உஹதுப் போரில் அபூ உஸமா ஜுஸ்மி என்பவர் எறிந்த கத்தி ஒன்று மிக ஆழமான காயத்தை அபூ ஸலமா (ரலி) அவர்களுக்கு ஏற்படுத்தியது, அதன் மூலம் அவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டார்கள். மாதக் கணக்கில் அதற்கான மருத்துவம் செய்தும் பலனளிக்கவில்லை. மேற்புறத்தில் ஆறிய புண், உள்பகுதியில் சீழ் வைத்து அதிக ரணத்தைத் தந்து கொண்டிருந்தது.

உஹதுப் போர் முடிந்து சற்று இரண்டு மாதங்கள் இருந்த நிலையில், பனூ அஸத் குலத்தவர்கள் முஸ்லிம்களைத் தாக்குவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், பனூ அஸத் குலத்தவர்களை எதிராகப் போர் செய்வதற்குத் தயாராகும்படியும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும், தனது தோழர்களுக்குக் கட்டளையிட்டார்கள். பனூ அஸத் குலத்தவர்களுக்கு எதிராகப் புறப்பட்ட படைக்குத் தலைமைத் தளபதியாக அபூ ஸலமா (ரலி) அவர்களைத் தான், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நியமித்தார்கள். இந்தப் படையில் மிகப் பெரும் படைத்தளபதிகளாக விளங்கிய அபூ உபைதா அல் ஜர்ராஹ் (ரலி) மற்றும் சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) போன்ற மிகச் சிறப்புப் பெற்ற தளபதிகளும் இடம் பெற்றிருந்தார்கள்.

அபூ ஸலமா (ரலி) அவர்களிடம் இஸ்லாமியக் கொடியைக் கொடுத்து விட்டு, போர் உத்திகளை எவ்வாறு வகுத்துச் செயல்பட வேண்டும் என்பதை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விளக்கினார்கள்.

பனூ அஸத் குலத்தவர்கள் வசிக்கக் கூடிய பகுதியின் எல்லைக் கோட்டுக்கருகே நமது படைகளை நிறுத்துங்கள். அவர்கள் வந்து தாக்குதவற்கு முன்பாக நீங்கள் அவர்களை தாக்க ஆரம்பித்து விடுங்கள். அவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து விடாதீர்கள் என்று கட்டளையிட்டார்கள்.

இப்பொழுது, அபூ ஸலமா (ரலி) அவர்களது தலைமையில் 150 பேர் கொண்ட இஸ்லாமியப் படை கிளம்பியது. பனூ அஸத் குலத்தவர்களது எல்லைக் கோட்டுக்கருகே வந்த இஸ்லாமியப் படை சற்றும் தாமதிக்காது தங்களது தாக்குதலைத் தொடுத்தார்கள். உஹதுப் போரின் வெற்றிக்குப் பின், நடந்த இப்போரில் முஸ்லிம்கள் கண்டிப்பாக வெற்றி பெற வேண்டும் என்ற நிலை இருந்தது. ஏனெனில் சுற்றி உள்ள யூத மற்றும் எதிரிகளுக்கு இதன் மூலம் சிறந்த பாடத்தையும், முஸ்லிம்களைப் பற்றிய அச்ச உணர்வையும் ஊட்ட வேண்டிய அவசியம் முஸ்லிம்களுக்கு இருந்த காரணத்தால், தங்களது முழு பலத்தையும் பிரயோகித்து, வெற்றி அல்லது வீர மரணம் என்ற உயர்ந்த நோக்கத்தில் போரை, வெற்றியை நோக்கிக் கொண்டு சென்ற முஸ்லிம்கள், இறுதியில் பனூ அஸத் கோத்திரத்தாரை வேரறுத்து வெற்றி வாகை சூடினார்கள்.

இந்தப் போரில் தனக்கு ஏற்பட்ட காயத்தையும் மறந்து தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்காகவும், இறைத்திருப்தியைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் அபூ ஸலமா (ரலி) அவர்கள் போரிட்டார்கள். அவர்களது வாள் அனைத்துப் பக்கமும் சுழன்று, எதிரிகளை நிலைகுலைய வைத்தது. இறுதியில், முஸ்லிம்களின் வீரத்திற்கு முன்னால் மண்டியிட்டு, தோற்று ஓடினார்கள் பனூ அஸத் குலத்தவர்கள்.

இப்பொழுது ஏற்கனவே காயம் பட்ட இடத்தில் இருந்து ரணம், வலியாக மாறி, அந்த இடத்தில் இரத்தம் ஒழுக ஆரம்பித்தது. முஸ்லிம்கள் வெற்றி பெற்று விட்டார்கள். அதிகமான கனீமத் பொருட்கள்

கைப்பற்றப்பட்டன. மதீனாவை விட்டுக் கிளம்பி 29 நாட்கள் கழித்து மீண்டும் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் 8 ம் தேதியன்று முஸ்லிம்கள் மீண்டும் மதீனாவிற்குள் நுழைந்தார்கள்.

அபூ ஸலமா (ரலி) அவர்களின் காயத்தைப் பார்த்த உம்மு ஸலமா (ரலி) மிகுந்த மன வேதனை அடைந்தார்கள்.

### அபூ ஸலமா (ரலி) மரணம்

அபூ ஸலமா (ரலி) அவர்கள் மிகவும் கவலைக்கிடமான நிலையில் படுக்கையில் கிடக்கும் பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அபூ ஸலமாவைப் பார்க்க வீட்டிற்கு வந்தார்கள். அபூ ஸலமா (ரலி) அவர்களுக்கு மரணம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அபூ ஸலமா (ரலி) அவர்களின் மீது கையை வைத்து, அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அபூ ஸலமா (ரலி) அவர்களுக்காகப் பிரார்த்தித்தார்கள், இன்னும் அபூ ஸலமா (ரலி) அவர்களும் இறைவனிடம் பிரார்த்தித்தார்கள், இறைவா! என்னைப் போலவே என்னுடைய குடும்பத்தை பாதுகாத்துக் கவனித்துக் கொள்கின்ற ஒருவரை, துணைவராக ஆக்கி வைப்பாயாக! என்று பிரார்த்தித்தார்கள். இன்னும் உம்மு ஸலமா (ரலி) அவர்களுக்கு கவலையையும், கடினமான வாழ்வையும் தராத ஒருவரை அவருக்கு துணைவராக ஆக்கி வைப்பாயாக..! என்றும் தனது மனைவிக்காகப் பிரார்த்தித்தார்கள்.

இந்தப் பிரார்த்தனைக்குப் பின்பு, அபூ ஸலமா (ரலி) அவர்களை மரணம் வந்தடைந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது கரங்களால் அபூ ஸலமா (ரலி) அவர்களின் கண்களை மூடினார்கள். அபூ ஸலமா (ரலி) அவர்கள் தனக்காகப் பிரார்த்தித்ததை அறிந்த உம்மு ஸலமா (ரலி) அவர்கள், அபூ ஸலமாவை விட மிகச் சிறந்த கணவர் யார்? என்று ஆச்சரியப்பட்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களே..! நான் எனக்காக இறைவனிடம் என்ன கேட்க வேண்டும் என்பதை எனக்குக் கற்றுத் தாருங்கள் என்று உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

நீங்கள் உங்களுடைய மற்றும் அபூ ஸலமா (ரலி) அவர்களுடைய பாவ மன்னிப்பிற்காக இறைவனிடம் துஆச் செய்து கொள்ளுங்கள், உங்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கித் தரும்படி இறைவனிடம் முறையீடு செய்து கொள்ளுங்கள் என்ற பிரார்த்தனையை இறைத்தூதர் (ஸல்) அவர்கள், உம்மு ஸலமா (ரலி) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்தவாறு நான் பிரார்த்தித்தேன், இறைவன் என்னுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான். கணவர் இறந்ததன் பின்பு முஸ்லிம் பெண்கள் அனுஷ்டிக்கக் கூடிய அந்த இத்தா என்ற காத்திருப்புக் காலம் முடிவடைந்தது.

### இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் திருமணம்

இப்பொழுது இறைவன் உம்மு ஸலமா (ரலி) அவர்களின் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டதற்கிணங்க, முதலில் அபுபக்கர் (ரலி) அவர்கள் உம்மு ஸலமா (ரலி) அவர்களிடம் ஒரு தூதுவரை அனுப்பி, அவர்களை மணந்து கொள்ளத் தயாராகக் இருப்பதாகக் கூறுகின்றார்கள். ஆனால் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அபுபக்கர் (ரலி) அவர்களை மணந்து கொள்ள மறுத்து விடுகின்றார்கள்.

பின்பு உமர் (ரலி) அவர்கள் மணந்து கொள்ளத் தயாராக இருந்தும், அதனையும் மறுத்து விடுகின்றார்கள்.

பின்பு இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தான் மணக்கத் தயாராக இருப்பதாகச் செய்தி சொல்லி அனுப்பி விடுகின்றார்கள்.

இப்பொழுது உம்மு ஸலமா (ரலி) அவர்களை மணந்து கொள்ள மூன்று நபர்கள் காத்திருக்கின்றார்கள். தலை வெடித்து விடும் அளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது உம்மு ஸலமா (ரலி) அவர்களுக்கு..! அதற்குக் காரணமும் இருந்தது.

முதலாவதாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வேண்டுகோளை நான் உதாசிணம் செய்தால், நான் செய்து வைத்திருக்கின்ற நற்செயல்கள் அழியக் காரணமாகி விடுமே..!

இரண்டாவதாக, நானோ வயதான பெண்.

மூன்றாவதாக, எனக்கோ அதிகமான பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் நான் எந்த முடிவை எடுப்பது என்று திணறிக் கொண்டிருந்த உம்மு ஸலமா (ரலி) அவர்களுக்கு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு ஆலோசனை கூறினார்கள்.

உம்மு ஸலமா (ரலி) அவர்களே..! நீங்கள் அவசரப்பட வேண்டாம். இறைவனிடம் முறையிட்டு, இதற்கு சரியான தீர்வை வழங்குமாறு அவனிடமே உதவி கோருங்கள், நானும் உங்களுக்காக துஆச் செய்கின்றேன் என்று கூறி அவர்களது மன உலைச்சலுக்கு தீர்வு சொன்னார்கள்.

இன்னும் உம்மு ஸலமா (ரலி) அவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) இவ்வாறு பதில் கூறினார்கள். நீங்கள் வயதான பெண்மணி என்றால் நானும் வயதானவன் தான், பிள்ளைகளைப் பொறுத்தவரை நீங்கள் கவலைப்பட வேண்டாம், அவர்களுக்கு நான் பாதுகாவலனாக இருந்து அவர்களுக்குத் தேவையானவற்றை செய்து கொடுக்கவும் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன் என்று வாக்குறுதியளித்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இந்த பதிலால், மனம் மகிழ்ந்த உம்மு ஸலமா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணக்கச் சம்மதித்தார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தார்களுடன் இணைவதை மிகப் பெரும் பாக்கியமாகக் கருதினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணந்து கொண்டதன் மூலம் அபூ ஸலமா (ரலி) அவர்கள் தனது மனைவிக்குச் செய்த பிரார்த்தனைகள் நிறைவேறியது. ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு, ஷவ்வால் மாதம் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும், உம்மு ஸலமா (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடந்தது.

### அன்னையின் சிறப்புக்கள்

அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நாளின் அஸர் தொழுகையின் பின்பு தனது மனைவிமார்களின் வீட்டிற்குச் சென்று, அவர்களின் நலம் மற்றும் தேவைகள் குறித்து விசாரித்து வரக் கூடியவர்களாக இருந்தார்கள். அவ்வாறு அவர்கள் மனைவிமார்களின் வீடுகளுக்குப் புறப்படும் பொழுது, எங்களில் மூத்தவரான உம்மு ஸலமா (ரலி) அவர்ளின் வீட்டிலிருந்து ஆரம்பித்து, இறுதியில் எனது (ஆயிஷா (ரலி)) வீட்டோடு முடித்துக் கொள்வார்கள்.

அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களின் அழகு, கல்வி மற்றும் ஞானத்தின் காரணமாக இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவிமார்களில் சிறந்த இடத்தினை வகித்தார்கள்.

ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பின்பு, தங்களுடன் கொண்டு வந்திருக்கும் பலிப் பிராணிகளைக் அறுத்துப் பலியிட்டு விட்டு, தங்களது தலைமுடியை சிரைத்துக் கொள்ளும்படி தனது தோழர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கட்டளையை

உடனே செயல்படுத்துவதில் தோழர்கள் சற்று ஆர்வங்குன்றி இருந்தார்கள் என்பதோடு, யாரும் பலிப்பிராணிகளை அறுக்காமல் தாமதித்துக் கொண்டிருந்தார்கள்.

நிலைமையைப் புரிந்து கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களிடம் இந்தப் பிரச்னையை எவ்வாறு தீர்ப்பது என்று ஆலோசனை கலந்த பொழுது அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறினார்கள்,

நீங்கள் யாரிடமும் எதுவும் பேச வேண்டாம். முதலில் நீங்கள் சென்று உங்களது பலிப்பிராணிகளை நீங்கள் அறுத்துப் பலியிடுங்கள். நீங்கள் அதனைச் செய்த பின்பு, உங்களது தோழர்கள் உங்களுக்குக் கட்டுபட வேண்டியது அவசியமாகி விடும் பொழுது, அவர்கள் தானாகவே வந்து அவரவர் பலிப்பிராணிகளை அறுத்துப் பலியிட்டு விட்டு, முடிகளை சிரைத்துக் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள் என்று ஆலோசனை கூறினார்கள்.

அதன்படியே நடந்து கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கொடுத்த ஆலோசனை நன்கு வேலை செய்வதைப் பார்த்தார்கள். தனது தோழர்களும் இப்பொழுது தங்கள் பலிப்பிராணிகளை அறுத்துப் பலியிட ஆரம்பித்து விட்டதுடன், அந்தப் பிரச்னை முடிவுக்கு வந்தது.

அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் நடக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இன்னும் அவர்கள் கல்வியறிவு பெற்றிருந்ததுடன், ஏழைகளுக்கும் இன்னும் தேவையுடையவர்களுக்கும் உதவி செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களின் வீட்டில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இருந்த காலங்களில் பல முறை திருமறையின் வசனங்கள் அருள் செய்யப்பட்டிருக்கின்றன. சூரா அஹ்ஸாப் ன் இந்த வசனங்கள் அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களின் வீட்டில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இருந்த காலத்தில் தான் அருள் செய்யப்பட்டது.

(நபியின் மனைவிகளே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள். முன்னர் அஞ்ஞான காலத்தில் (பெண்கள்) திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்கள் திரியாதீர்கள் தொழுகையை முறைப்படி உறுதியுடன் கடைப்பிடித்து தொழுங்கள் ஜகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் (நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தங்களை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் நாடுகிறான். (33:33)

இன்னும் சூரா அத் தவ்பா வின் பல வசனங்கள் அன்னையவர்களின் இல்லத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இருந்த காலத்தில் தான் அருள் செய்யப்பட்டது.

வேறு சிலர் தம் குற்றங்களை ஒப்புக்கொள்கின்றனர் ஆனால் அவர்கள் (அறியாது நல்ல) ஸாலிஹான காரியத்தைக் கெட்ட காரியத்துடன் சேர்த்து விடுகிறார்கள். ஒரு வேளை அல்லாஹ் அவர்களின் (தவ்பாவை ஏற்று) மன்னிக்கப் போதும், நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், பெருங் கிருபையாளனாகவும் இருக்கின்றான். (9:102)

இன்னும் இந்த வசனமும்,

(அல்லாஹ்வின் உத்தரவை எதிர்பார்த்து) விட்டு வைக்கப்பட்டிருந்த மூவரையும், (அல்லாஹ் மன்னித்து விட்டான்) பூமி இவ்வளவு விசாலமாக இருந்தும், அது அவர்களுக்கு நெருக்கமாகி அவர்கள் உயிர் வாழ்வதும் கஷ்டமாகி விட்டது - அல்லாஹ்(வின் புகழ்) அன்றி அவனைவிட்டுத் தப்புமிடம் வேறு அவர்களுக்கு இல்லையென்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் - ஆகவே, அவர்கள்

பாவத்திலிருந்து விலகிக் கொள்ளும் பொருட்டு, அவர்களை அல்லாஹ் மன்னித்தான் நிச்சயமாக அல்லாஹ் (தவ்பாவை ஏற்று) மன்னிப்பவனாகவும், மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கின்றான். (9:118)

மேலே உள்ள இறைவசனங்கள், கஅப் இப்னு மாலிக் (ரலி), ஹிலால் பின் உமைய்யா (ரலி), மராரா பின் அர்ராபிஆ (ரலி) ஆகியோர்கள், இறைவனிடம் தவ்பா (பாவ மன்னிப்பு) செய்து கொண்டதன் பின்பு, அதன் பலனாக அவர்களை மன்னித்து மேற்கண்ட வசனத்தை இறக்கியருளினான். மேலே உள்ள மூன்று தோழர்களும், எந்தவித நியாயமான காரணமுமின்றி தபூக் யுத்தத்திற்குச் செல்லாமல் மதினாவிலேயே தங்கி விட்டார்கள். எனவே, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உத்தரவுப்படி, இந்த மூன்று நபர்களுடன் யாரும் எந்தவித உறவும், கொடுக்கல் வாங்கல், பேச்சு வார்த்தை எதுவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று மதீனத்து முஸ்லிம்களுக்கு உத்தரவிட்டார்கள். இந்த உத்தரவால் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த மூன்று பேரும், இறைவனிடம் மன்றாடி முறையிட்டு பாவ மன்னிப்புத் தேடியதன் பின்பு, இறைவன் இந்த மூன்று பேர்களையும் மன்னித்துத் தான் மேற்கண்ட வசனத்தை இறக்கியருளினான்.

அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களது இல்லத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தூங்கிக் கொண்டிருந்த பொழுது தான், மேற்கண்ட வசனம் அருள் செய்யப்பட்டது. இரவின் இறுதிப் பகுதியில் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அந்த மூன்று நபர்களின் பாவ மன்னிப்பை இறைவன் ஏற்றுக் கொண்டான் என்று அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

இதனைக் கேட்ட அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களே..! இந்த நற்செய்தியை அவர்களிடம் தெரிவிக்கச் சொல்வோமா? என்று கேட்டார்கள். இந்த அகால நேரத்தில் அவர்களைத் தொந்திரவு செய்ய வேண்டாம். காலை பஜ்ருத் தொழுகைக்குப் பின்பு யாரிடமாவது சொல்லி அனுப்பி, அவர்களுக்கு வாழ்த்துச் சொல்வோம் என்று கூறினார்கள். இந்த செய்தியைக் கேட்ட அந்த மூன்று பேரும் மகிழ்ச்சி அடைந்தார்கள், இன்னும் அனைத்து நபித்தோழர்களும் சந்தோஷமடைந்தார்கள்.

இன்னும் அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் பல போர்களுக்குச் சென்றுள்ளார்கள். பனீ முஸ்தலக் போர், தாயிஃப் போர், கைபர், ஹு னைன் மற்றும் மக்கா வெற்றியின் பொழுதும் அன்னையவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். இன்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஹு தைபிய்யா உடன்படிக்கையின் பொழுதும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். இன்னும் பைத்அத்தும் செய்து கொண்டார்கள்.

சல்மான் அல் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒருமுறை ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் உரையாடுவதற்காக வந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு தஹிய்யா கல்பி (ரலி) என்ற தோழரும், இன்னும் அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் அங்கிருந்தார்கள். பேசி முடித்த பின், சற்று முன் உரையாடி விட்டுச் சென்ற நபர் யார் என்று தெரியுமாக இருந்தால் கூறுங்கள் என்று கூறினார்கள்.

அவர் உங்களது மதிப்பிற்குரிய தோழர் தஹிய்யா கல்பி (ரலி) அவர்கள் என்று அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதன் பின், இல்லை..! வந்தவர் ஜிப்ரீல் (அலை) அவர்களாவார்கள், அவர் தஹிய்யா கல்பி (ரலி) அவர்களுடைய உருவத்தில் வந்திருந்தார்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் மார்க்க விசயங்களில் நல்ல கல்வி ஞானம் பெற்றவராகத் திகழ்ந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபிமொழிகளில் 387 நபிமொழிகளை மனனமிட்டு வைத்திருந்தார்கள். இஸ்லாமிய சட்டங்களில் உறவு முறைகள் குறித்தும், தத்தெடுத்தல் மற்றும் மணவிலக்கு குறித்தும் நுணுக்கமான சட்டங்களை அறிந்து வைத்திருந்தார்கள். இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களில் தனக்கு ஏற்படும் சந்தேகங்களை அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அன்னையிடம் வந்து கலந்தாலோசனை செய்து விளக்கம் பெற்றுக் கொள்வார்கள்.

இஸ்லாமியச் சட்ட வழங்கல்களில் மற்றும் தீர்ப்பு வழங்குவதில் தனிச்சிறப்புப் பெற்ற நபித்தோழர்கள் பலர் அன்னையின் பெயரால் பல மார்க்கத் தீர்ப்புகளை வழங்கியுள்ளார்கள். அன்னையின் பெயரால் அறிவிக்கப்படும் பல சட்டத்தீர்ப்புகளைக் கொண்டு, அந்தத் தீர்ப்புகள் செல்லத்தக்கவை என்று அவர்கள் சான்று பகர்ந்திருக்கின்றார்கள்.

நீதித்துறையில் தீர்ப்பு வழங்கும் தகுதி பெற்ற நபித்தோழர்களின் பட்டியலில் அன்னையவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். அவர்களாவன :

1. உம்மு ஸலமா (ரலி)
2. அனஸ் பின் மாலிக் (ரலி)
3. அபூ ஸயீத் அல் குத்ரீ (ரலி)
4. அபூ ஹுரைரா (ரலி)
5. உதுமான் பின் அஃப்பான் (ரலி)
6. அப்துல்லா பின் அம்ர் பின் ஆஸ் (ரலி)
7. அப்துல்லா பின் ஜுபைர் (ரலி)
8. அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி)
9. ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி)
10. ஸல்மான் ஃபார்ஸி (ரலி)
11. ஜாபிர் பின் அப்துல்லா (ரலி)
12. முஆத் பின் ஜபல் (ரலி)
13. அபுபக்கர் சித்தீக் (ரலி)
14. தல்ஹா பின் உபைதுல்லா (ரலி)
15. ஸுபைர் பின் அவ்வாம் (ரலி)
16. அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி)
17. இம்ரான் பின் ஹுஸைன் (ரலி)
18. உபாதா பின் ஸாமித் (ரலி)
19. முஆவியா பின் அபீ சுஃப்யான் (ரலி)

மொழித்துறையிலும் அன்னையவர்கள் சிறந்து விளங்கினார்கள். அவருக்கு நிகராக இருந்தவர்கள் மிகச் சிலரே. அவர்கள் பேசும் பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளைக் கொண்டே பேசுவார்கள்,

அவர்களது கருத்துக்கள் தெளிவான உச்சரிப்புடன் வெளிப்படும். இன்னும் அவர்களது எழுத்துக்களும், நல்ல மொழிநடையைக் கொண்டதாக இருக்கும்.

அன்னையவர்கள் தனது 84 ஆம் வயதில் ஹிஜ்ரி 62 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். நேர்வழி பெற்ற கலீபாக்களின் ஆட்சியை கண்டு களிக்கும் நற்பேறு பெற்றவர்களாக இருந்தார்கள். அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஸ் (ரலி) அவர்கள் அன்னையவர்களில் முதலாவது மரணமடைந்தவர்கள் என்றால், அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அன்னையர்களிலேயே இறுதியாக மரணமடைந்தார்கள். யஸீத் பின் முஆவியா அவர்களது ஆட்சியின் பொழுது தான் அன்னையவர்கள் மரணமடைந்தார்கள். அவர்களது உடல் ஜன்னத்துல் பக்கீயில் மற்ற தோழர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

(... அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன் பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ உன் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான். (89:27-30)

## அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஸ் (ரலி)

ஒருநாள் இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களிடம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்,

உங்களில் நீண்ட கரங்களைக் கொண்டரான ஒருவரான அவர் தான் (நான் மரணமடைந்த பின்) மறுமையில் என்னைச் சந்திக்கக் கூடிய முதலாமவராக இருப்பார்.

அன்னையர்களிலேயே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்த பின் மரணமடைந்தவர்களில் முதலாமவராக மரணமடைந்தார்கள், இன்னும் சொர்க்கத்தின் விருந்தினராகவும் ஆனார்கள்.

அன்னையவர்கள் அதிகமதிகம் தான தர்மங்கள் வழங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவரிடம் இருந்த இந்த கொடைத்தன்மையை வைத்துத் தான் அவரை, நீண்ட கைகளை உடையவர்கள் என்று குறிப்பிடப்படுகின்றார்.

### அன்னையவர்களின் பிறப்பு

அன்னையவர்கள் உமைமா பின்த் அப்துல் முத்தலிப் பின் ஹாஷிம் அவர்களின் மகளாவார்கள். இவர் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தந்தை வழி மாமியின் மகளுமாவார்கள். அன்னையவர்கள் தனிப்பெரும் தளபதியான அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்களின் தங்கையுமாவார்கள். அன்னையவர்களின் இன்னுமொரு சகோதரர் அபூ அஹ்மத் (ரலி) இஸ்லாத்தைப் பற்றி தனது பாடல்களில் வடித்து மக்களுக்கு எழுச்சியூட்டி வந்த கவிஞருமாவார்கள். ஹம்னா பின்த் ஜஹ்ஸ் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபித்தோழியருமாவார்கள். அன்னையவர்களின் தந்தை வழிச் சிறிய தகப்பனாரான ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள் இறைவழியில் உயர்துறந்த உயிர்த்தியாகிகளின் தலைவராவார். இன்னுமொரு சிறிய தந்தையான அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள் தனது தானத்தின் மூலம் இஸ்லாமிய ஆரம்ப நாட்களில் இஸ்லாமிய வளர்ச்சிக்கு

குறிப்பிடத்தக்க பங்காற்றியவரும் ஆவார்கள். ஸபிய்யா பின்த் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள், அன்னையவர்களின் தந்தை வழி மாமியுமாவார்கள்.

தான தர்மங்கள், தேவையுள்ளவர்களுக்கு இரங்குதல், தொழுகையில் தனிப்பட்ட அற்பணிப்புடன் தொழுதல் ஆகியவற்றில் தனிச்சிறப்புடன் விளங்கிய அன்னையவர்கள், முதன் முதலில் நபித்தோழரும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வளர்ப்பு மகனுமான ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள்.

இஸ்லாத்திற்கு முந்தைய வழக்கமான, வளர்ப்பு மகனை தனக்குப் பிறந்த மகனைப் போல உரிமை கொண்டாடும் வழக்கத்தை ஒழிப்பதற்காக, இறைவனது கட்டளையின் பேரில் ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்களால் மணவிலக்குச் செய்யப்பட்ட ஜைனப் (ரலி) அவர்களை, அதாவது தனது வளர்ப்பு மகனுக்கு முதலில் வாழ்க்கைப்பட்டு மணவிலக்குச் செய்யப்பட்டவரான ஜைனப் பின் ஜஹ்ல் (ரலி) அவர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மணமுடித்துக் கொண்டார்கள். அன்னையவர்களைத் திருமணமுடித்துக் கொண்டதன் பின் வழங்கப்பட்ட வலிமா (மண விருந்தின்) பொழுது தான், ஹிஜாப் குறித்த இறைவசனத்தை இறைவன் இறக்கியருளினான்.

அன்னையவர்கள் இயற்கையிலேயே இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகளில் அற்பணிப்புடன் செய்து வரக் கூடியவர்களாகத் திகழ்ந்தார்கள், அதன் காரணமாக அவர்களது அதிகமான நேரங்களை தொழுகையிலும், நோன்பு வைப்பதிலும் கழித்து வந்தார்கள். அன்னையவர்கள் இறந்ததன் பின்பு, அவர்கள் குடியிருந்த வீட்டை வலீத் பின் முகீரா அவர்கள் நாற்பது ஆயிரம் திர்ஹம்களுக்கு விலைக்கு வாங்கி, அதனை இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலோடு இணைத்து விட்டார்கள். அன்னையவர்களைப் பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களிடம் கூறியதாவது, அன்னையவர்கள் இறையச்சம் அதிகமுள்ளவரும், விருந்தோம்பல் மிக்கவரும், இன்னும் நாணமிக்கவரும் ஆவார்கள் என்று கூறியுள்ளார்கள். அன்னையவர்கள் ஏழைக்கு இரங்கும் மனம் படைத்தவர்களாக இரந்த காரணத்தால், அன்னையவர்கள் இறந்த செய்தியைக் கேட்டு, மதீனாவில் இருந்த அத்தனை ஏழைகளும் கண்ணீர் வடித்தார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்ததன் பின்பு, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவிமார்களில் முதன்முதலாக மரணமடைந்து, அதன் மூலம் இறைத்தூதர் (ஸல்) அவர்களை சொர்க்கச் சோலையில் முதன்முதலாகச் சந்திக்கும் பாக்கியம் பெற்றவராகவும் ஆனார்கள்.

அன்னையவர்கள் ஹிஜ்ரத்திற்கு 30 வருடங்களுக்கு முன்னர் பிறந்தார்கள். இவரது சகோதரரான அப்துல் பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்களின் அழைப்பின் பேரில், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அழகிய, புத்திக் கூர்மையுள்ள, இரக்க சுவாபமுள்ள என்று எண்ணற்ற பண்புகளை பெற்றவராக அன்னையவர்கள் திகழ்ந்தார்கள்.

இஸ்லாத்தின் வெளிச்சப் புள்ளிகள் மக்காவை சுற்றிலும் ஒளி வீச ஆயத்தமான பொழுது, அதனால் வெகுண்டெழுந்த விட்டில் பூச்சிகள், முஸ்லிம்களின் மீது சொல்லொண்ணாக் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்ட பொழுது, பலர் அவர்களது அந்தக் கொடுமைகளைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. சிலர் நெருப்புப் படுக்கையில் படுக்க வைக்கப்பட்டனர், சிலர் சுடுமணலில் கிடத்தப்பட்டு வெற்று மேனியுடன் தெருவெங்கும் இழுத்துச் செல்லப்பட்டனர். இன்னும் சிலரை வைக்கோல் கொண்டு சுற்றப்பட்டு அதில் நெருப்பை மூட்டி விட்டு, அதில் எழுகின்ற புகையை சுவாசிப்பதன் மூலம் அவர்களுக்கு மூச்சுத் திணறலை உண்டு பண்ணப்பட்டது. அல்லாஹ் ஒருவன் தான் என்று கூறிய காரணத்திற்கு தினம் தினம் விதவிதமான கொடுமைகளை முஸ்லிம்கள் மீது அரங்கேற்றம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. அந்தக் குறைஷிகளின் முற்று முழு நோக்கமும்,

முஸ்லிம்கள் தங்கள் இறைநம்பிக்கையைக் கைவிட்டு விட்டு, தங்களது பழைய மார்க்கத்திற்குத் திரும்ப வேண்டும் என்பதே அவர்களது பிரதான நோக்கமாக இருந்தது. ஆரம்ப கால மக்கா வாழ்க்கை என்பது முஸ்லிம்களுக்கு சொல்லொண்ணா கொடுமைகள் நிறைந்ததாக இருந்தது. இந்தக் கொடுமைகளை எல்லாம் சகித்துக் கொண்டு பொறுமையாக இருக்கும்படியும், தைரியமாக இருந்து வரும்படியும் தனது தோழர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆறுதல் வழங்கினார்கள். இன்னும் இறுதியில் குறைஷியர்களின் கொடுமைகள் உச்ச நிலையை அடைந்த பொழுது, தனது தோழர்களை நாடு விட்டு நாடு துறந்து செல்லும்படிப் பணித்தார்கள். முதலில் அபீசீனியாவிற்கும் பின்பு மதீனாவிற்கும் செல்லும்படி அறிவுறுத்தினார்கள்.

அவ்வாறு நாடு துறந்து சென்றவர்களில் ஜஹ்ஸ் குடும்பத்தவர்களும் ஆவார்கள். ஜஹ்ஸ் குடும்பத்தினர் அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்களின் தலைமையில் ஹிஜ்ரத் செய்தனர். அவ்வாறு புறப்பட்டவர்களில் தனது நாவன்மையால் மிகச் சிறந்த பாடகர் என்று புகழ் பெற்ற குருடரான அஹ்மது பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்களும் ஆவார்கள்.

அவர் தனது பாடலில் குறைஷிகள் இழைத்த கொடுமைகள் பற்றியும், ஹிஜ்ரத் செய்வதன் காரணம் பற்றியும், இன்னும் முஸ்லிம்களின் துணிவு பற்றியும் தனது பாடலில் விவரித்துப் பாடினார். இன்றும் அந்தப் பாடல் அரபுக் கவிதை வரிசையில் மிகவும் இலக்கியத்தரமான பாடலாகப் போற்றப்படுகின்றது.

அவ்வாறு ஹிஜ்ரத் சென்ற குழுவில், முஹம்மது பின் அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி), ஸைனப் பின்த் ஜஹ்ஸ் (ரலி), ஹம்னாஹ் பின்த் ஜஹ்ஸ் (ரலி) (இவர் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் மனைவியாவார்), மற்றும் உம்மு ஹபீபா பின் ஜஹ்ஸ் (ரலி) (இவர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் மனைவியாவார்) ஆகியோர்கள் இருந்தனர்.

ஜஹ்ஸ் குடும்பத்தவர்களில் அனைவரும் ஹிஜ்ரத் செய்து சென்ற பின் அவர்களின் வீடுகள் ஆள் அரவமற்ற வீடுகளாக மாறின. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட குறைஷிகளின் தலைவராக இருந்த அபூசுஃப்யான் அவர்கள் அதனை ஆக்கிரமித்துக் கொண்டார். எந்த வீடு ஓரிறைவனைத் தொழுது பிரார்த்திக்கப் பயன்படுத்தப்பட்டு வந்ததோ, அந்த வீடு இப்பொழுது சிலை வணங்கியின் கைகளுக்கு மாறியிருந்தது.

மக்கா வெற்றியினை அடுத்து, தனது வீட்டை பல தெய்வ வணக்க வழிபாடு நடத்துபவரின் கைகளுக்கு மாறி விட்டதைக் குறித்து கவலைப்பட்ட அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்கள், இதனை இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். தனது ஆருயிர்த் தோழரின் கவலை தோய்ந்த முகத்தை உற்று நோக்கிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ்வே..! இந்த வீட்டை விட மிகச் சிறந்த வீடு ஒன்றை அந்த சுவனச் சோலைகளில் பெற்றுக் கொள்ள நீங்கள் ஆசைப்பட மாட்டீர்களா? என்று கேட்டார்கள்.

நிச்சயமாக..! யா.. ரசூலுல்லாஹ்..! அல்லாஹ்வின் தூதரவர்களே..! என்று பதிலுரைத்தார்கள் அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி) அவர்கள். இந்த வீட்டைக் காட்டிலும் சுவனத்தின் வீடு மிகச் சிறந்தது என்று கூறினார்கள். பின்பு அவருக்கு ஆறுதல் வழங்குமுகமாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், இதனை விடச் சிறந்த வீடொன்றை அந்த சுவனத்தில் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள் என்று கூறினார்கள்.

இப்பொழுது மதீனாவின் வாழ்க்கை மிகவும் அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. மக்காவிலிருந்து சென்ற முஹாஜிர்களுக்கும், மதீனாவில் வாழ்ந்த அன்ஸார்களுக்கும் இடையே மிகச் சிறந்த சகோதரப் பாசம் உருவாகி, இஸ்லாமிய சகோதரத்துவ சங்கமமாக மதீனா திகழ்ந்தது. அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மக்களாக காணப்பட்டார்கள். அவர்களில் எவரும் அடிமையும் இல்லை,

எஜமானரும் இல்லை. அவர்களில் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் பணக்காரராக இருந்தாலும், ஆனால் அவர்கள் அனைவரும் இறையச்சமிக்கவர்களாகவும், நல்ல குணநலன்கள் மற்றும் ஒழுக்கமிக்கவர்களாகவுமே திகழ்ந்தார்கள்.

இந்த முன்மாதிரிமிக்க சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒருவரான, தனது மைத்துணியான ஸைனப் (ரலி) அவர்களுக்கு, தனது வளர்ப்பு மகனும் மற்றும் தன்னிடம் அடிமையாயிருந்து பின்னர் உரிமை விடப்பட்டவருமான ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்களுக்கு மண முடித்து வைக்க நிச்சயம் செய்யத் தீர்மானிக்கின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த முடிவைக் கேள்விப்பட்ட ஸைனப் (ரலி) அவர்கள் செய்வதறியாது திகைத்துப் போய் விடுகின்றார்கள். இன்னும் தான் ஒரு கண்ணியமான குடும்பத்திலிருந்து வந்த பெண், இன்னும் அடிமையாயிருந்து பின் உரிமை விடப்பட்ட ஒருவரைத் தன்னால் மணந்து கொள்ள இயலாது என்பதையும் தெரிவிக்கின்றார்கள். இருவரும் மண முடித்துக் கொண்டால், இருவரது வாழ்வும் அமைதியாகக் கழியுமா என்பதிலேயே அவருக்கு சந்தேகமும் ஏற்பட்டது. ஆனால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், இதனை நான் முடிவு செய்து விட்டேன், அதற்கு ஸைனபே நீங்கள் சம்மதித்துத் தான் ஆக வேண்டும் என்று கூறி விடுகின்றார்கள். இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குத் தனது சம்மதத்தைத் தெரிவிக்கு முன்பாகவே, அவர்களுக்கு இறைவனால் கீழ்க்கண்ட வசனம் இறக்கியருளப்படுகின்றது :

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்மான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள். (33:36)

இருவருக்கும் அதன் பின்னால் திருமணம் முடித்து வைக்கப்படுகின்றது, இருவரும் வெவ்வேறு சூழ்நிலைப் பின்னணியில் வளர்ந்தவர்கள் என்பதால், அவர்களால் இணைந்து சந்தோஷமாக வாழ இயலாமல் இருந்தது. இன்னும் அவர்களது வாழ்வில் அமைதி என்பது இல்லாமலேயே இருந்தது.

இருவருக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் எழுந்த காரணத்தினால், அவர்களது உறவில் விரிசல்கள் அதிகமாக விழ ஆரம்பித்தன. இன்னும் ஒரு ஆண் தனது மனைவியிடம் என்னென்ன மரியாதைகளை எதிர்ப்பார்ப்பானோ, அத்தகைய மரியாதைகள் எதனையும் ஸைனப் (ரலி) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள இயலவில்லை. மிகவும் மனம் நொந்த நிலையில் ஒருநாள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்ற ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்கள், இந்தத் திருமணத்தின் மூலமாக தான் மிகவும் வேதனையடைந்திருப்பதாகவும், என்னைப் போலவே ஸைனப் (ரலி) அவர்களும் இருப்பதாகவும் கூறுகின்றார்கள். இவருக்கான அறிவுரை அவரைப் படைத்த இறைவனிடமிருந்தே வந்தது, இறைவன் தனது தூதர் (ஸல்) அவர்களுக்கு வஹியின் மூலம் இவ்வாறு அறிவித்துக் கொடுத்தான்,

“அல்லாஹ்வுக்குப் பயந்து நீர் உம் மனைவியை (விவாக விலக்குச் செய்து விடாமல்) உம்மிடமே நிறுத்தி வைத்துக் கொள்ளும்” (33:37)

இன்னும் பல முயற்சிகள் செய்தும், இருவரது வாழ்வும் அமைதியாகக் கழிவதற்கும் பதிலாக, அமைதியிழந்த நிலையிலேயே கழிந்தது, இறுதியாக ஸைனப் (ரலி) அவர்களை, ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்கள் மணவிலக்குச் செய்து விட்டார்கள்.

அரபுக்களிடம் ஒரு பழக்கம் ஆரம்ப காலத்திலிருந்த நிலவி வந்தது, அதன்படி ஒருவர் தனது வளர்ப்பு மகனால் மணவிலக்குச் செய்யப்பட்ட அல்லது விதவையாகி விட்ட மனைவியைத் திருமணம் செய்ய முடியாது. அது தவறான செயலாகக் கருதப்பட்டது. இந்த அறியாமைக்காலத்து மூடப்பழக்கத்திற்கு முடிவு கட்ட நினைத்த இறைவன், ஒருநாள் ஸைனப் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களால்

மணமுடிக்கப்படுவார்கள் என்ற செய்தியை ரகசியமாகத் தெரிவித்து வரும்படிப் பணிக்கின்றான். இந்த செய்தியைக் கேட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள், இது அரபுக்களின் வாழ்க்கைப் போக்கிற்கு முற்றிலும் மாற்றமானதாயிற்றே என்று அவர் மிகவும் கவலைப்படுகின்றார்கள். இவ்வாறு தனக்கும் விவாக விலக்குப் பெற்ற ஸைனப் (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடக்குமென்றால் சொன்னால், அதுவே சமூகத்தில் குழப்பத்தையும், இன்னும் அவமானத்தையும் தேடித் தந்து விடுமே என்றும், அதன் பின்விளைவு முஸ்லிம்களுக்கு மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தி விடுமே என்று பயப்படுகின்றார்கள். ஆனால் இந்த முடிவு வல்லோனாம் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட முடிவு என்பதால், அதனைச் செயல்முறைப்படுத்தும்படி அவனிடமிருந்து கட்டளையும் இப்பொழுது வழங்கப்பட்டு விடுகின்றது,

(நபியே!) எவருக்கு அல்லாஹ்வும் அருள் புரிந்து, நீரும் அவர் மீது அருள் புரிந்தீரோ, அவரிடத்தில் நீர் "அல்லாஹ்வுக்குப் பயந்து நீர் உம் மனைவியை (விவாக விலக்குச் செய்து விடாமல்) உம்மிடமே நிறுத்தி வைதுதுக் கொள்ளும்" என்று சொன்ன போது அல்லாஹ் வெளியாக்க இருந்ததை, மனிதர்களுக்குப் பயந்து நீர் உம்முடைய மனத்தில் மறைத்து வைதுதிருந்தீர் ஆனால் அல்லாஹ் அவன் தான், நீர் பயப்படுவதற்குத் தகுதியுடையவன் ஆகவே ஜைது அவளை விவாக விலக்கு செய்துவிட்ட பின்னர் நாம் அவளை உமக்கு மணம் செய்வித்தோம் ஏனென்றால் முஃமின்களால் (சுவீகரித்து) வளர்க்கப்பட்டவர்கள், தம் மனைவிமார்களை விவாகரத்துச் செய்து விட்டால், அ(வர்களை வளர்த்த)வர்கள் அப்பெண்களை மணந்து கொள்வதில் யாதொரு தடையுமிருக்கக் கூடாது என்பதற்காக (இது) நடைபெற்றே தீர வேண்டிய அல்லாஹ்வின் கட்டளையாகும். (33:37)

ஸைனப் (ரலி) அவர்கள் தனது இத்தா என்ற காத்திருப்புக் காலத்தை முடித்த பின்னர், ஸைனப் (ரலி) அவர்களை தான் மணந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்து, ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்களிடம் அதற்கான தகவலை அனுப்பி விடுகின்றார்கள். ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்கள் ஸைனப் (ரலி) அவர்களது வீட்டிற்குச் சென்ற பொழுது, ஸைனப் (ரலி) அவர்கள் மாவு அரைத்துக் கொண்டிருந்தார்கள். ஸைனப் (ரலி) அவர்களின் முதுகுப் புறத்தில் நின்று கொண்டிருந்த ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் செய்தியைத் தாங்கிய கடிதத்தை ஒப்படைக்கின்றார்கள். அந்த செய்திக்கு உடனே பதில் கூறாத ஸைனப் (ரலி) அவர்கள், தனது இறைவனிடம் இதற்கான வழிகாட்டுதலைக் கோரி, அதன் பின்னர் அதற்கான பதிலைத் தெரிவிப்பதாகக் கூறி ஸைத் பின் ஹாரிதா (ரலி) அவர்களை அனுப்பி விடுகின்றார்கள்.

அதன் பின் தனக்கு வழிகாட்டுமாறு, இறைவனிடம் முறையிடுகின்றார்கள். அவர் அதற்கான நாட்டத் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நிலையிலேயே, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு இறைவனிடமிருந்து, திருவசனம் அருளப்படுகின்றது, அதில், இருவரது திருமணத்தையும் அதற்கான சம்பிரதாயங்களையும் இறைவன் தனது வானலோகத்திலேயே தானே நடத்தி விட்டதாக அறிவிக்கின்றான். இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்ட உத்தரவை அடுத்து, திருமணத்திற்காக செய்யப்படுகின்ற அறிவிப்புகள், உற்றார், நண்பர்களுக்குத் தெரிவித்தல் போன்ற எந்த சம்பிரதாயங்களும் இன்றி, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நேரடியாக ஸைனப் (ரலி) அவர்களது இல்லத்திற்குச் செல்கின்றார்கள், ஒரு வீட்டிற்குள் நுழையும் பொழுது கடைபிடிக்க வேண்டிய எந்த சம்பிரதாயங்களையும் கடைபிடிக்காமல், ஸைனப் (ரலி) அவர்களுக்குக் கூட இது பற்றித் தெரிவிக்காமல் ஸைனப் (ரலி) அவர்களது வீட்டில் நுழைகின்றார்கள். இது குறித்து சில முக்கியக் குறிப்புகள் இங்கு நோக்கத்தக்கவை :

திருமறைக் குர்ஆனின் கட்டளையே, இந்தத் திருமணத்திற்கான பொறுப்பாளராகவும், சாட்சியமாகவும் ஆக்கப்படுள்ளது

அந்த அறியாமைக்கால நடைமுறையின் வழி வந்த அடிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மகனுக்கு, இரத்த உறவில் பிறந்த மகனைப் போன்றே கருதப்பட்டு வந்த நிலை மாற்றப்படுகின்றது, இதன் மூலம் அன்றைய அறியாமைக்காலப் பழக்கத்தில் இருந்த தகப்பனார் தனது வளர்ப்பு மகனின் விதவை அல்லது மணவிலக்குச் செய்யப்பட்ட மனைவியை மணந்து கொள்ள இயலாது என்ற நடைமுறை தடை செய்யப்படுகின்றது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவிமார்களில், தனது திருமணமானது தனது குடும்பத்தாரால் நிச்சயிக்கப்பட்டதல்ல, அது தன்னைப் படைத்த இறைவனால் நிச்சயிக்கப்பட்டு நடத்தி வைக்கப்பட்டது என்று பெருமைபட மற்ற அன்னையர்களிடம் கூறி, ஸைனப் (ரலி) அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்களாம்.

இந்த திருமணத்தைப் பற்றி நயவஞ்சர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களைக் கேலி செய்த பொழுது அதற்கு இறைவன் இவ்வாறு தனது திருமறையின் மூலமாகப் பதிலளிக்கின்றான் :

நபியின் மீது அல்லாஹ் விதியாக்கியதை அவர் நிறைவேற்றுவதில் எந்தக் குற்றமும் இல்லை இதற்கு முன் சென்று போன (நபிமா)ர்களுக்கு ஏற்பட்டிருந்த அல்லாஹ்வின் வழி இதுவேயாகும் - இன்னும் அல்லாஹ்வின் கட்டளை தீர்மானிக்கப்பட்ட விதியாகும். (இறை தூதர்களாகிய) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை எடுத்துக் கூறுவார்கள் அவர்கள் அவனுக்கே பயப்படுவார்கள் அல்லாஹ்வையன்றி வேறு யாருக்கும் அவர்கள் பயப்படமாட்டார்கள் ஆகவே, கேள்வி கணக்குக் கேட்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன். (33:38-39)

இன்னும் இதனை விட விளக்கமாக இந்த நடைமுறையின் பின்னணியைப் பற்றி விளங்க வேண்டும் என்றால், அதனைத் தொடர்ந்து வருகின்ற கீழ்க்கண்ட வசனம் அதற்கான தெளிவான பதிலைத் தரக் கூடியதாக இருக்கின்றது.

முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார் மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன். (33:40)

இதற்குப் பின்பாக இறைவன் தத்துப் பிள்ளைகளினுடைய நிலைகள் குறித்த இஸ்லாமிய சட்ட திட்டங்கள் என்னவென்பதை இங்கே விவரிக்கின்றான்,

உங்களுடைய சுவீகாரப்பிள்ளைகளை உங்களுடைய புதல்வர்களாக ஆக்கிவிட மாட்டான். இவை யாவும் உங்களுடைய வாய்களால் சொல்லும் (வெறும்) வார்த்தைகளேயாகும், அல்லாஹ் உண்மையையே கூறுகிறான் இன்னும் அவன் நேர்வழியையே காட்டுகிறான். (எனவே) நீங்கள் (எடுத்து வளர்த்த) அவர்களை அவர்களின் தந்தைய(ரின் பெய)ர் களைச் சொல்லி (இன்னாரின் பிள்ளையென) அழையுங்கள் - அதுவே அல்லாஹ்விடம் நீதமுள்ளதாகும். (33:4-5)

மேலும், இந்த திருமணத்திற்குப் பின்பு இறைவன் பெண்கள் ஹிஜாப் அணிய வேண்டியதன் அவசியம் சம்பந்தமான வசனத்தை இறக்கியருளியதோடு, இன்னும் இதற்குப் பின்பு வேறு எவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவிமார்களைத் திருமணம் செய்வது மற்ற ஆண்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது என்ற வசனத்தையும் இறக்கியருளினான். இந்த இரண்டு கட்டளைகளும் ஒரு அத்தியாயத்தில் தொடராக வழங்கப்பட்டுள்ளன. அவையாவன :

மு.:மின்களே! (உங்களுடைய நபி) உங்களை உணவு அருந்த அழைத்தாலன்றியும், அது சமையலாவதை எதிர்பார்த்தும் (முன்னதாகவே) நபியுடைய வீடுகளில் பிரவேசிக்காதீர்கள் ஆனால், நீங்கள் அழைக்கப் பட்டீர்களானால் (அங்கே) பிரவேசியுங்கள் அன்றியும் நீங்கள் உணவருந்தி விட்டால் (உடன்) கலைந்து போய் விடுங்கள் பேசசுக்களில் மனங்கொண்டவர்களாக (அங்கேயே) அமர்ந்து விடாதீர்கள் நிச்சயமாக இது நபியை நோவினை செய்வதாகும் இதனை உங்களிடம் கூற அவர் வெட்கப்படுவார் ஆனால் உண்மையைக் கூற அல்லாஹ் வெட்கப்படுவதில்லை நபியுடைய மனைவிகளிடம் ஏதாவது ஒரு பொருளை (அவசியப்பட்டுக்) கேட்டால், திரைக்கு அப்பாலிருந்தே அவர்களைக் கேளுங்கள். அதுவே உங்கள் இருதயங்களையும் அவர்கள் இருதயங்களையும் தூய்மையாக்கி வைக்கும் அல்லாஹ்வின் தூதரை நோவினை செய்வது உங்களுக்கு தகுமானதல்ல. அன்றியும் அவருடைய மனைவிகளை அவருக்குப் பின்னர் நீங்கள் மணப்பது ஒருபோதும் கூடாது. நிச்சயமாக இது அல்லாஹ்விடத்தில் மிகப்பெரும் (பாவ) காரியமாகும். (33:53)

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுவார்கள், மதிப்பிலும், அந்தஸ்திலும் எனக்கு நிகரானவர் என்று ஸைனப் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். அல்லாஹ்வின் மிக நெருக்கத்தை விரும்பக் கூடியவர்களில் இவரைப் போன்ற ஒருவரை நான் பார்த்ததில்லை என்றும் கூறியிருக்கின்றார்கள். அல்லாஹ்வின் நெருக்கம் மற்றும் திருப்பொருத்தத்தை அடைய வேண்டும் என்பதற்காகவே இறைவனுக்கு உவப்பைத் தரக் கூடிய தான தர்மங்களில் தாராளப் போக்குடையவர்களாகவும், உறவினர்களிடையே உறவை நன்முறையில் பேணக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

மதீனாவில் கெட்ட பேச்சுக்கள் மக்களிடையே அதிகமாகி விட்டன என்று ஆயிஷா (ரலி) அவர்கள் தவறான முறையில் குற்றச்சாட்டை இறைத்தூதர் (ஸல்) அவர்களது முன்னிலையில் வைத்த பொழுது, அது பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஸைனப் (ரலி) அவர்களின் கருத்தைக் கேட்டார்கள். அப்பொழுது அன்னையவர்களின் மேன்மையான குணம் வெளிப்பட்டது, அதுவே பதிலாகவும் வெளிவந்தது. அன்னையவர்கள் கூறினார்கள், இதில் நான் எனது மூக்கை நுழைக்க விரும்பவில்லை, இத்தகைய கடுமையான குற்றச்சாட்டுகளுக்குத் துணை போவதன் மூலம், எனது காதுகளையும், எனது கண்களையும், எனது நாவையும் அசுத்தப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. நிச்சயமாக ஆயிஷா (ரலி) அவர்களிடம் நற்குணங்களையும், இறைவனுக்குப் பயந்த பண்பையும் தான் நான் கண்டிருக்கின்றேன் என்று கூறினார்கள். இன்னும் அவர்களிடம் ஒற்றுமை, நேர்மை மற்றும் கண்ணியம் போன்ற நற்பண்புகளுக்கான எடுத்துக்காட்டாகவே அவர்களைக் கண்டிருக்கின்றேன். இன்னும் அவர்களிடம் நல்லனவற்றைத் தவிர, அதுவன்றி வேறு எதனையும் நான் கண்டதில்லை என்றும் கூறினார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி இப்படிக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் எனது சக்களத்தி என்ற முறையில் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, எனக்கெதிரான கருத்துக்களைப் புனைந்து கூறியிருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அந்த இக்கட்டான நேரத்தில், எனது வாழ்வில் நான் மிகக் கடுமையான சோதனைக்குட்பட்டிருந்த அந்த நாளில், முழு உலகமே முற்றிலும் எனக்கெதிராக மாறி இருந்த அந்த நாளில், எனக்கு ஆறுதல் தரக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதை நான் எனது வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாது.

ஒருநாள் அன்னையவர்கள், ஸ.:பிய்யா (ரலி) அவர்களைப் பார்த்து நீங்கள் ஒரு யூதப் பெண் தானே என்று கூறி விடுகின்றார்கள். இந்த வார்த்தை அன்னை ஸபி.:ய்யா (ரலி) அவர்களை மிகவும் காயப்படுத்தி விட்டது. அன்றிலிருந்து இருவரும் பேசிக் கொள்வதையே நிறுத்திக் கொண்டார்கள்.

தான் தவறு செய்து விட்டதை உணர்ந்து கொண்ட அன்னை ஸைனப் (ரலி) அவர்கள், தான் அவர்களை அவமதித்து விட்டதாகவும் அதற்கு வருத்தப்படுவதாகவும் கூறினார்கள். இது விஷயமாக இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் பேசி, தான் இந்த செயலுக்காக மிகவும் மன வருத்தப்படுவதாகவும், அதற்கு பாவப் பிராயச்சித்தம் தேடிக் கொண்டதாகவும் தனக்காக பரிந்து பேசும்படி ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஸைனப் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஏனென்றால், இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் நேரடியாக இது பற்றிப் பேசக் கூடிய துணிச்சல் பெற்றவராக ஆயிஷா (ரலி) அவர்கள் மட்டுமே இருந்தார்கள். எனவே, ஸைனப் (ரலி) அவர்களின் நிலையை இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைப்பதற்காக தகுந்த நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த ஆயிஷா (ரலி) அவர்கள், அதற்கான சந்தர்ப்பம் கிடைத்த பொழுது ஸைனப் (ரலி) அவர்களின் சங்கடத்தை விவரித்தார்கள். அதன் பின்பு ஸைனப்(ரலி) அவர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மன்னித்ததோடு, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கிடையே இருந்த அந்த கசப்புணர்வு மறைந்து, மீண்டும் சகஜ வாழ்வு திரும்பியது.

அன்னை ஸைனப் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்ட பொழுது, அவர்களைக் குறித்து நினைவு கூர்ந்த ஆயிஷா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், எனது மனைவிமார்களில் மிக நீண்ட கைகளை உடையவர் தான் என்னை(எனது மரணத்திற்குப் பின்) முதலில் சந்திக்கக் கூடியராக இருப்பார் என்று கூறினார்கள். மற்ற அன்னையர்களுடன் ஒப்பிடும் பொழுது, அன்னை ஸைனப் (ரலி) அவர்கள் இயற்கையாக குள்ளமாக இருந்ததோடு, குட்டையான கைகளையே கொண்டிருந்தார்கள். எனவே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு, அத்தனை அன்னையர்களும் தங்களது கைகளை மற்றவர்களது கைகளுடன் அளந்து பார்த்துக் கொண்டார்கள். ஆனால் மிக நீண்ட கை என்பது, பிறரது உதவிக்காக இரங்கும், தாராளப் போக்கு கொண்ட தான தர்மங்கள் வழங்கக் கூடியவர்கள் என்பதைத் தான் இங்கு உவமையாகக் குறிப்பிட்டு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பானது, அன்னை ஸைனப் (ரலி) அவர்கள் மரணமடைந்ததுடன் உண்மையானது. அதாவது, மற்ற அன்னையர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை அந்த சுவனச் சோலைகளில் சந்திக்க முன்பதாக அன்னை ஸைனப் (ரலி) அவர்கள் சந்திப்பார்கள் என்பதே அர்த்தமாகும்.

ஆயிஷா (ரலி) அவர்கள் மேலும் கூறுவதாவது,

ஸைனப் (ரலி) அவர்கள் தனது வேலைகளைத் தானே செய்து கொள்வார்கள், தான் பெற்றுக் கொண்டதை பிறருக்குக் கொடுத்து மகிழக் கூடிவர்களாக இருந்தார்கள். அவர்கள் இறையச்ச மிக்கவர்கள், நேர்மையானவர்கள் இன்னும் அவர்கள் சுயமாக தானே தனது வேலைகளைப் பிறரது உதவியின்றி செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்களது அனைத்துச் செயல்பாடுகளும் இறைவனது திருப்தியை நோக்கமாகக் கொண்டதாகவே இருக்கும். சில சமயங்களில் அவர்கள் தனது கட்டுப்பாட்டை இழந்து கோபம் கொள்ளக் கூடியவர்களாக இருந்தாலும், உடனேயே தனது தவறான நிலையை உணர்ந்து, வருந்துவதோடு பாவ மன்னிப்புக் கோரக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். நேர்மையான இதயத்துக்குச் சொந்தக் காரராகவும், பரிசுத்த எண்ணங் கொண்டவராகவும் இருந்தார்களே தவிர, பிறருக்குத் துன்பம் விளைவிக்கவோ, பழிவாங்கும் நடவடிக்கைகளிலோ, கெட்ட எண்ணமோ கொள்ளாதவர்களாக இருந்தார்கள்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அஸர் தொழுகைக்குப் பின் தனது மனைவிமார்களது இல்லங்களுக்குச் சென்று அவர்களது உடல் நலம், தேவைகள் குறித்து விசாரித்து வரக் கூடியதை பழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு மனைவியின் இல்லத்திலும் சம அளவு நேரத்தைக் கழிக்கக்

கூடியவர்களாக இருந்தார்கள். ஒருநாள் அன்னை ஸைனப் (ரலி) அவர்கள் தனது உறவினர் ஒருவரின் மூலமாக உயர்தரமான தேனை பெற்றுக் கொண்டார்கள். தேன் என்பது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் விருப்பமான உணவாகவும் இருந்தது. எனவே, அவ்வாறு ஸைனப் (ரலி) அவர்களின் வீட்டில் தேன் வழங்கப்படும் நாட்களில், அதன் சுவையையும், அதன் மணத்திற்காகவுமே சற்று அதிக நேரம் தங்கி விடக் கூடியவர்களாக இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஸைனப் (ரலி) அவர்களது வீட்டில் மட்டும் அதிக நேரத்தைச் செலவிடுவதன் காரணமாக, தங்களது நேரம் வந்தும் இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னிடம் வரவில்லையே என்று ஒவ்வொரு மனைவிமார்களும் அமைதியிழந்தனர். இதனால் பாதிக்கப்பட்ட மற்ற மனைவிமார்களில் ஆயிஷா (ரலி), சௌதா (ரலி) மற்றும் ஹஃப்ஸா (ரலி) ஆகியோர் ஒரு திட்டத்தைத் தயாரித்தனர். இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் தங்கும் முறை தங்களுக்கு வரும் பொழுது, இவர்கள் அனைவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாயிலிருந்து ஒருவித நாற்றம் வருவதாகச் சொல்ல வேண்டும் என்று இவர்களுக்குள் முடிவாகியது. இவ்வாறாக அனைவரும் ஒரே செய்தியைத் திரும்பத் திரும்பச் சொல்லும் பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அதனை உண்மை என நம்பி, தான் அருந்திய தேன் தான் இப்படியான துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்று நம்ப ஆரம்பித்து விடுவார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னை எப்பொழுது தூய்மையான நிலையில் வைத்துக் கொள்ளவே விரும்புவார்கள் இன்னும் அதில் அதிகக் கவனம் செலுத்தக் கூடியவர்கள் என்பதால், தேன் அருந்துவதை விட்டு விடுவார்கள் என்று தான் இந்தத் திட்டத்தை அந்த மூன்று அன்னையர்களும் தயாரித்தனர். இவர்கள் போட்டி பொறாமையின் காரணமாக இப்படியொரு திட்டத்தைத் தயாரித்தார்கள் என்பதை விட, இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் தாங்கள் கொண்டிருக்கும் அன்பின் காரணமாக அவர்கள் தங்களுடைய நேரத்தில் தங்களுடன் இருக்க விரும்பியதன் காரணமாகவே இவ்வாறு செய்தார்கள். அன்னையர்களைப் பற்றி இறைவனே மிகவும் பெருமைப்படும்படியாக, கண்ணியமானவர்களாகக் குறிப்பிட்டுக் கூறியிருப்பதைப் பாருங்கள் :

நபியின் மனைவிகளே! நீங்கள் பெண்களில் மற்றப் பெண்களைப் போலல்ல. (33:32)

அவர்கள் திட்டமிட்டமிட்டவாறே நடந்தது. தேனை விரும்பக் கூடிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இப்பொழுது, நான் இனிமேல் தேனே சாப்பிட மாட்டேன் என்று கூற ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் சாதாரண மனிதராக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இருந்து இவ்வாறு கூறியிருப்பார்கள் என்று சொன்னால் அதனால் எந்தப் பிரச்னையும் எழுப் போவதில்லை. ஆனால் இறைவனால் தடுக்கப்படாத ஒன்றை, இறைத்தூதராக இருப்பவர் எவ்வாறு தனக்குத் தடையாக்கிக் கொள்ள இயலும், அவ்வாறு தடையாக்கிக் கொள்வது அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் இது சட்டமாகி விடுமே. எனவே, அவர்கள் அவ்வாறு கூறியது சரியல்ல என்று இறைவன் தனது திருமறையின் வசனத்தின் மூலம் உணர்த்தினான் :

நபியே! உம் மனைவியரின் திருப்தியை நாடி, அல்லாஹ் உமக்கு அனுமதித்துள்ளதை ஏன் விலக்கிக் கொண்டீர்? மேலும் அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன், மிக்க கிருபையுடையவன். (66:01)

இந்த வசனம் இறக்கியருளிய பின்பு, இனிமேல் நான் தேன் சாப்பிடப் போவதில்லை என்று சத்தியமிட்டதை முறித்தார்கள், அல்லாஹ்வின் அறிவுறுத்தலை ஏற்று அதற்காக பிராயச்சித்தம் தேடிக் கொண்டார்கள்.

அன்னையவர்கள் தனது வீட்டினருகில், ஒரு சிறிய பள்ளிவாசலைக் கட்டிக் கொண்டு, அதில் இறைவணத்தில் அதிக ஈடுபடுவதில் ஈடுபட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூட சில சமயங்களில் அந்தப் பள்ளியில் தொழுதுள்ளார்கள். எந்த செய்கையையும் ஆரம்பிக்கு முன்னால்

இறைவனது வழிகாட்டிலை நாடி தொழக் கூடியவர்களாகவும், தொழுகையின் மூலம் அதற்கான வழிமுறைகளைத் தேடிக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆலோசனை வழங்கினாலும் கூட, அதற்கான வழிகாட்டுதல்களை நாட்டத் தொழுகையின் மூலமாகப் பெற்றுக் கொள்ள, தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.

இத்தகைய நற்குணங்களுக்குச் சொந்தக்காரரான அன்னையவர்கள், உமர் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தின் பொழுது, தனது 53 ம் வயதில் மரணமடைந்தார்கள். தனது இறுதிக் காலம் நெருங்கி வருவதையும், தன்னைப் படைத்தவனை விரைவில் சந்திக்க இருப்பதையும் உணர்ந்த அன்னையவர்கள், தனது கபன் துணியைத் தான் தெரிவு செய்து விட்டதாகக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். தனக்காக கபன் துணி ஒன்றை உமர் (ரலி) அவர்கள் வழங்கினார்கள் என்று சொன்னால், ஒன்றைப் பயன்படுத்திக் கொண்டு மற்றதை தானம் வழங்கி விடுமாறு கூறி விட்டார்கள். இன்னும் அதிக வெட்க உணர்வு கொண்டவர்களாக அன்னையவர்கள் இருந்த காரணத்தால், அவர்கள் இறந்த பின்பு அவர்களது உடலை கபன் துணியினால் சுற்றப்பட்ட பின்பும், அவர்களது உடலுக்கு முன்பாக திரைச் சீலை தொங்க விடப்பட்டு, பிறரது கண்பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருந்தது.

உமர் (ரலி) அவர்கள் முன்னின்று அன்னையவர்களுக்கு இறுதித் தொழுகை நடத்தினார்கள். அன்னையவர்களின் நெருங்கிய உறவினர்களான, உஸாமா பின் ஸைத் (ரலி), முஹம்மது பின் அப்துல்லா பின் ஜஹ்ஸ் (ரலி), அப்துல்லா பின் அபீ அஹ்மது பின் ஜஹ்ஸ் (ரலி) மற்றும் முஹம்மது பின் தல்ஹா பின் அப்துல்லா (ரலி) ஆகியோர் சேர்ந்து அன்னையவர்களை மண்ணறைக்குள் இறக்கி வைத்தனர். அன்னையவர்களது உடல் ஜன்னத்துல் பக்கீயில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**(ஆனால், அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்). (89:27-30)**

## அன்னை ஜுவைரிய்யா பின்த் ஹாரித் (ரலி)

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் :

ஜுவைரிய்யா (ரலி) அவர்களது குலத்தவர்கள், ஜுவைரிய்யா (ரலி) அவர்களிடமிருந்து அருட்கொடைகளைப் பெற்றுக் கொண்டதைப் போல இன்னொரு பெண்ணிடம் பெற்றுக் கொண்டதை நான் பார்த்ததே இல்லை. ஏனென்றால், ஜுவைரிய்யா (ரலி) அவர்கள் மூலமாக நூற்றுக்கணக்கான அவர்களது குலத்தவர்கள் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்றார்கள்.

ஹிஜ்ரி 5 ம் ஆண்டு, அரேபியத் தீபகற்பத்தின் பெரும்பாலான பாகங்களில் இஸ்லாத்தின் வெளிச்சம் அதிவேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. இப்பொழுது மதீனா நகரம், இஸ்லாமியத் தலைநகரமாக மாற்றம் பெற்று, விரிந்து வளர்ந்து கொண்டிருக்கும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஆளும் மையப் புள்ளியாக மாறி விட்டிருந்தது. மேலும், இஸ்லாமியப் படை நாலா பக்கங்களிலும் சென்று, இஸ்லாமிய

உந்துதல்களினால் மாற்றம் பெற்ற அவர்களது உள்ளங்கள், வெற்றியைத் தவிர வேறு எதனையும் ஆசிப்பதாக இல்லை என்ற நிலை உருவாகி விட்டிருந்தது.

இந்த நிலையில், பனூ குஸாஆ என்ற கோத்திரத்தவர்கள் இஸ்லாத்தின் மீதும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதும் பற்றுக் கொண்டிருந்தாலும், அவர்களது கிளைக் கோத்திரத்தார்களான பனூ முஸ்தலக் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டனர். பனூ முஸ்தலக் கோத்திரத்தின் தலைவனாக இருந்த ஹாரித் பின் அபீதர் என்பவன் பயங்கரமான குடிகாரனாகவும், தனது செல்வம் மற்றும் பலத்தைக் கொண்டு கர்வம் பிடித்தவனாகவும் இருந்தான். இவனது மகள் ஜூ வைரிய்யா என்ற அழகு மங்கை இஸ்லாமிய எழுச்சிக்கு சற்று முன்பு தான் பிறந்திருந்தார். அவரது தந்தையாரின் வளமும், வசதிகளும் இவரை ஒரு இளவரசியாகவே மாற்றியிருந்தது. அந்தளவு ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்ந்தார். புத்திக்கூர்மையுள்ள மற்றும் நேர்மை மிக்கவரான இவர், மொழிகளிலும், இலக்கியத்திலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். இத்தகைய குணங்கள் அரபுக்கள் மத்தியில் மிகவும் போற்றுதற்குரிய மரியாதைக்குரியனவாக இருந்தன. இத்தகைய நற்குணங்களைப் பெற்ற இவர், பனூ குஸாஆ கோத்திரத்து வாலிபரான முசாஃபா பின் ஸஃப்வான் என்பவருக்கு மணமுடித்து வைக்கப்பட்டார்கள்.

ஹாரித் பின் அபீதர் மதீனாவிற்கு எதிராகப் படைகளைத் திரட்டிக் கொண்டு வருவதாக இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குச் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. இந்த நிலையில், தனது ஆருயிர்த் தோழர்களில் ஒருவரான புரைதா பின் ஹஸீப் (ரலி) என்பவரை அழைத்து, ஹாரித் திரட்டிக் கொண்டிருக்கும் படைகளின் எண்ணிக்கை மற்றும் ஏற்பாடுகள் பற்றிய செய்திகளை அறிந்து கொண்டு வரும்படி அனுப்பி வைத்தார்கள். இதன் மூலம் போர்த்திட்டங்களைத் திறம்பட வகுத்துச் செயல்பட முடியும் என்பது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் எண்ணமாக இருந்தது. புரைதா (ரலி) அவர்கள் ஹாரித் அவர்களையும் இன்னும் அந்தக் குலத்து முக்கியஸ்தர்களையும் சந்தித்து, அதன் மூலம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்த் தயாரிப்பு ஏற்பாடுகளை உளவு பார்க்க ஆரம்பித்தார்கள்.

அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த பரபரப்புகளைக் கண்ணுற்ற புரைதா (ரலி) அவர்கள், போர்க்கான ஆயத்தங்கள் பலமாக செய்யப்பட்டுக் கொண்டிருப்பதையும், அதற்காக ஆயுதங்களைத் தயார் செய்து வைத்துக் கொண்டிருப்பதையும், கண்ணால் கண்டதோடு, இன்னும் இந்த ஏற்பாடுகள் யாவும் மதீனாவின் மீது போர் தொடுப்பதற்காகத் தான் என்பதையும் அவர்களது பேச்சின் மூலமாகவும் அறிந்து கொண்டார்.

தான் கண்டதையும், இன்னும் கேட்டதையும் அப்படியே இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சொல்லி முடித்த, புரைதா (ரலி) அவர்கள், போருக்கான ஆயத்தம் பலமாகச் செய்யப்பட்டு வருவதையும் தனது உளவு நடவடிக்கைகள் மூலமாகத் தெரிந்து கொண்டதையும் தெரிவித்தார்.

இதனைக் கேள்விப்பட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களை அழைத்து போருக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்தரவிட்டதோடு, 700 படைவீரர்கள் தயாரானார்கள். அந்த 700 படை வீரர்களுடன் புறப்பட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன், ஆயிஷா (ரலி) அவர்களும் உடன் சென்றார்கள்.

மரிசா என்ற இடம் பனூ முஸ்தலக் குலத்தவருக்கு மிகவும் முக்கியத்துவமான இடமாகும். இங்கிருந்து தான் இவர்களது குடிப்பு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்கான தண்ணீரை அவர்கள் பெற்று வந்தார்கள். இந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை முன்னரே அடைந்து கொண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அங்கிருந்து பனூ முஸ்தலக் கோத்திரத்தவருக்கு ஒரு செய்தியை அனுப்பி, அதில் இஸ்லாத்தினை ஏற்றுக் கொள்ளும்படி அறிவித்திருந்தார்கள்.

இன்னும் இந்த அறிவிப்பின்படி, இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டால் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தப் பூமியில் வழக்கம் போல அமைதியுடனும், சுபிட்சத்துடனும் நீங்கள் வாழ்ந்து வரலாம் என்றும் தெரிவித்திருந்தார்கள்.

இதனை ஏற்றுக் கொண்டு, அமைதியான வாழ்வு வாழ்வதை விட்டு, சமவெளிப்பகுதியில் வெளிப்பட்ட அந்தக் கோத்திரத்தவர்கள் போருக்கான அறிவிப்பை அறிவித்தார்கள். இந்த நிலையில், பனூ முஸ்தலக் கோத்திரத்தவர்களில் ஒருவன் எறிந்த அம்பு ஒன்று முஸ்லிம்களில் ஒருவரது மீது பட்டவுடன், போர் வெடிக்க ஆரம்பித்தது. இப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது துணைத் தளபதிகளுக்கு உத்திரவிட ஆரம்பித்தார்கள்.

தோழர்களே.., ஒவ்வொருவரும் அவரவருக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை உணர்ந்து செயல்படுங்கள், எதிரிகளுக்கு எந்தவித வாய்ப்பையும் அளிக்காதீர்கள். அவர்களை இங்கிருந்த தப்பித்து விடவும் விட்டு விடாதீர்கள் என்று உத்தரவிட்டார்கள்.

பத்து பனூ முஸ்தலக் கோத்திரத்தவர்கள் கொல்லப்பட்டார்கள், இன்னும் 700 பேர் கைதிகளாகப் பிடிபட்டார்கள். அன்னை ஜுவைரிய்யா (ரலி) அவர்களது கணவரான முசாஃபா பின் ஸஃப்வான் அவர்களும் கொல்லப்பட்டார்கள். பிடிபட்ட கைதிகளில் பெண்களும் இருந்தார்கள். முஸ்லிம்கள் இரண்டாயிரம் ஒட்டகங்களையும், ஐயாயிரம் ஆடுகளையும் கைப்பற்றினார்கள்.

வெற்றி பெற்று மதீனா திரும்பியவுடன், கைப்பற்றப்பட்ட பொருட்கள் முஸ்லிம்களுக்கிடையே பங்கு வைக்கப்பட்டன. அன்றைய நாளின் வழக்கப்படி, கைதிகளாகப் பிடிபட்ட ஆண்களும், பெண்களும் அடிமைகளாகப் பங்கு வைக்கப்பட்டார்கள். அதன்படி ஜுவைரிய்யா (ரலி) அவர்கள், புகழ்மிக்க நபித்தோழரான தாபித் பின் கைஸ் அன்ஸாரி (ரலி) அவர்களுக்கு அடிமையாகக் கொடுக்கப்பட்டார்கள். ஜுவைரிய்யா (ரலி) அவர்களின் அழகினால் அனைவரும் பிரமித்துப் போய் நின்றார்கள். அழகு மட்டுமல்ல, ஒரு உயர் குலத்தில் பிறந்து, அந்தக் குலத்தின் தலைவனின் மகளாக வாழ்ந்து வந்தவரும் ஆகையால், பார்ப்பதற்கு அழகாகவும், வனப்பு மிக்கவராகவும் இருந்தார்கள். இந்த நிலையில், தான் அடிமையாகக் கொடுக்கப்பட்டது குறித்து, ஜுவைரிய்யா அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் முறையீடு செய்தார்கள்.

நான் ஒரு குலத்தலைவனின் மகள், எனது போதாத நிலைமை மணிமுடி தலைகுப்புற விழுந்து, மணலில் புதைந்து போய் விட்டது. தாபித் பின் கைஸ் அவர்களிடம் நான் விடுதலையாவதற்காக தங்கத்தை மாற்றாகக் கொடுத்திருக்க வேண்டும், நான் அந்தத் தங்கத்தை எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்? என்று வாதிட ஆரம்பித்தார்கள். இன்னும் நான் எவ்வாறு ஒரு அடிமை வாழ்வை வாழ முடியும்? என்று அவர்கள் கேட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஜுவைரிய்யா அவர்களின் கையாலாகாத அந்த நிலையை உணர்ந்தார்கள்.

ஜுவைரிய்யா அவர்களின் நிலைமையை உணர்ந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், கேட்டார்கள்..,

உங்களது மீட்டுப் தொகையை நான் செலுத்தி விடும்பட்சத்தில், நீங்கள் சுதந்திரமான பெண்ணாகவும், இன்னும் எனது குடும்பத்தவர்களின் ஒருவளாகவும் ஆகச் சம்மதித்துக் கொள்வீர்களா? என்று கேட்டார்கள். இந்த மாதிரியானதொரு கோரிக்கையை அவர் தனது கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த கோரிக்கையை நினைத்து நெஞ்சம் மகிழ்ந்த ஜுவைரிய்யா அவர்கள், உடனே அதற்குச் சம்மதித்தார்கள். அதன் பின் அவர்கள் அடிமை என்ற நிலையிலிருந்து சுதந்திரமானவராக விடுதலை செய்யப்பட்டதோடு, இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களும் அவரை மணமுடித்துக் கொண்டார்கள்.

ஜு வைரிய்யா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தியை அறிந்த நபித்தோழர்கள், மிகவும் சந்தோஷமடைந்தவர்களாக பனூ முஸ்தலக் கோத்திரத்து அடிமைகளாக தங்களிடம் இருந்தவர்கள் அனைவரையும் விடுதலையும் செய்து விட்டார்கள். இதன் மூலம், அன்னையவர்கள் சுதந்திரமான பெண்மணியாக மட்டும் மாறவில்லை, இறைநம்பிக்கையாளர்களின் தாயாகவும் ஆனார்கள். இன்னும் அன்னையவர்களின் இந்த முடிவால் அவர்களது கோத்திரத்தவர்கள் அனைவரும் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டார்கள். இதன் மூலம் அவர்களது கோத்திரத்திரத்தாருக்கு ஒரு அருட் கொடையாகவே திகழ்ந்தார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் முதன் முதலில் ஜு வைரிய்யா (ரலி) அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் அவர்களது அழகைக் கண்டு பிரமித்துப் போனார்கள். இன்னுமொரு முறை இவ்வாறு கூறினார்கள். அவரைப் போன்றதொரு தனது குலத்தவர்களுக்கு அருட்கொடையாக வந்த ஒருவர் யார் தான் இருக்கின்றார்கள், அவரால் இறைவன் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் விடுதலையாவதற்கு அருட்கொடைகளைப் பொழிந்தான்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணமுடித்துக் கொள்ளுமுன் அன்னையவர்களின் பெயர் பரா என்றிருந்ததை, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தான் ஜு வைரிய்யா என்று மாற்றினார்கள். ஸைனப் பின்த் ஜஹ்ஸ் (ரலி), ஸைனப் பின்த் உம்மு ஸலமா (ரலி), மைமூனா பின் ஹாரித் (ரலி) ஆகியோர்களின் பெயர்களும் பரா என்றிருந்தான் இருந்தது, இவர்களது பெயர்களையும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மாற்றி விட்டார்கள்.

தனது நூலான தலால் அல் நபுவ்வா என்ற நூலில் இமாம் பைஹகி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக அன்னை ஜு வைரிய்யா அவர்கள் கண்ட கனவில், மதீனாவின் திசையிலிருந்து உதித்த சந்திரன் ஒன்று அவர்களது மடியில் இறங்குவது போலக் கனவு கண்டார்கள். இதனை அவர்கள் எவரிடமும் கூறவில்லை, அவர்களது கோத்திரத்தவர்கள் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டு, அடிமைகளாகப் பிடிபட்ட பின்னர் தான், தனது கனவு நிறைவேறக் கூடிய நிலைமை உருவாகி இருப்பதை அன்னையவர்கள் உணர்ந்தார்கள். பின் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அன்னையவர்களை விடுதலை செய்ததுடன், தானே மணமுடித்துக் கொண்டார்கள்.

சியார் ஆலம் நுபுலா என்ற தனது நூலில் இமாம் தஹபி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களை அன்னை மணமுடிக்கும் பொழுது, அன்னையவர்களுக்கு இருபது வயது தான் ஆகி இருந்தது. மேலும், அன்னயைவர்கள் மிகச் சிறந்த அழகு மங்கையாகத் திகழ்ந்தார்கள் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்கள்.

பின் சில நாட்கள் கழித்து, விடுதலை செய்யப்பட்ட பனூ முஸ்தலக் கோத்திரத்தினரும், இன்னும் அன்னையவர்களின் தந்தையார் அவர்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முன்பாகக் கொண்டு வரப்பட்டார்கள். அவர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விடுதலை செய்ததுடன், பின் அவர்கள் அனைவரும் மனமுவந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இதன் மூலம், தனது கோத்திரத்தவர்களை விடுதலை செய்வதற்குக் காரணமாக இருந்ததுடன், அவர்கள் இஸ்லாத்திற்கும் கொண்டு வந்த பெருமை அன்னையவர்களைச் சாரும்.

அதிகமான தன்னுடைய நேரங்களைத் தொழுகையில் கழித்துக் கொண்டிருக்கக் கூடியவர்களாக அன்னையவர்கள் திகழ்ந்தார்கள். ஒருமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டுக் கிளம்பும் பொழுது அன்னையவர்கள், தொழுகையில் இருந்து கொண்டிருந்தவர்கள், பின்பு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்த பொழுதும் அன்னையவர்கள் தொழுகையிலும், பிரார்த்தனையிலும்

இருந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். இதனைப் பார்த்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், நான் வீட்டை விட்டுக் கிளம்பும் பொழுதிலிருந்து நீங்கள் தொழுது கொண்டே... இருக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கான பதிலை அமைதியாகச் சமர்ப்பித்த அன்னையவர்களிடம், நீங்கள் மிகச் சிறியதொரு பிரார்த்தனை ஒன்றை நான் கற்றுத் தருகின்றேன், அதனை நீங்கள் சொல்லி வருவது காலை முழுவதும் நீங்கள் தொழுது கொண்டிருப்பதை விடச் சிறந்தது என்று கூறி விட்டு, மேலே உள்ள வாக்கியத்தைப் போன்றே உள்ளதொரு அறிவிப்பு அன்னையவர்களின் பெயரில், முஸ்லிம் மற்றும் அபூ தாவூது ஆகிய நபி மொழித் தொகுப்புகளிலும் இடம் பெற்றுள்ளது. காலையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டுக் கிளம்பியதன் பின்பு, இதனை மூன்று முறை கூறும்படி எனக்குக் கற்றுத் தந்தார்கள். இதனைக் கூறுவதன் மூலம், காலை முழுவதும் நின்று தொழுவதைக் காட்டிலும் அதிகமான நன்மைகளை இறைவன் தந்தருள்வான் என்றும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக, அந்த நபிமொழியில் அன்னையவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இப்னு ஸஅத் (ரலி) அவர்கள் பதிவு செய்திருக்கின்றதொரு அறிவிப்பில், கைபர் போரில் கைப்பற்றிய பொருட்களில், அன்னையவர்களுக்கு 80 வஸக் பேரீத்தம் பழமும், இன்னும் 20 வஸக் பார்லியையும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்ததன் பின்பு, கலீஃபாவாகப் பதவியேற்ற அபுபக்கர் (ரலி) அவர்கள், அன்னையவர்கள் அனைவருக்கும் குறிப்பிட்டதொரு தொகை ஒன்றை நிர்ணயித்து, அவர்கள் செலவினங்களுக்காகக் கொடுத்து வந்தார்கள். ஆனால் உமர் (ரலி) அவர்களது காலத்தில், மற்ற அன்னையவர்களுக்கு 12 ஆயிரம் திர்ஹம்கள் என்றும், அன்னை ஜுவைரிய்யா (ரலி) அவர்களுக்கும், அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கும் 6 ஆயிரம் திர்ஹம்கள் என்றும் பிரித்தார்கள். ஆனால் இதனை அன்னையவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். மற்றவர்கள், ஹிஜ்ரத் செய்து வந்ததன் காரணமாக இவர்களைக் காட்டிலும் இருமடங்கு அதிகப் பங்கு பெறத் தகுதியுடையவர்கள் என்று உமர் (ரலி) அவர்கள் இதற்கு விளக்கமளித்தார்கள். ஆனால், தங்களைக் காட்டிலும் மற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக அன்னையவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

இதில் தலையிட்ட ஆயிஷா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தங்களது மனைவிமார்களுக்கிடையில் எந்தவித பாரபட்சத்தையும் காட்டவில்லை என்று கூறினார்கள். ஆயிஷா (ரலி) அவர்களது விளக்கத்தை அடுத்து, உமர் (ரலி) அவர்கள் தனது முடிவை விளக்கிக் கொண்டு, எல்லோருக்கும் ஒரே மாதிரியான உதவித் தொகையை வழங்கினார்கள்.

அன்னையவர்கள் தனது 65 வது வயதில் ரபிய்யுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 50ல், முஆவியா பின் அபீ சுஃப்யான் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தின் பொழுது மரணமடைந்தார்கள். மதீனாவின் ஆட்சித் தலைவராக இருந்த மர்வான் பின் ஹகம் அவர்கள், அன்னையவர்களுக்கு இறுதித் தொழுகையை ஜன்னத்துல் பக்கீயில் வைத்து முன்னின்று நடத்தினார்கள்.

(ஆனால், அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்). (89:27-30)

வரகா பின் நவ்பல், உதுமான் பின் ஹவீரத் பின் அஸத், ஸைத் பின் அம்ர் பின் நுஃபீல் மற்றும் உபைதுல்லாஹ் பின் ஜஹ்ஸ் ஆகிய இந்த நான்கு நண்பர்களும் அரேபியா முழுவதும் கொள்ளை நோய் போல் பரவிக் கிடக்கும் சிலை வணக்கத்தைப் பற்றிக் கவலை கொள்கின்றார்கள். இன்னும் தங்களுக்குள் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் பொழுது, இந்த நோயை எவ்வாறு அரேபியாவிலிருந்து துரத்தியடிப்பது என்பது குறித்து கலந்தாலோசனை செய்யலானார்கள். இந்த கலந்தாலோசனைகளை அவர்கள் வெளிப்படையாகப் பேசவில்லை, மாறாக உலகமே துயில் கொள்ளும் நடுஇரவில் தங்களுக்குள் சந்தித்துக் கொண்டு, இது குறித்துத் திட்டமிடலானார்கள்.

இன்னும் இந்த படுபாதகத்தை ஏதுமறியாத பாமரர்கள் என்பவர்கள் செய்திருந்தாலும் பரவாயில்லை, குறைஷிகளின் மிகப் பெரும் தலைவர்கள் கூட இந்த பஞ்சமா பாதகத்தில் விழுந்து கிடக்கின்றார்களே என்பது தான் அவர்களது மிகப் பெரும் வேதனையாக இருந்தது. தங்களது கைகளாலே வடித்த இந்த கற்கலால் ஆன இந்த சிலைகளை இவர்கள் எவ்வாறு வணங்கும் தெய்வமாக தேர்ந்தெடுக்கின்றார்கள், இவைகளால் இவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும். அவர்களது சுண்டு விரலைக் கூட சுயமாக அசைப்பதற்குக் கூட சக்தியற்றவர்களாயிற்றே அவைகள்? இத்தகைய இந்த சிலைகளின் முன்பு இவர்கள் எவ்வாறு சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்க முடிகின்றது? இன்னும் பிராணிகளை அறுத்து அவைகளுக்கு எவ்வாறு தான் பலியிடுகின்றார்கள், அந்தப் பிராணிகளின் இரத்தத்தை இவைகள் சீண்டக் கூட சக்தியற்றவைகளாக இருக்கின்றனவே!

சரி..! இனி மேல் இது பற்றி நாம் கவலைப்பட்டு ஒன்றும் ஆகப் போவதில்லை. இந்தக் கொடுமையான பழக்கத்தை எவ்வாறு ஒழிப்பது என்பது பற்றி இனி நாம் ஒரு முடிவெடுத்தாக வேண்டும். இந்தக் குறைஷிகள் தங்களது நேர்வழியைத் தொலைத்து விட்டார்கள். இந்த வழியை நாமும் பின்பற்றுவது மடத்தனமானது. எனவே, நமது முன்னோரான நபி இப்றாஹீம் (அலை) அவர்களது மார்க்கத்தை இனி நாம் பின்பற்றுவது என்று முடிவு செய்தார்கள். இன்னும் இதுவே சிறந்த வழிமுறையும் கூட என்பதில் அவர்கள் மிகவும் உறுதியாக இருந்தார்கள். நமது முன்னோரான இப்றாஹீம் (அலை) அவர்கள் காட்டி விட்டுச் சென்ற நேர்வழி தான் நம்மைக் கரை சேர்க்க வல்லது, இதனைப் பின்பற்றுதவன் மூலமே இந்த கொடுமையான சிலை வணக்கத்தை நாம் முற்றாக ஒழிக்க முடியும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

இன்னும் இந்த உண்மையை அறிவதற்கு என்ன செலவானாலும் பரவாயில்லை, அதனைக் கண்டு பிடித்தே தீருவது என்ற முடிவுக்கும் வந்தார்கள். இந்த முடிவில் அவர்கள் இணக்கம் கண்டு, இப்றாஹீம் (அலை) அவர்களது மார்க்கத்தை எவ்வாறு பின்பற்றுவது என்ற ஆய்வை நோக்கி, அவர்கள் பல்வேறு திசைகளுக்கும் பிரிந்து சென்றார்கள்.

வரகா பின் நவ்பல் அவர்கள் அந்த கொடுமையான சிலைவணக்க காலத்திலும் கூட, சிலை வணக்கத்தை வெறுத்தொதுக்கியவராவார். இன்னும் அந்த சிலைகளுக்கு அறுத்துப் பலியிட்ட பிராணிகளின் மாமிசத்தைக் கூட அவர் தொடுவதில்லை. இன்னும் தௌராத்தையும், இன்ஜீலையும் மனனமிட்டும் இருந்தார்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் துணைவியார், அன்னை கதீஜா (ரலி) அவர்கள் வரகா பின் நவ்பல் - க்கு மைத்துனி உறவு முறையாவார். இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு முன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் தோன்றி, வஹீயை அருளிய பின், அதனை என்னவென்று அறியாத இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது துணைவியரான கதீஜா (ரலி) அவர்களிடம் வந்த பொழுது, கதீஜா (ரலி) அவர்கள்,

தனது துணைவரை தனது மைத்துனரான வரகா பின் நவ்பல் அவர்களிடம் தான் கூட்டிக் கொண்டு சென்று, நடந்தவற்றை விளக்கியதோடு, அப்பொழுது இது இறைத்தூதின் வெளிப்பாடு என்று முதன் முதலாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது இறைநம்பிக்கை கொண்டவர் தான் இந்த வரகா பின் நவ்பல் ஆவார்கள்.

இறைவன் இவரைத் தனது இறுதித் தூதராகத் தேர்ந்தெடுக்கின்றான் என்ற நற்செய்தியை அப்பொழுது அறிவித்தார். இன்னும் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றிய முன்னறிவிப்புகள் தௌராத்திலும், இன்ஜீலில் காணப்படுகின்றன என்றும் அவர் கூறினார். இன்னும் சத்தியத்தூதராக அவரது அந்தஸ்து உயர்த்தப்படும் அதேவேளையில், அவருக்கு எதிராக இந்த உலகமே திரண்டு நிற்கும் என்றும், அவர் வாழுகின்ற இந்த பிறந்த தேசத்தை விட்டும் அவர் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் இந்த வரகா பின் நவ்பல் முன்னறிவித்தார். இன்னும், அந்த நேரத்தில் நான் உயிர்வாழ்வேனேயாகில், நிச்சயமாக அவருக்கு நான் உதவிகரமாக இருப்பேன் என்றும் அப்பொழுது கூறினார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னை இறைத்தூதர் என்று அறிவிப்புச் செய்த காலத்தில், வரகா பின் நவ்பல் அவர்கள் உயிருடன் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களது குழுவில் இருந்த இரண்டாவது நபரான, உதுமான் பின் ஹவீரா பின் அஸத் அவர்கள், சிரியாவை நோக்கிப் பயணம் செய்தார்கள். அங்கே தங்கி, கிறிஸ்தவ மார்க்கத்தை பிரச்சாரம் செய்யலானார். இன்னும் ரோமச் சக்கரவர்த்தியான சீஸருக்கு மிகவும் நெருங்கிய நண்பராகவும் விளங்கினார். இறுதியாக, மாதா கோயிலின் பிஷப் என்ற அந்தஸ்துக்கும் அவர் உயர்த்தப்பட்டார்.

ஸைத் பின் அம்ர் பின் நஃபீல், என்ற இந்த மூன்றாவது நபர், கிறிஸ்துவத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை, யூத மதத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. சிலை வணக்கத்தை முற்றிலும் தவிர்ந்து கொண்டு வாழ்ந்தார். இன்னும் இறந்த பிராணிகளின் மாமிசத்தை உண்பதையும், இரத்தத்தையும் குடிப்பதையும் நிறுத்திக் கொண்டார். இன்னும் சிலைகளுக்கு பலியிடப்பட்ட பிராணிகளின் மாமிசத்தையும் உண்ணாத இவர், இப்றாஹீம் (அலை) அவர்களது மார்க்கத்தைப் பின்பற்றலானார். இவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இறைத்தூது வெளிப்படு முன்பே மரணமடைந்து விட்டார்.

நான்காவது நபர் உபைதுல்லாஹ் பின் ஜஹ்ஸ் அவர்கள், சத்தியம் எது அசத்தியம் எது என்று தேர்ந்தெடுப்பதில் தடுமாறிய இவர், எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்று தீர்மானித்து அதனைப் பின்பற்றக் கூடியவராக மாறினார். இவர், குறைஷிகளின் மிகச் சிறந்த குலத்தைச் சேர்ந்த கல்விகளில் தேர்ச்சி பெற்றவரும், அழகுபடைத்தவருமான, அபூ சுஃப்யான் சக்ர் பின் ஹார்ப் அவர்களின் மகளை மணமுடித்துக் கொண்டார்.

இவர் மணமுடித்துக் கொண்ட இந்த நாளில் தான், முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவின் அனைத்துச் சிலைகளையும் புறக்கணித்து விட்டு, அவை வணங்குவதற்கு அருகதையற்றவைகள் என்று அறிவிப்புச் செய்தும், படைப்புகளை வணங்குவதை விட்டு விட்டு படைத்தவன் பக்கம் வாருங்கள் என்ற அறிவிப்புச் செய்தியானது, மக்காவை உலுக்கிக் கொண்டிருந்தது. இன்னும் அந்த நேரத்தில் தன்னை இறைவனின் இறுதித் தூதர் என்று அவர் அறிவிப்புச் செய்து கொண்டிருந்த நேரம் அது. இந்தச் செய்தியைக் கேட்ட குறைஷித் தலைவர்கள் வெகுண்டெழுந்ததோடல்லாமல், குறைஷித் தலைமையே இப்பொழுது செய்தவதறியாது இருகூறாகப் பிரிந்து நின்று கொண்டிருந்தது. இவர்களில் சிலர், இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சந்தித்து, சத்தியப் பிரமாணம் ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தைத் தழுவினார்கள். இன்னும் சிலர் தங்களது முன்னோர்களது மார்க்கத்தை உறுதியாகப் பின்பற்றுவது என்று உறுதி கொண்டு, எங்கே முஹம்மது உயிருடன் இந்தப் பூமியில் வாழ்ந்து விடுவரா எங்கே பார்ப்போம் ? என்று வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருந்த நேரமும் அது. இந்தச் சூழ்நிலைகள்

முஸ்லிம்களுக்கு எதிரிகளைப் பெற்றுக் கொடுத்தன, எதிரிகளின் சொல்லொண்ணா துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டிய கட்டாய நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தான், குறைஷிகளின் அன்புப் புதல்வியான ரம்லா பின் அபூசுப்யான் அவர்கள் தனது கணவர் உபைதுல்லாஹ் எவ்வாறு சத்தியப் பாட்டையைத் தேர்ந்தெடுத்து, முஸ்லிமாகிக் கொண்டாரோ, அவ்வாறு தானும் இஸ்லாத்தை உவந்தெடுத்துக் கொண்டார். இவர் மட்டுமல்ல, இவரது இரண்டு சகோதரர்களான, அப்துல்லா பின் ஜஹ்ஸ் மற்றும் அபூ அஹ்மத் பின் ஜஹ்ஸ் மற்றும் சகோதரிகளான ஜைனப் பின் ஜஹ்ஸ் மற்றும் ஹம்னா பின்த் ஜஹ்ஸ் ஆகியோர்களும் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். இவர்களின் முன்னவரான ஜைனப் பின்த் ஜஹ்ஸ் இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணமுடித்துக் கொண்டு, இறைநம்பிக்கையாளர்களின் தாயாக மாறினார்கள்.

அபூ அஹ்மது அவர்கள் அன்றைய தினத்தில் கண்தெரியாத மற்றும் சிறந்த புலமை பெற்ற பாடகராகவும் விளங்கினார்கள். இவர் தனது புலமையின் காரணமாக, இஸ்லாத்திற்கு உத்வேகம் அளிக்கக் கூடிய பாடல்களை இயற்றிப் பாடலானார், இதன் மூலம் மிகச் சிறந்த பிரபல்யமான மனிதர்களில் ஒருவராகவும் அன்றைய காலத்தில் திகழ்ந்தவரானார். ஹம்னா (ரலி) அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மிகச் சிறந்த தோழர் ஒருவரின் மனைவியாக வாழ்ந்தார்கள். சுருங்கச் சொன்னால், இவரின் அனைத்து குடும்பத்தவர்களும் இஸ்லாத்தின் அழைப்புக்குச் செவி மடுத்ததோடு, ஓரிறைக் கொள்கையை உவந்தெடுத்துக் கொண்டார்கள்.

துரதிருஷ்டவசமாக, இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பின் அபீசினிய்யா சென்ற உபைதுல்லாஹ் அவர்கள், இஸ்லாத்தைப் புறக்கணித்து விட்டுச் சென்று விட்டவராகி விட்டார். அவர் கிறிஸ்தவராக மாறி விட்டார். குடிப்பதில் ஆரம்பித்த அவரது அபீசினிய வாழ்வு, இறைநிராகரிப்பிலேயே வாழ்வும் முடிந்தது. இருப்பினும், இவரது மனைவியாகிய ரம்லா (ரலி) அவர்கள், தொடர்ந்தும் இஸ்லாத்தின் பூரண நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வந்தார்கள். கணவனை இழந்தாலும், தனது நம்பிக்கையை இழக்காமல், முன்னைக் காட்டிலும் மிகவும் துடிப்போடு மார்க்கத்தைப் பின்பற்றக் கூடியவராக இருந்தார்கள். இந்த கால கட்டத்தில், இவர் இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களில் ஒருவராகவும் இணைந்து கொண்டார்கள். இவரது வாழ்வின் மூலம் நாம் உறுதியையும், உத்வேகத்தையும், சத்தியத்தைப் பின்பற்றுவதில் அவர்கள் காட்டிய நெறிதவறா வாழ்வையும் கண்டு பாடம் பயின்று கொள்ளலாம்.

************************************

அபூசுஃப்யான் சக்ர் பின் ஹர்ப், குறைஷியர் குலத்தின் தலைவரான இவர், பல போர்களில் குறைஷிகளின் பக்கம் கலந்து கொண்டு, முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிந்தவராவார். ரம்லா என்ற மகளைத் தவிர்த்து, யஸீத் மற்றும் முஆவியா என்ற இரண்டு மகன்களையும் அவர் பெற்றிருந்தார். இந்த இருவரும் இஸ்லாத்திற்கு சேவையாற்றிய பெருமக்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்கள். முஸ்லிம்கள் சொல்லொண்ணா துன்பங்களுக்கு ஆளாகிக் கொண்டிருந்த அந்த ஆரம்ப கால கட்டத்திலேயே, ரம்ளா அவர்கள் இஸ்லாத்தைத் தழுவி விட்டார்கள். அவரது தந்தையான அபூ சுஃப்யான் அவர்கள் குறைஷிக் குலத்தின் மிகச் செல்வாக்கு மிக்க தலைவராக இருந்தும் கூட, தனது மகள் விஷயத்தில் ஏதும் செய்யவியலாத நிலையிலேயே தான் இருந்தார். மனிதனது உளத் தேவையானது, எப்பொழுது சுதந்திரத்தையே வேண்டி நிற்கும், என்ன விலை கொடுத்தேனும் அந்த சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளத் தயாராகவே இருக்கும்.

அவ்வாறே, ரம்ளா (ரலி) அவர்கள் தான் ஏற்றுக் கொண்ட சத்திய மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு எந்த விலையையும் கொடுப்பதற்குத் தயாராக இருந்தார்கள். இன்னும் அவர், தான் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு விட்டதாக வெளிப்படையாக அறிவித்தும் கூட, அந்தக் குறைஷிகள் இவருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கும் துணிவற்றிருந்தனர். அல்லாஹ் எதனை நாடி விட்டானோ, அதனை மாற்றுவதற்கு யாருக்குத் தான் அதிகாரம் இருக்கின்றது, நிச்சயமாக அவனே யாவரையும் மிகைத்தவன், சக்திமிக்கவன், அவனே இறந்த பின்னும் கூட உயிர் கொடுத்து எழுப்பக் கூடிய சக்தி பெற்றவனாக இருக்கின்றான்.

அபூசுப்யான் எத்தனை தான் பிரயத்தனப்பட்டாலும், தனது மகளை சத்தியப் பாதையிலிருந்து மாற்றி விட முடியவில்லை.

எனவே, குறைஷிகளின் கொடுமைகள் நாளுக்குள் நாள் வளர்ந்து கொண்டு போகவும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களைப் பாதுகாப்பதற்குண்டான அவசரமான நடவடிக்கை ஒன்றை எடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள். இன்னும் அவர்களை மக்காவை விட்டும் வெளிக்கிளம்பியாக வேண்டும் என்பதை தீர்மானித்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அவ்வாறே தனது தோழர்களை அபீசீனியாவை நோக்கிப் பயணப்படுமாறு அறிவுறுத்தினார்கள். அபீசீனியா மன்னர், நீதமானவரும், நேர்மையானவரும் என்பதனால், அடைக்கலம் தேடி அங்கு செல்லுமாறு தனது தோழர்களைப் பணித்தார்கள்.

ரம்ளா பின் அபூசுப்யான் (ரலி) அவர்களும், அவரது கணவரான உபைதுல்லாஹ் அவர்களும் அபீசீனியாவிற்கு நாடு துறந்த சென்ற இரண்டாவது குழுவில் அங்கம் வகித்தார்கள். அங்கு இவர்களுக்கு ஹபீபா என்ற பெண் குழந்தை பிறந்தது. இதன் காரணமாக ரம்ளா அவர்கள், உம்மு ஹபீபா என்ற பெயரில் அழைக்கப்பட்டார்கள். உம்மு ஹபிபா (ரலி) அவர்கள் தனது நேரங்களைத் தனது மகளின் வளர்ப்பிலும், இன்னும் தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் இறைவணக்கத்திலும் ஈடுபட்டு, தனது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு வந்தார்கள்.

ஒருநாள் இரவு கனவில், தனது கணவரின் முகம் சிதைக்கப்படுவதாகக் கனவு கண்டார்கள். அந்த மாத்திரத்திலேயே பயந்து படுக்கையை விட்டு எழுந்த உம்மு ஹபீபா (ரலி), தான் கண்ட கனவைப் பற்றி தனது கணவரிடமே தெரிவிப்பதற்குப் பயந்தார்கள், தயங்கினார்கள். சில நாட்கள் கழித்து, தான் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு கிறிஸ்தவனாக வாழ்ந்ததாகவும், பின்பு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும் மனைவியான உம்மு ஹபீபா (ரலி) அவர்களிடம், உபைதுல்லாஹ் அவர்கள் கூறினார்கள். பின்பு, நாடு துறந்து அபீசீனியா வந்த நாள் முதல், தனது பழைய மதத்தைப் பற்றி மீண்டும் நினைத்துப் பார்த்த அவர், கிறிஸ்தவ நம்பிக்கை தான் வெற்றிகரமான வாழ்க்கைக்குரிய வழி என்பதைப் பற்றிய தீர்மானத்திற்கு வந்த உபைதுல்லாஹ், இஸ்லாத்தை விட்டு விட்டு மீண்டும் தனது பழைய மதமான கிறிஸ்தவத்திற்கு மதம் மாறி விடத் தீர்மானித்து, கிறிஸ்தவராக மாறியும் விட்டார். பின் அவர், தனது முடிவை தனது மனைவிக்குத் தெரிவித்ததோடு, உம்மு ஹபீபா (ரலி) அவர்களையும் கிறிஸ்தவத்திற்கு மாறி விடும் படி அறிவுத்தவும் செய்தார்.

அப்பொழுது தான், தான் கண்ட கனவின் விளக்கம் அவருக்குப் புரிய ஆரம்பித்தது. ஒளி படைத்த அவரது முகமானது, உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டதை இறைவன் தனக்கு அறிவித்திருப்பதாக உணர ஆரம்பித்தார். முஸ்லிமாக கண்ணியமிக்க நிலைக்குச் சொந்தக்காரராக இருந்த அவர், கிறிஸ்தவத்திற்கு மாறியதன் மூலம் சிறுமை படைத்தவராக மாற்றப்பட்ட நிலையையும், தான் கண்ட கனவின் உள்ளர்த்தத்தையும் உணர்ந்து கொண்டார். தனது கணவரிடம் தான் கண்ட கனவைப் பற்றியும், அதன் விளக்கத்தையும் எடுத்துரைத்தார், அதன் மூலம்

அவரது மனதில் இறைவனது அச்சம் மேலோங்கி தனது பாதையை மாற்றிக் கொள்ளக் கூடும் என்று உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அதனை அவர் செவிமடுத்துக் கொண்டதாகத் தெரியிவில்லை, அவர் பாதை மாறிப் போய்க் கொண்டே இருந்தார். அவரது முகம் மட்டுமல்ல, அவரது இதயம் கூட அழுக்கடைந்து விட்டது. உபைதுல்லாஹ் அவர்களுக்கு கொடுத்த எந்த அறிவுரையும் பயனைத் தரவில்லை, முழுக் குடிகாரராக இப்பொழுது மாறி விட்டிருந்தார். குடிக்கு அடிமையாகி விட்ட அவர், தன்னுடைய பொழுதுகளை குடிப்பதிலேயே கழித்துக் கொண்டிருந்தார். தனது கணவனின் நிலையை நினைத்து கவலை அடைந்த உம்மு ஹபீபா (ரலி) அவர்கள், தனது வருங்காலம் எவ்வாறு இருக்கும், தனது குழந்தையின் நிலை என்னவாகுமோ என்று நினைத்து கவலை கொள்ள ஆரம்பித்தார்.

தனது நிலையை தன்னைப் படைத்த இறைவனிடமே முறையிட்டார், தனக்கு உறுதியான இறைநம்பிக்கையைத் தந்தருளுமாறு பிரார்த்தித்தார். அதிகமாகக் குடித்ததின் காரணமாக சில நாட்களிலேயே உபைதுல்லாஹ் மரணித்து விட்டார். கணவனது மரணத்திற்குப் பின் சற்று ஆறுதலடைந்த உம்மு ஹபீபா (ரலி) அவர்கள், இனி தனது வாழ்க்கைப் பாதை எவ்வாறு செல்லுமோ என்பதை நினைத்து கவலைப்படலானார்கள். இப்பொழுது அவரது கவலைகளை மறப்பதற்கு இரண்டு வடிகால்கள் அவரிடம் இருந்தன, ஒன்று தனது குழந்தையின் பராமரிப்பில் கவனம் செலுத்துவது, இன்னொன்று இறைவனைத் தொழுவதிலும், அவனை நினைவு கூர்வதிலும் தனது நேரங்களைச் செலவழிப்பது. அடுத்து, மக்காவில் நடந்து கொண்டிருக்கக் கூடிய நிலைமைகள் குறித்து ஆய்வு செய்யவும் ஆரம்பித்தார். இன்னும், அவருக்கு உறுதுணையாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மகளார் ருக்கையா (ரலி) அவர்களும், அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களும், லைலா பின்த் அபீ ஹம்ஸா (ரலி) அவர்களும் இருந்ததோடு, தங்களது ஓய்வு நேரங்களில் உம்மு ஹபீபா (ரலி) அவர்களிடம் வந்து, அவர்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு, அவர்களது கவலைகளை மறக்கடிக்கச் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், இவர்கள் அனைவரும் சில நாட்களில் மக்காவிற்குத் திரும்பி விட்டார்கள், அபீசீனியாவில் இப்பொழுது முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணி விடும் அளவுக்குக் குறைந்தது, உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் ஏனைய மற்ற பெண்களுடன் நட்புடன் பழகி வந்து கொண்டிருந்தார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல முஸ்லிம்களின் நிலையும் மாறிக் கொண்டு வந்தது. மதீனாவிற்கு ஹிஜ்ரத், மற்றும் பத்ருப் போர், ஹுதைபிய்யா உடன்படிக்கை என்று இஸ்லாமிய வரலாறு பல்வேறு சம்பவங்களைப் பதிவு செய்து கொண்டே சென்று கொண்டிருந்தது. ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பின் குறைஷிகளின் பழிவாங்கும் நடவடிக்கை சற்றுக் குறைந்தது. இருப்பினும், முஸ்லிம்களில் பலர் இந்த உடன்படிக்கை மூலமாக இஸ்லாமிய வளர்ச்சியும், இஸ்லாமிய தாக்கமும் மட்டுப்படுத்தப்படுவதாக உணர்ந்தார்கள்.

ஒருநாள், உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பொழுது, யாரோ இவர்களை, ‘இறைநம்பிக்கையாளர்களின் தாயே..!’ என்று அழைப்பதாகக் கண்டார்கள். உடனே, விழித்துக் கொண்ட உம்மு ஹபீபா (ரலி) அவர்கள், முன்னைக் காட்டிலும் தன்னை உற்சாகம் பற்றிக் கொண்டிருப்பதையும், புதுவிதமான உணர்வுகள் தன்னைச் சூழ்ந்து கொண்டிருப்பதையும், ஆனந்தமான உணர்வைப் பெற்றிருப்பதையும் உணர ஆரம்பித்தார்கள். இதே கால கட்டத்தில், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து, மதீனாவில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் ஒன்றை நிறுவியும் இருந்தார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் ஒருநாள் அபீசீனியாவில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களைப் பற்றி, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முன் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது உம்மு ஹபீபா (ரலி) அவர்களைப் பற்றிய பேச்சும் எழுந்தது. அப்பொழுது, கணவர் இஸ்லாத்தை விட்டு விட்டு கிறிஸ்தவத்திற்கு மாறியதையும், அதன் பின் குடி போதையின் காரணமாக மரணமடைந்ததையும், கணவனை இழந்த கைம்பெண்ணாக, கடுமையான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலை பற்றியும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இருந்த அவையில் பேசப்பட்டது. மக்கத்துக் குறைஷிகளின் மிகப் பெரும் தலைவர்களில் ஒருவரான மகளின் நிலையை எண்ணி வருந்திய இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தனது தோழர்களில் ஒருவரான அம்ர் பின் உமையா அத்மிரி (ரலி) என்பவரை அழைத்து, அவரை அபீசீனியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அவரிடம், மன்னர் நஜ்ஜாஸி அவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பி வைத்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அதில், ‘உம்மு ஹபீபா அவர்கள் விரும்பினால் அவர்களை நான் மணந்து கொள்ளவிருப்பதாக இக் கடிதத்தில் எழுதியிருந்தார்கள்’.

மன்னர் நஜ்ஜாஸி அவர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் செய்தியைப் படித்தவுடன், தனது அடிமைப் பெண்ணான அப்ரஹாவை உம்மு ஹபீபா (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்து, அவர்களின் சம்மதத்தை கேட்டு வரும்படிக் கூறினார்கள். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் ஆனந்தப் பட்டார்கள், அவர்களையே அவர்களால் நம்ப முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்தச் செய்தியைக் கொண்டு வந்தமைக்காக, அப்ரஹாவுக்குத் தான் அணிந்திருந்த அத்தனை வெள்ளி நகைகளையும் அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்களி பரிசாக வழங்கி விட்டார்கள். இன்னும் திருமணத்திற்கான சாட்சியாக நீங்கள் ஒருவரை நியமித்துக் கொள்ள வேண்டும் என்று அப்ரஹா அப்பொழுது தெரிவித்ததை அடுத்து, தனது உறவினரும், குறைஷிக் குலத்தவருமான காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களை தன்னுடைய பொறுப்பாளாராக அன்னை அவர்கள் அறிவித்தார்கள்.

அன்றைய தினம் மாலை நேரத்தின் பொழுது, மன்னர் நஜ்ஜாஸி அவர்கள் ஜாபிர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களிடம் ஒருவரை அனுப்பி, அனைத்து முஸ்லிம்கள் மற்றும் நண்பர்களையும் தனது அரண்மனைக்கு அழைத்து வரும்படிக் கூறினார்கள். அனைத்து முஸ்லிம்களும் அரண்மனையில் ஒன்று கூடியதன் பின், மன்னர் நஜ்ஜாஸி அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்களின் திருமணத்தை அறிவிப்புச் செய்தார்கள். இறைவனைப் புகழ்ந்த பின், இறைத்தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து தனக்குச் செய்தி வந்திருப்பதாக அறிவித்த மன்னர் நஜ்ஜாஸி அவர்கள், அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்களை மணக்கச் சம்மதம் கேட்டு செய்தி வந்தபின், உம்மு ஹபீபா (ரலி) அவர்களின் சம்மதத்தைத் தான் பெற்றதாகவும், இறைத்தூதர் (ஸல் )அவர்கள் சார்பாக தான் 400 திர்ஹம்களை மணக் கொடையாக அளிப்பதாகவும் அப்பொழுது மன்னர் நஜ்ஜாஸி அவர்கள் அறிவித்தார்கள்.

உம்மு ஹபீபா (ரலி) அவர்களின் பொறுப்பாளாராக நியமிக்கப்பட்ட காலித் பின் ஸயித் (ரலி) அவர்கள், திருமண ஒப்பந்தத்தை வாசிக்க ஆரம்பித்தார்கள்,

எல்லாப் புகழும் ஏக இறையோனாகிய வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும், அவனையே நான் போற்றிப் புகழ்கின்றேன், அவனிடமே உதவியும் தேடுகின்றேன், அவனிடமே மன்னிப்பையும் வேண்டுகின்றேன். இன்னும், வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் இல்லை என்றும், இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதராகவும், அடிமையாகவும் இருக்கின்றார்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன். அவனே சத்திய மார்க்கமான இஸ்லாத்தை

அருளினான், அதன் மூலம் அசத்தியமான மார்க்கங்கள் அனைத்தையும் மிகைக்கச் செய்தான். நிராகரிப்போர்கள் வெறுத்த போதிலும் அவன் தனது சத்திய மார்க்கத்தை மேலோங்கிடச் செய்திடுவான். 'நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, உம்மு ஹபீபா பின்த் அபீ சுஃப்யான் (ரலி) அவர்களை, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கச் சம்மதிக்கின்றேன். அல்லாஹ் அவர்களுக்கு அருள்பாளிப்பானாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு இனிமையானதாக ஆக்கி வைப்பானாக..!

பின்பு மன்னர் நஜ்ஜாஸி அவர்கள் 400 திர்ஹம்களை மணக் கொடையாக காலித் பின் ஸயீத் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். திருமண வைபவம் நடந்து முடிந்ததும், வந்திருந்த முஸ்லிம்கள் அனைவரும் கலைந்து செல்ல எத்தணித்த பொழுது, மன்னர் நஜ்ஜாஸி அவர்கள் அனைவரையும் அமரச் செய்து, திருமண விருந்தளித்தார்கள்.

இறைவன் தன் மீது சொறிந்த அருட்கொடைகளையும், இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களின் வரிசையில் தன்னையும் இணைத்து வைத்து விட்டது குறித்து, அன்னையவர்கள் இறைவனுக்கு மிகவும் நன்றிப் பெருக்கோடு பிரார்த்தனை செய்தார்கள், செய்தியைக் கொண்டு வந்த அப்ரஹாவுக்கு மேலும் 50 தினார்களைப் பரிசாகவும் அளித்தார்கள்.

அல்லாஹ்வின் பேரருளால் என்னிடம் இப்பொழுது அதிகமாகவே இருக்கின்றன, நீங்கள் முன்பு செய்தி கொண்டு வந்த பொழுது இப்பொழுது என்னிடம் உள்ளது போன்ற ஆபரணங்கள் இல்லை, எனவே உங்களைச் சரியான முறையில் பரிசு கொடுத்துக் கௌரவிக்க முடியவில்லை, எனவே இந்தப் பணத்தை எனது பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள், இதன் மூலம் நல்ல உடைகளையும், நகைகளையும் செய்து அணிந்து கொள்ளுங்கள் என்று அன்னையவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அப்ராஹா அவர்கள் அன்னையவர்களுக்கு ஒரு பையைப் பரிசாக அளித்து, இதில் மன்னர் நஜ்ஜாஸி அவர்களின் மனைவியர் அனுப்பி வைத்திருக்கும், மிகவும் விலையுயர்ந்த வாசனைத் திரவியங்கள் இருப்பதாகவும், மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது மனைவியர் அனுப்பி வைத்திருப்பதாகவும் கூறினார். இன்னும், அன்னையவர்களின் தான் முன்பு பரிசாகப் பெற்றுச் சென்ற அதே நகைகளை அப்ரஹா அவர்கள் மீண்டும் கொண்டு வந்து, அன்னையவர்களுக்கே பரிசாகக் கொடுத்து விட்டு, தன்னிடம் இதைத் தவிர வேறொன்றும் இல்லை மன்னித்துக் கொள்ளவும் என்று கூறி விட்டு, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு தான் தெரிவிக்கும் இந்த செய்தியை அறிவித்து விடும்படியும் கூறினார்கள்.

அன்னையே..! நான் இஸ்லாத்தில் இணைந்து விட்டேன், ஆனால் இதனை நீங்கள் யாரிடமும் கூற வேண்டாம். இறைத்தூதர் (ஸல்) அவர்களை நீங்கள் சந்திக்கும் பொழுது மறக்காமல், எனது ஸலாத்தை அவர்களுக்குத் தெரிவித்து விடுங்கள், அதுவே இந்த ஏழைப் பெண்ணுக்கு நீங்கள் செய்யும் மிகப் பெரும் உதவியாக இருக்கட்டும் என்று அப்ரஹா அவர்கள் கண்ணீர் மல்கக் கூறி, அன்னைக்கு விடை கொடுத்து மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள்.

**********************************

அன்னையவர்கள் இப்பொழுது மதீனாவை வந்தடைந்து விட்டார்கள். அபீசீனியாவில் நடந்தவற்றையும், மன்னர் நஜ்ஜாஸி அவர்கள் திருமணத்தை எவ்வாறு நடத்தி வைத்தார்கள் என்பது பற்றியும் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் விளக்கமாக அன்னையவர்கள் தெரிவித்தார்கள். இன்னும், அந்த ஏழை அடிமைப் பெண்ணின் ஸலாத்தினையும் தெரிவித்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அப்பெண்ணுக்காக இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். இந்தச் செய்தியின் காரணமாக இறைத்தூதர்

(ஸல்) அவர்கள் மகிழ்வுற்றதோடு, மன்னர் நஜ்ஜாஸி அவர்களுக்காகவும், அந்த அடிமைப் பெண்ணுக்கும் பதில் ஸலாம் கூறியதோடு, அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை புரிந்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் தனது மகளுக்கும் திருமணம் நடந்து முடிந்து விட்டது குறித்து, எரிச்சலைடைவார் என எதிர்பார்க்கப்பட்ட இஸ்லாத்தை இன்னும் ஏற்றுக் கொள்ளாத அபூ சுஃப்யான் அவர்கள், மிகவும் சந்தோஷப்பட்டார்கள். முஹம்மது..! அவர் சங்கையான முகத்துக்குரியவர், கண்ணியத்திற்குரியவர் என்று அபூசுஃப்யான் அவர்கள் கூறினார்கள்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையை குறைஷிகள் முறித்து விட்டிருந்த அந்த நிலையில், அதனை மீண்டும் புதுப்பித்துச் செல்வதற்காக அபூசுஃப்யான் அவர்கள் மதீனாவிற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது தனது மகளையும் சென்று பார்த்து வர அவரது இல்லத்துக்குச் சென்றார். அப்பொழுது அங்கு போடப்பட்டிருந்த பாயில் அபூசுப்யான் அவர்கள் உட்கார முயன்ற பொழுது, உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் வெடுக்கென்று அந்தப் பாயை இழுத்துக் கொண்டார்கள்.

ஆச்சரிப்பட்டுப் போன அபூசுஃப்யான் அவர்கள்,

மகளே..! இந்தப் பாயை விடவும் நான் தரம் தாழ்ந்து விட்டேனா அல்லது என்னை விட இந்தப் பாய் மதிப்பு வாய்ந்ததா? என்று தனது மகளைப் பார்த்துக் கேட்டார்.

உண்மையில், இது பரிசுத்தமானவரும் இறைத்தூதருமானவரும் அமரக் கூடியது. இதில் உங்களைப் போன்ற அசுத்தமானவரும், சிலைகளை வணங்கக் கூடியவரும் அமரக் கூடியதல்ல என்று கூறினார்கள். எனவே, தான் நான் அதனை சுருட்டிக் கொண்டேன் என்று தனது தந்தையைப் பார்த்துக் கூறினார்கள்.

மகளே..! நீ என்னை விட்டுப் பிரிந்து போனதிலிருந்து பழக்க வழக்கம் என்றால் என்ன என்பதை நீ மறந்து தான் போய் விட்டாய்.. என்றார் ஆச்சரியத்தோடு..!

அதுவல்ல..! இஸ்லாம் எனக்கு நல்ல பழக்க வழக்கங்களைத் தான் கற்றுத் தந்திருக்கின்றது. இஸ்லாமியப் பண்பாடுகளானது நீங்கள் கடைபிடிக்கும் பண்பாடுகளை விட மதிப்பு வாய்ந்தது, நாகரீகமானது, அதனினும் மாறுபட்டது என்று தனது தந்தைக்குப் பதில் கூறினார்கள் அன்னையவர்கள். அசுத்தம் என்பதற்கு இஸ்லாத்தில் இன்னொரு பொருளையும் குறிக்கக் கூடியதாக இருக்கின்றது.

தனது மகள் என்ன சொல்ல வருகின்றார்கள் என்பதை அறிய இயலாத அபூசுஃப்யான் தனது மகளை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது..,

தந்தையே..! இஸ்லாமானது எனக்கு நேர்வழியைக் காண்பித்துக் கொடுத்துள்ளது. குறைஷிகளின் மிகப் பெரும் தலைவராக இருக்கின்ற எனது தந்தை இன்னும் சத்தியத்தை அறிய இயலாதவராகவும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவராகவும் இருப்பது தான் எனக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது. இந்த உலக வாழ்க்கைக்காக எனது தந்தை, குறைஷிகள் தந்திருக்கும் அந்தஸ்தின் காரணமாகத் தான் நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றீர்கள். ஆனால், இஸ்லாம் வழங்கும் கண்ணியத்தின் முன்பாக, இந்தக் குறைஷிகள் தந்திருக்கும் கௌரமும் அந்தஸ்தும் அற்பானவைகளாகும். பார்க்கவும், கேட்கவும், கேள்வி கேட்போருக்கு பதில் அளிக்க இயலாததுமான, உங்களது பிரார்த்தனைகளைச் செவிமடுக்க இயலாததுமானதொரு மரக்கட்டையை நீங்கள் எவ்வாறு தான் வணங்குகின்றீர்களோ..!

தனது மகளின் கேள்விகளால் சந்தோஷப்பட இயலாத அபூசுஃப்யான், தனது மகளைப் பார்த்து..,

காலம் காலமாக வழிவழியாக நம்முடைய முன்னோர்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் மார்க்கத்தை எவ்வாறு உதறி விட்டு வர முடியும், இது சாத்தியமானது தானா என்று கேட்டு விட்டு, தனது மகளது வீட்டை விட்டும் வெளியேறினார், அபூ சுஃப்யான் அவர்கள்.

**********************************

தனது தந்தையும், தனது சகோதரனும் இஸ்லாத்திற்குள் வந்து விட வேண்டும் என்பதே அன்னையவர்களின் விருப்பமாக இருந்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாது, நிராகரித்த நிலையில், சுவனத்தை அடையாமல் மறுமையைப் பாழாக்கி விடக் கூடாதே என்பதில் அன்னையவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள். குறைஷிகளின் ஏனைய தலைவர்களான, அபூ ஜஹ்ல், வலீத் பின் முகீரா, ஆஸ் பின் வாயில், உத்பா பின் ராபிஆ மற்றும் ஷைபா பின் ராபிஆ போன்றவர்கள் போல இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாது மரணமடைந்து விடக் கூடாதே என்றும் கவலைப்பட்டார்கள். மக்காவின் வெற்றியின் பொழுது தான் அபூசுப்யான் அவர்களும், முஆவியா அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பொழுது, அன்னையவர்கள் அளவில்லாத ஆனந்தமடைந்தார்கள். அந்த சமயத்தில், கீழ்க்கண்ட இறைவசனம் இறக்கியருளப்பட்டது.

உங்களுக்கும், அவர்களில் நின்றும் நீங்கள் விரோதித்திருக்கின்றீர்களே அவர்களுக்குமிடையே அல்லாஹ் பிரியத்தை உண்டாக்கி விடக்கூடும் மேலும், அல்லாஹ் பேராற்றலுடையவன் அல்லாஹ் மிகவும் மன்னிப்வன் மிக்க கிருபையுடையவன். (60:7)

அப்துல்லா இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

மேற்கண்ட அந்த வசனம் அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்களின் திருமணத்தின் காரணமாக இறக்கியருளப்பட்டது. அன்னையவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் திருமணம் செய்து கொண்டதன் காரணமாக, குறைஷிகளின் மிகப் பெரும் தலைவர்களாகத் திகழ்ந்த அபூசுஃப்யான், முஆவியா மற்றும் யஸீத் பின் அபூ சுஃப்யான் போன்றவர்கள் இஸ்லாத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளவும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உற்ற தோழர்களாக மாறவும் வழியை ஏற்படுத்திக் கொடுத்தது.

அபு அல் காஸிம் பின் அஸாகிர் அவர்கள் குறிப்பிடுவதாவது,

ஹஸன் (ரலி) அவர்கள் கூறினார்கள், ஒருமுறை முஆவியா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சந்திக்கச் சென்ற பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்மு ஹபீபா (ரலி) அவர்களுக்கு அருகில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது முஆவியா (ரலி) அவர்கள் திரும்ப எத்தணித்த வேளையில், முஆவியா (ரலி) அவர்களை அழைத்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தன்னுடன் வந்தமருமாறு கேட்டுக் கொண்டார்கள்.

அப்பொழுது, இதனைப் போலவே நாம் மூன்று பேரும் அந்த சுவனச் சோலையில் ஒன்றாக அமர்ந்து, பரிசுத்தமான அந்த சுவனத்துப் பானங்களை அருந்துவதை ஆசைப்படுகின்றேன் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த ஆசையின் மூலமாக, அந்த மூன்று பேரும் இறைவனது நாட்டப்படி சுவனத்தை அனந்தரங் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இன்னும், சுவனத்தை அனந்தரங் கொள்ளக் கூடிய பெண்மணிகள் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு மனைவியாகவும் வாய்ப்பார்கள் என்ற இறைவனின் கட்டளையின்படி, சொர்க்கத்திற்கு நன்மாரயங் கூறப்பட்டவர்களில் அன்னையவர்களும் ஒருவராவார் என்பது புலனாகின்றது.

**********************************

கல்வி ஞானத்தில் சிறந்த விளங்கியதன் காரணமாக, நபிமொழிகளை அறிவித்திருக்கும் அன்னையவர்களின் வரிசையில் அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கின்றார்கள். அன்னையவர்களில் முதலாவது இடத்தை அன்னை ஆயிஷா (ரலி) அவர்களும், இரண்டாவது இடத்தை அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்களும், மூன்றாவது இடத்தை அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்களும் நிரப்புகின்றார்கள். அன்னையவர்கள் 65 நபிமொழிகளை அறிவித்திருக்கின்றார்கள். இவர்களது நபிமொழிகளை முஆவியா (ரலி), அப்துல்லா பின் உத்பா பின் அபீசு∴ப்யான் (ரலி), உர்வா பின் சுபைர் (ரலி), சாலிம் பின் ஷவால் பின் மக்கி (ரலி) அவர்கள், அபூ அல் ஜர்ரா குர்ஸி (ரலி) போன்றவர்கள் அன்னையவர்களை மேற்கோள் காட்டி அறிவித்திருக்கின்றார்கள். இன்னும் பெண்களில், ஸைனப் பின் உம்மு ஸலமா மக்சூமிய்யா (ரலி) மற்றும் ஸ∴பிய்யா பின்த் ஷைபா அப்தரிய்யா (ரலி) போன்றவர்களும் மேற்கோள்காட்டியுள்ளார்கள்.

ஸஹீஹ் புகாரியில் அன்னையை மேற்கோள் காட்டி, அன்னையவர்கள் தனது தந்தை இறந்த செய்தி கேட்ட மூன்றாவது நாள் கழித்து, அன்னையவர்கள் வாசனைத் திரவியங்களை பூசிக் கொண்டார்கள். அப்பொழுது, இந்த நாளில் நான் வாசனைத் திரவியத்தைப் பூசிக் கொள்ளத் தேவையில்லை எனினும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்,

'அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசங் கொண்டிருக்கின்ற எந்தப் பெண்ணுக்கும், கணவன் இறந்தாலே தவிர, மற்றவர்கள் இறந்ததற்காக மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் அனுஷ்டிப்பதற்கு அனுமதியில்லை. (அவளது கணவன் இறந்து விட்டால்) அவள் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் துக்கம் அனுஷ்டிக்கட்டும்'.

மிஸ்வாக் செய்வது (பல்துலக்குவது) குறித்து, அன்னையவர்கள் கூறியதாக அபுல் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் அறிவித்திருக்கும் நபிமொழி ஒன்று, முஸ்னத் அபூ ய∴லா வில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னையவர்கள் கூறுகின்றார்கள் :

எனது உம்மத்தவர்களுக்கு சிரமமில்லாதிருக்குமென்றால், ஒளுச் செய்யும் பொழுது எவ்வாறு பல்துலக்குவார்களோ அவ்வாறே, ஒவ்வொரு தொழுகைக்கும் முன்பதாக பல்துலக்கும்படி கூறுவதை நான் விரும்பியிருப்பேன்.

இன்னும் பல நபிமொழித் தொகுப்புகளில் அன்னையவர்கள் அறிவிப்புச் செய்திருக்கும் இன்னொரு நபிமொழியில்,

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னையவர்கள் அறிவிக்கின்றார்கள் :

எவரொருவர் பர்ளான (கடமையான) லுஹர் தொழுகைக்கு முன்பும் பின்பும், நான்கு சுன்னத்தான தொழுகைகளைத் தொழுகின்றாரோ, அவருக்கு அல்லாஹ் நரக நெருப்பை ஹராமாக்கி விடுகின்றான், (நரக நெருப்பிலிருந்தும் அவரைப் பாதுகாத்து விடுகின்றான்).

உதுமான் (ரலி) அவர்களது வீட்டைக் கொலையாளிகள் முற்றுகையிட்டு, பின் அவர்களைக் கொலை செய்த செய்தியைக் கேள்விப்பட்ட அன்னையவர்கள், கடுமையான கவலைக்குள்ளானார்கள். அப்பொழுது,

இறைவா..! கொலையாளியின் கைகளை துண்டிப்பாயாக, பொதுமக்களின் முன்பாக அவரை அசிங்கப்படுத்துவாயாக..! என்று பிரார்த்தித்தார்கள்.

இறைவன் அன்னையவர்களின் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான்.

உதுமான் (ரலி) அவர்களைக் கொலை செய்த நபரின் வீட்டிற்குள் நுழைந்த ஒரு மனிதர், அந்தக் கொலையாளியை வாள் கொண்டு தாக்க முயற்சி செய்த பொழுது, அதனைத் தனது வலது கரத்தால் தடுக்க முயன்ற அந்தக் கொலையாளியின் வலது கரம் துண்டிக்கப்பட்டது. பின்பு தாக்கிய நபரிடமிருந்து தப்பிக்க முயன்ற அந்த மனிதர் தனது ஆடையை தனது வாயால் கவ்விக் கொண்டு தெருவில் ஓடிய பொழுது, அவரது வாயில் கவ்வியிருந்த அவரது கீழாடை நழுவி கீழே விழுந்து விட்டது, மீண்டும் அதனை எடுத்து அணிய இயலாத நிலையில், பொதுமக்கள் மத்தியில் நிர்வாணமாக நின்று கொண்டிருந்தார்.

முஆவியா (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தின் காலத்தின் பொழுது அன்னையவர்கள், டமாஸ்கஸ் நகருக்குச் சென்று வந்தார்கள். இன்னும் முஆவியா (ரலி) அவர்களின் ஆட்சியின் பொழுது ஹிஜ்ரி 44 ல் மதீனாவில் மரணமடைந்தார்கள். மரணமடைவதற்கு முன்பதாக, ஆயிஷா (ரலி) மற்றும் உம்மு ஸலமா (ரலி) ஆகியோர்களுக்குத் தகவல் தெரிவித்து, கருத்துவேறுபாடுகள் மற்றும் நமக்குள் எழுந்த பிரச்னைகள் காரணமாக நான் உங்களிருவரில் யாருக்காவது பாவம் செய்திருக்கும்பட்சத்தில் தன்னை மன்னித்து விடும்படி கோரினார்கள். அன்னையவர்களின் இந்தச் செயல் இருவரையும் மிகவும் பாதித்து விட்டது.

(அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்). (89:28-30)

## மைமூனா பின்த் ஹாரித் அல் ஹிலாலிய்யா (ரலி)

### குடும்பப் பின்னணி

அபூஹுரைரா (ரலி) மற்றும் அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) ஆகியோர்கள் கூறுகின்றார்கள், அன்னையவர்களின் இயற் பெயர் பரா என்றிருந்ததை, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மைமூனா என்று மாற்றினார்கள்.

இவரது தந்தை ஹாரித் பின் ஹஸன் பனூ ஹலால் என்னும் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். இவரது தாயாரின் பெயர் ஹிந்த பின்த் அவ்ஃப் என்பதாகும். இவருக்கு உம்மு அல் பழ்ள் லபாபா குப்ரா, லபாபா ஸஹ்ரா, அஸ்மா மற்றும் உஸ்ஸா ஆகிய சகோதரிகளும் இருந்தார்கள்.

உம்முல் பழ்ள் லபாபா குப்ரா என்ற சகோதரி பிரபலமான நபித்தோழரான அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள். இவர், கதீஜா (ரலி) அவர்களுக்குப் பிறகு, இஸ்லாத்தைத் தழுவிய இரண்டாவது பெண்மணி என்ற கௌரவத்தைப் பெற்றுக் கொண்டவராவார்.

லபாபா ஸஹ்ரா வலீத் பின் முகீரா அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள், இவரது மகனான காலித் பின் வலீத் (ரலி) அவர்களால் இஸ்லாமிய சரித்திரம் போற்றும் மாபெரும் வீரராகவும், போர்ப்படைத் தளபதியாகவும் திகழ்ந்வராவார்.

அஸ்மா பின்த் ஹாரித் அவர்கள் உபை இப்னு கலப் க்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள். இன்னும் உஸ்ஸா அவர்கள் ஸைத் பின் அப்துல்லா பின் மாலிக் என்பவருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள். இன்னும் தாயாரின் வழியாக, அஸ்மா பின் உமைஸ், ஸலமா பின் உமைஸ், ஸலாமா பின்த் உமைஸ் ஆகியோர்கள் சகோதரி உறவு முறைகளுக்குரியவராவார்கள்.

அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் முதலில் ஜாபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள். இவரின் மூலமாக மூன்று மகன்களைப் பெற்றுக் கொண்டார்கள், அவர்களாவன : அப்துல்லா, அவ்ன், முஹம்மத் ஆகியோர்களாவார்கள். ஜாபிர் பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் உயிர்த்தியாகியாக ஆனதன் பின் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களை மணந்து கொண்டார்கள். அபுபக்கர் (ரலி) அவர்களை மணந்து கொண்டதன் பின், முஹம்மது பின் அபூபக்கர் என்ற மகவைப் பெற்றுக் கொண்டார்கள். அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் மரணமடைந்ததன் பின்னாள், அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களை மணந்து கொண்டு, யஹ்யா என்ற மகவைப் பெற்றெடுத்தார்கள். ஸலமா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் ஹமஸா பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களை மணந்து கொண்டார்கள். அன்னையவர்களின் மூன்றாவது சகோதரி ஸலாமா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் அப்துல்லா பின் கஃப் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்கள்.

எனவே, இதன் மூலம் அன்னையவர்களின் தாயாரான, ஹிந்த் பின் அவ்ஃப் அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மாமியார் என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்லாது, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் முதல் கலீஃபாவாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களுக்கும், ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களுக்கும், அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களுக்கும், ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களுக்கும், அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களுக்கும் மாமியாராக ஆன மாபெரும் நற்பேற்றுக்குரியவராகத் திகழ்ந்தார்கள்.

இன்னும், இவருடைய பேரர்களுள் ஒருவரான அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி), அவர்கள் இஸ்லாமிய போர்ப்படை வரலாற்றில் மிகப் பெரும் போர்வீரராகத் திகழ்ந்த நற்பேற்றுக்குரியவராகத் திகழ்ந்தார்கள். இவர் இறைவசனங்களுக்கு விரிவுரை வழங்குவதில் தனிச்சிறப்பு மிக்கவராகத் திகழ்ந்ததோடு, நபிமொழிகளில் நல்ல ஞானம் உள்ளதோடு, ஃபிக்ஹு - இஸ்லாமியச் சட்டக்கலையிலும் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்கள். இன்னுமொரு பேரரான லபாபா ஸு ஹ்றா வினுடைய மகனுமான இஸ்லாமியப் போர்ப்படைத் தளபதிகளுள் தனிச்சிறப்பு மிக்கவராகத் திகழ்ந்தவருமான காலித் பின் வலீத் (ரலி) அவர்களும், இவருக்கு பேரர் முறையாகும்.

எனவே, அன்னை மைமூனா (ரலி) அவர்கள் மிகச் சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்டதோடு, இஸ்லாமிய உயிர்த்தியாகிகளையும், போர் வீரர்களையும், அறிஞர் பெருமக்களையும் கொண்டதொரு பாரம்பர்யத்தில் உதித்தவருமாவார்.

அன்னையவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணமுடிக்கு முன்பாக, மசூத் பின் அம்ர் பின் உமைர் தகஃபீ என்பவரை மணந்திருந்தார்கள், இருவருக்குமிடையே ஏற்பட்ட மணப் பொறுத்தமின்னை காரணமாக விரைவிலேயே அவர்களது மணவாழ்வு முடிவுக்கு வந்தது. அதன் பின் இரண்டாவது கணவராக, அப்துர் ரஹ்ம் பின் அப்துல் உஸ்ஸா ஆம்ரி குரைஷி என்பவரை மணந்து கொண்டார்கள். திருமணமான சில நாட்களிலேயே இவர் இறந்ததன் பின், இளமையிலேயே விதவையான சோகத்துக்கு ஆளானார்கள் மைமூனா அவர்கள்.

ஹிஜ்ரி 7 ம் வருடம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் மக்காவிற்கு உம்ரா செய்யும் நிமித்தமாகச் சென்றார்கள். அப்பொழுது மைமூனா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை

மணந்து கொள்ள விருப்பம் தெரிவித்தன் பின்னாள், உடனே இருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, திருமணமும் நடந்தேறியது. இதன் மூலம் கண்ணியமிக்க இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்களுள் ஒருவராக அன்னை மைமூனா (ரலி) அவர்கள் இணைந்து கொண்டார்கள்.

இந்தத் திருமண பந்தத்தின் மூலமாக, பனூ ஹிலால் கோத்திரமும் - பனூ தீம், பனூ அதீ, பனூ உமைய்யா, பனூ மக்சூம், பனூ அஸத் மற்றும் பனூ முஸ்தலக் கோத்திரத்தார்கள் திருமண பந்தத்தின் மூலமாக இணைந்து கொண்டது போல இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொள்வார்கள் என்று கருதினார்கள். இவரது சகோதரிகளுள் ஒருவரான லபாபா குப்ரா அவர்கள் அப்பாஸ் (ரலி) அவர்களைத் திருமணம் செய்திருப்பதால், மைத்துனரும் இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு சிறிய தந்தையுமான அப்பாஸ் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்று, மைமூனா அவர்களை மணந்து கொள்ளும்படிக் கோரும் போது மறுக்க மாட்டார்கள் தானே என்று நினைத்தார்கள், அவர்கள் நினைத்தது போலவே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மைமூனா (ரலி) அவர்களின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டு, மணமுடித்துக் கொள்ள சம்மதம் தெரிவித்தார்கள்.

அப்பாஸ் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் பேசி விட்ட பின், ஜஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களிடம் கூறி, திருமண ஏற்பாட்டைக் கவனிக்கும்படிக் கோரப்பட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்ரா வை நிறைவு செய்து விட்டு ஓய்வாக இருந்து கொண்டிருக்கும் பொழுது, மைமூனா (ரலி) அவர்கள் ஒட்டகத்தில் வந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே, தன்னையும் அறியாமல், “இந்த ஒட்டகமும், இந்த ஒட்டகத்தை ஓட்டி வருபவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு அற்பணமாகட்டும்” என்று சந்தோஷத்தில் கூறி விட்டார்கள். எனவே, இதன் மூலம் தன்னையே அன்பளிப்பாக இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு, அற்பணித்துக் கொண்டவர்கள் தான் அன்னை மைமூனா (ரலி) அவர்கள். மைமூனா (ரலி) அவர்களின் கோரிக்கைக்கு இணங்க இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அன்னையவர்களை மணமுடித்துக் கொண்டார்கள்.

ஆனால், மிகவும் பிரபலமான நபிமொழி ஒன்று இந்தச் சம்பவத்தை இப்படியும் விவரிக்கின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்ராவை நிறைவு செய்து விட்டபின், மைமூனா (ரலி) அவர்களை மணமுடிக்க விரும்புவதாகவும், அதற்கான சம்மத்தை அவரிடம் பெற்று வரும்படி ஜஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்களை மைமூனா (ரலி) அவர்களிடம் அனுப்பி வைக்கின்றார் இறைத்தூதர் (ஸல்) அவர்கள். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட மைமூனா (ரலி) அவர்கள், இந்த விவகாரத்திற்குப் பொறுப்பேற்று நிறைவேற்றி வைக்கும்படி, தனது மச்சானான அப்பாஸ் (ரலி) அவர்களை மைமூனா (ரலி) அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்ராவை நிறைவு செய்து விட்டபின், திருமண ஏற்பாடுகளைச் செய்கின்றார்கள் அப்பாஸ் (ரலி) அவர்கள்.

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகின்றான் :

நபியே! எவர்களுக்கு நீர் அவர்களுடைய மஹரை கொடுத்து விட்டீரோ அந்த உம்முடைய மனைவியரையும், உமக்கு (ப் போரில் எளிதாக) அல்லாஹ் அளித்துள்ளவர்களில் உம் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும், நாம் உமக்கு ஹலாலாக்கி இருக்கின்றோம் அன்றியும் உம் தந்தையரின் சகோதரர்களின் மகள்களையும், உம் தந்தையரின் சகோதரிகள் மகள்களையும், உம் மாமன் மார்களின் மகள்களையும், உம் தாயின் சகோதரிமாரின் மகள்களையும் - இவர்களில் யார் உம்முடன் ஹிஜ்ரத் செய்து வந்தார்களோ அவர்களை (நாம் உமக்கு விவாகத்திற்கு ஹலாலாக்கினோம்) அன்றியும் முஃமினான ஒரு பெண் நபிக்குத் தன்னை அர்ப்பணித்து, நபியும் அவளை மணந்து கொள்ள விரும்பினால் அவளையும் (மணக்க நாம் உம்மை அனுமதிக்கின்றோம்) இது மற்ற

மு∴மின்களுக்கன்றி உமக்கே (நாம் இத்தகு உரிமையளித்தோம் மற்ற மு∴மினகளைப் பொறுத்தவரை) அவர்களுக்கு அவர்களுடைய மனவைிமார்களையும், அவர்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும் பற்றி நாம் கடமையாக்கியுள்ளதை நன்கறிவோம் உமக்கு ஏதும் நிர்ப்பந்தங்கள் ஏற்படாதிருக்கும் பொருட்டே (விதி விலக்களித்தோம்) மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன் மிக்க அன்புடையவன்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்ராவை நிறைவு செய்து விட்டபின், மக்காவில் மூன்று நாட்கள் தங்கி இருந்தார்கள். அப்பொழுது, நான்காவது நாள் அதிகாலையில் ஹாதிப் பின் அப்துல் உஸ்ஸா என்பவரும், அவருடன் சில இறைநிராகரிப்பாளர்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, 'நாம் செய்து கொண்ட ஹு தைபிய்யா உடன்படிக்கையின் பிரகாரம், உங்களது உம்ராவை நிறைவேற்றிய பின் நீங்கள் இங்கிருந்து கிளம்பி விட வேண்டும், அதன்படி நீங்கள் உடனே இங்கிருந்து கிளம்புங்கள்' என்று கூறினார்கள்.

இன்னும் சில நாட்கள் தங்கியிருந்து விட்டு கிளம்பி விடுவதாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள், இன்னும் தனது திருமண விருந்தில் கலந்து கொள்ளும்படியும் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

எங்களுக்கு, இந்த விருந்தில் கலந்து கொள்ளும் ஆர்வம் எங்களுக்கு இல்லை, நீங்கள் இங்கிருந்து கிளம்பி விடுவதொன்றையே நாங்கள் விரும்புகின்றோம் என்று அந்தக் குறைஷிகள் கூறினார்கள்.

இதற்குப் பின் அங்கிருக்க விரும்பாத இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அங்கிருந்து கிளம்பி, மக்காவை விட்டும் ஒன்பது மைல் தொலைவில் உள்ள ஸர∴ப் என்ற இடத்தில் கூடாரம் அடித்துக் கொண்டு, அங்கேயே தனது திருமண விருந்தை நடத்தினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அடிமையான அபூ ர∴பி அவர்கள் ஒட்டகத்தில் வைத்து மைமூனா (ரலி) அவர்களை அழைத்து வந்தார்கள். இங்கு வைத்துத் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், பரா என்ற பெயரை மாற்றி மைமூனா என்ற பெயரைச் சூட்டினார்கள். இருவரும் உம்ரா வை நிறைவு செய்வதற்கான அனைத்து விதிகளையும் நிறைவுசெய்து விட்ட பின், உம்ராவைக் களைந்து அதன் பின் தான் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இஸ்லாமிய சட்ட விதிகளின்படி திருமணம் நடந்தேறியது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மைமூனா (ரலி) அவர்களைத் தான் இறுதியாக மணந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்பொழுது அன்னைக்கு 26 வயது தான் ஆகி இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவை அடைந்தவுடன், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலுக்கு அருகே ஒரு அன்னையவர்களுக்காக கட்டப்பட்டு, அங்கே அன்னையவர்கள் குடியமர்த்தப்பட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மற்ற மனைவியர்கள், அன்னையவர்களை அன்புடன் வரவேற்றார்கள்.

அன்னையவர்கள், தனது தொழுகையை இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பள்ளியில் வைத்து நிறைவு செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். ஏனெனில், மக்கா ஹரம் பள்ளியைத் தவிர்த்து, ஏனைய பள்ளிகளில் தொழுவதைக் காட்டிலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பள்ளியில் தொழுவது ஆயிரம் மடங்கு சிறந்தது என்ற காரணத்தினால், அவ்வாறு செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

மக்காவில் உள்ள ஹரத்தில் ஒரு முறை தொழுவதானது மற்ற பள்ளிகளில் தொழுவதைக் காட்டிலும், ஒரு லட்சம் மடங்கு சிறப்பானது.

ஒரு வருடத்தில் பல குழுக்கள் மதீனாவிற்கு வந்திருந்தன. அவ்வாறு வந்த குழுக்களில் பனூ ஹிலால் கோத்திரத்தவரும் வந்திருந்தனர். அந்தக் கோத்திரத்தாருடன் அன்னையவர்களின் சகோதரியின் மகனான ஸியாத் பின் அப்துல்லா பின் மாலிக் ஆம்ரீ அவர்களும் வந்திருந்தார்கள். இவர், இறைத்தூதர்

(ஸல்) அவர்கள் வேலை நிமித்தமாக வெளியே சென்றிருக்கும் நேரத்தில் தனது சிற்றன்னையான மைமூனா (ரலி) அவர்களைச் சந்திக்குமுகமாக வீட்டிற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது தனது வீட்டிற்குத் திரும்பி வந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், மைமூனா (ரலி) அவர்களுக்கு அருகில் முன்பின் தனக்குத் தெரியாத நபர் ஒருவர் உட்கார்ந்திருப்பதையும், மைமூனா (ரலி) அவர்கள் அதனைக் கண்டு கொள்ளாமல் இருந்து கொண்டிருப்பதையும் பார்த்து நின்றார்கள். அப்பொழுது, அன்னை மைமூனா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, இவர் எனது சகோதரியின் மகன், உங்களைச் சந்திக்க வந்த குழுவினருடன் வந்திருக்கின்றார் என்று அறிமுகப்படுத்தினார்கள். மிகவும் சந்தோஷமடைந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அவருக்காக இறைவனிடம் பிரார்த்தனையும் செய்தார்கள்.

மைமூனா (ரலி) அவர்கள் இறையச்சம் மிக்க பெண்மணியாகத் திகழ்ந்ததோடு, நற்பழக்க வழக்கங்கள் மற்றும் பண்பாடுகளைக் கொண்டவர்களாகவும் திகழ்ந்ததோடு, உறவுகளைப் பேணக் கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள். அன்னையவர்கள் இறந்த பொழுது, இதனையே புகழாரமாக அன்னையவர்களுக்கு அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் சூட்டினார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் :

“இறைவன் மீது சத்தியமாக..! மைமூனா (ரலி) அவர்கள் இறந்து விட்டார்கள், இறையச்சமிக்கவர்களில் ஒருவராக அவர் இருந்தார், இன்னும் இரத்த உறவு முறைகளைப் பேணியவராகவும் அவர் இருந்தார்”, என்று கூறினார்கள்.

மைமூனா (ரலி) அவர்கள் மிகச் சிறந்த ஞாபக சக்தியைப் பெற்றிருந்த காரணத்தால், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபிமொழிகளை நன்கு மனனமிட்டிருந்தார்கள். நபிமொழிகளில், ஆயிஷா (ரலி) அவர்களின் பெயரால் அறிவிக்கப்பட்டவை 2200 நபிமொழிகளாகும். இவருக்கு அடுத்தபடியாக, உம்மு ஸலமா (ரலி) அவர்கள் 378 நபிமொழிகளையும், இவருக்கு அடுத்தபடியாக அன்னையவர்கள் 76 நபிமொழிகளையும் அறிவித்திருக்கின்ற நற்பேறு பெற்றவர்களாவார்கள்.

அப்துல்லா இப்னு அப்பாஸ் (ரலி), அப்துல்லா பின் ஷத்தாத் (ரலி), ஒபைத் பின் ஸபக் (ரலி), யஸீத் பின் அஸம் (ரலி), அப்துர் ரஹ்மான் ஸாயிப் அல் ஹிலாலீ (ரலி), உபைதுல்லா கௌலானி (ரலி), சுலைமான் பின் யாஸர் (ரலி) மற்றும் அதா பின் யாஸர் (ரலி) ஆகியோர் அன்னையவர்களை மேற்கோள் காட்டி நபிமொழிகளை அறிவித்துள்ளார்கள்.

ஸஹீஹ் புகாரீ நபிமொழித் தொகுப்பில் அன்னையின் மூலமாக, அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஒரு நபிமொழியில்,

ஒருவர் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கேட்டார், இறைத்தூதர் (ஸல்) அவர்களே..! வெண்ணெயக் கட்டியில் எலி விழுந்து விட்டால் என்ன செய்வது என்பது குறித்துக் கேட்டார். அதற்கு, எலியையும், அது விழுந்த இடத்தைச் சுற்றிலும் உள்ள பகுதியில் உள்ளவற்றை எறிந்து விட்டு, மீதி உள்ளவற்றை உண்ணுங்கள்” என்று கூறினார்கள்.

முஸ்னத் அபூ யஃலா, முஸ்லிம், அபூதாவூத் மற்றும் நஸயீ ல் அன்னையின் பெயரைக் கொண்டு, ஒரு நபிமொழி பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதனை அறிவிப்பவர், அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) அவர்களின் மனைவியாவார்.

ஒருநாள் காலையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டார்கள், அதே போன்றே மாலையிலும் காணப்பட்டார்கள். மறுநாளும் அவர்கள் கவலை தோய்ந்த முகத்துடனே காணப்பட்டார்கள். அப்பொழுது, உங்களைக் கவலைப்படச் செய்தது

என்னவென்று மைமூனா (ரலி) அவர்கள் வினவினார்கள். அதற்கு, வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னை வந்து சந்திப்பதாக வாக்குறுதி அளித்து விட்டுச் சென்றார்கள், அவர்கள் வருவதாகக் கூறிச் சென்ற நேரம் கடந்தும் இன்னும் வரவில்லை. இவ்வாறு என்றுமே நிகழ்ந்ததில்லை என்று கூறினார்கள். பின்பு, படுக்கைக்குக் கீழாக நாய்க் குட்டி ஒன்று படுத்திருப்பது தெரிந்தது. அதனை விரட்டி விட்டு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நின்று கொண்டிருந்த திசையின் பக்கமாக, அது படுத்துக் கிடந்த இடத்தை தண்ணீரைக் கொண்டு கழுவியும் விடப்பட்டது. இதன் பின் உடனே ஜிப்ரீல் (அலை) அவர்கள் வருகை தந்து விட்டார்கள். பின், ஜிப்ரீல் (அலை) அவர்களிடம், தாங்கள் கூறிச் சென்ற நேரத்திற்கு வராததன் காரணமென்னவென்றும், இது போல் எப்பொழுதும் நிகழ்ந்ததல்லவே..! என்றும் விசாரித்தார்கள். அதற்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள், "நாயும், உருவப்படங்களும் எங்கே இருக்கின்றனவோ அங்கு வானவர்கள் நுழைய மாட்டார்கள்" என்று பதிலளித்தார்கள்.

மைமூனா (ரலி) அவர்கள் கடன் வாங்கும் பழக்கத்தைக் கொண்டவர்களாக இருந்தார்கள். ஒரு முறை அவரது குடும்பத்தவர்களில் ஒருவர், இந்தப் பழக்கம் குறித்து அவரிடம் வினவிய பொழுது, அதற்கு பதில் சொல்லாமல் இருக்கவில்லை, மாறாக, இவ்வாறு பதில் கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"ஒரு முஸ்லிம் கடன் வாங்கி, அதனை அடைப்பதற்கு அல்லாஹ் நிச்சயமாக உதவுவான் என்று முழுமையாக நம்பிக்கை கொண்டானெனில், அல்லாஹ் நிச்சயமாக (அந்தக் கடனை அடைப்பதற்கு) எதிர்பாராத விதத்தில் இருந்து ஏற்பாடு செய்து தருவான்".

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நோய் முற்றி இறுதி நிலைக்குத் தள்ளப்பட்ட அந்தக் கணத்தில், மைமூனா (ரலி) அவர்களது வீட்டில் இருந்தார்கள். பின்பு, தனது அனைத்து மனைவிமார்களையும் அழைத்து, தான் தனது இறுதி வாழ்வை ஆயிஷா (ரலி) அவர்களது இல்லத்தில் கழிக்க விரும்புவதாகக் கோரினார்கள். அனைவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களை அன்னாரது மனைவிமார்கள் முழுமையாகத் திருப்தி கொண்ட நிலையிலேயே ஆயிஷா (ரலி) அவர்களின் இல்லத்தில் அவர்களது மடியில் படுத்திருக்கும் நிலையிலேயே மரணத்தையும் தழுவினார்கள். அவர்களது பாசத்திற்குரிய மனைவியான ஆயிஷா (ரலி) அவர்களின் இல்லத்திலேயே இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறந்த அந்த நேர்த்தில், அவர்களது ஒன்பது மனைவிமார்கள் உயிருடன் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களாவான :

ஆயிஷா (ரலி), மைமூனா (ரலி), ஷஃபிய்யா (ரலி), ஜு வைரிய்யா (ரலி), சௌதா (ரலி), ஸைனப் (ரலி), ரம்ளா (ரலி), ஹிந்த் (ரலி) மற்றும் ஹஃப்ஸா (ரலி) ஆகியோர்களாவார்கள்.

ஹிஜ்ரி 51 ஆம் வருடம் முஆவியா (ரலி) அவர்கள் ஆட்சியாளராக இருந்து கொண்டிருந்த நேரத்தில் அன்னை மைமூனா (ரலி) அவர்கள் மரணமடைந்தார்கள். மக்காவில் வைத்து அன்னையவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். அந்த இடத்தில் அவர்களது மனது நிலை கொள்ளாமல், எதையோ நினைத்து தவித்துக் கொண்டிருந்தது. அன்னையவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை மணமுடித்த இடமான மக்காவின் புறவெளிப்பகுதியான சராஃப் க்கு அன்னையவர்களை அன்னையவர்களது உறவினர்கள், எடுத்துச் சென்றார்கள். எந்த இடத்தில் தனது திருமண இரவை இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் கழித்தார்களோ, அந்த இடத்தை அடைந்தவுடன் அன்னையவர்களது உயிர் பிரிந்தது.

அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் தலைமையேற்க அன்னையவர்களுக்கு, இறுதி (ஜனாஸா) தொழுகை நிறைவேற்றப்பட்டு, கண்ணியமான முறையில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(ஆனால், அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவன்) உன்மீது திருப்தியடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும், நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக (என்று இறைவன் கூறுவான்). (89:30)

குறிப்பு :

இத் தொடருடன், "இறைநம்பிக்கையாளர்களின் தாய்மார்கள்" - தொடர் இனிதே நிறைவு பெற்றது. எல்லாப் புகழும் இறைவனுக்கே..!